| 12 | பொருத்துக | எசேக்கியா - அத்திப்பழ அடை / நிகுஸ்தான் | 2008,2012,2010,2014 | 4 |
| 12 | சுருக்கமான விடையளி | வியாதிப்பட்டிருந்த எசேக்கியா ராஜாவினிடத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசி ஏசாயா சொன்னது என்ன? அவன் கர்த்தரை நோக்கி செய்த விண்ணப்பம் என்ன? எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக சொன்னது என்ன? (அ) **எசேக்கியா குணமக்கப்படுவதற்கான அடையாளம் குறித்து அவனுக்கும் ஏசாயாவுக்குமிடையே நடந்த சம்பாஷணையை எழுது** . (அ) **எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு எதுவாயிருந்தபோது கர்த்தரிடத்தில் பண்ணின விண்ணப்பத்திற்கு ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் அவர் அவனுக்குக் கொடுத்த பதில் என்ன** ? | ,2013,2010,2009 | 3 |
| 12 | யார் யாரிடம் கூறியது | சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்பவேண்டும். | ,2015,2014 | 2 |
| 12 | யார் யாரிடம் கூறியது | "சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போக வேண்டுமோ, பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டுமோ". | 2010,2013 | 2 |
| 12 | பொருத்துக | அத்திப்பழ அடை - பிளவை | 2016,2014 | 2 |
| 12 | யார் யாரிடம் கூறியது | "சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போகிறது லேசான காரியம் " | 2015 | 1 |
| 12 | நிரப்புக | எசேக்கியாவின் ஆயுசோடு கர்த்தர் ________ வருடங்களை கூட்டிக் கொடுத்தார். | 2016 | 1 |
| 12 | யார் யாரிடம் கூறியது | “நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும் நீர் பிழைக்க மாட்டீர்” | ,2016 | 1 |
| 12 | நிரப்புக | ______________ தன் முகத்தைச் சுவர்புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். (அ) _____ திர்க்கதரிசி கர்த்தருடைய தூதை __________ அறிவித்தபோது அவன் தன் முகத்தை சுவர்புரமாக திருப்பிக்கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். | 2017 | 1 |
| 13 | யார் யாரிடம் கூறியது | “இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன”. | ,2016,2013,2009,2017 | 4 |
| 13 | யார் யாரிடம் கூறியது | “நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள்.” | ,2014,2012,2008 | 3 |
| 13 | நிரப்புக | பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்து ________________ என்னும் மாயவித்தைக்காரன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். (அ) சமாரியாவில் மாயவித்தைக்காரனாயிருந்த __________ விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். | ,2015,2009,2017 | 3 |
| 13 | பொருத்துக | பிலிப்பு - ஆசோத் / சமாரியா | 2015,2009 | 2 |
| 13 | பொருத்துக | பந்திவிசாரணை - பிலிப்பு | 2010,2016 | 2 |
| 13 | பொருத்துக | ஆசோத் - பிலிப்பு | 2017,2015 | 2 |
| 13 | பொருத்துக | சீமோன் - மாயவித்தைக்காரன | 2010,2012 | 2 |
| 13 | நிரப்புக | பந்திவிசாரணைக்கென்று சபையாரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஏழு பேரில் ஒருவராயிருந்த ________ தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய _________ குமாரத்திகள் இருந்தார்கள். | 2014 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | யார் யாரிடம் கூறியது | “நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா”. | ,2015 | 1 |
| 14 | பொருத்துக | கமாலியேல் - சவுல் | 2013,2010,2012 | 3 |
| 14 | யார் யாரிடம் கூறியது | “சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?. ” | ,2012,2010 | 2 |
| 14 | யார் யாரிடம் கூறியது | “நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்” | 2008 | 1 |
| 14 | நிரப்புக | ________________கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தான். | ,2015 | 1 |
| 14 | சுருக்கமான விடையளி | கர்த்தர் எவ்வாறு சவுலை பவுலாக மாற்றினார்? (அல்லது) கர்த்தர் எவ்வாறு சவுலை அவன் அழிக்கத் தேடின விசுவாசத்தை பிரசங்கிக்கிறவனாக மாற்றினார்? (அல்லது) தமஸ்குவிற்குப் போகும் வழியில் சவுல் கண்ட தரிசனத்தைப் பற்றி எழுது. (**அ**) தமஸ்குவிற்குப் போகும் வழியில் சவுல் கண்ட தரிசனத்தை பற்றியும் அவன் கர்த்தரோடு சம்பாஷித்ததையும் குறித்து எழுது. | 2017 | 1 |
| 14 | பொருத்துக | அனனியா - தமஸ்கு. | 2009 | 1 |
| 14 | யார் யாரிடம் கூறியது | "நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும்" | 2014 | 1 |
| 14 | யார் யாரிடம் கூறியது | " அவன் இப்போழுது ஜெபம்பண்ணுகிறான்" | 2015 | 1 |
| 14 | பொருத்துக | சவுல் - கமாலியேல். | 2010 | 1 |
| 14 | நிரப்புக | சவுல் சிலிசியா நாட்டிலுள்ள ________ பட்டணத்தில் பிறந்து __________ பாதத்தருகே வளர்ந்தான். | 2015 | 1 |
| 14 | சுருக்கமான விடையளி | சவுலைக் குறித்து அனனியா கர்த்தரிடம் கூறியது என்ன ? அதற்கு அவர் கொடுத்த பதில் என்ன ? | 2013 | 1 |
| 14 | நிரப்புக | _________ முன்னோர்களுடைய வேதபிரமாணத்தின்படி திட்டமாய்ப் போதிக்கப்பட்ட யூதனாயிருந்தான். | 2008 | 1 |
| 15 | பொருத்துக | தபீத்தாள் - தொர்காள் / சீஷி / யோப்பா / கனம் பொருந்திய ஸ்திரி | 2014,2017,2016,2009,2012 | 5 |
| 15 | பொருத்துக | ஐனேயா - லித்தா / திமிர்வாதம் | 2010,2012,2008,2014,2013 | 5 |
| 15 | யார் யாரிடம் கூறியது | “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை” | ,2016,2014,2010,2009 | 4 |
| 15 | யார் யாரிடம் கூறியது | "நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட " | 2010,2013,2017 | 3 |
| 15 | நிரப்புக | யோப்பா பட்டணத்திலிருந்த ________ என்னும் சீஷி மரித்துப்போனால் __________ அவளை உயிரோடெழுப்பினார் | 2010,2013 | 2 |
| 15 | யார் யாரிடம் கூறியது | ....“என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்”. | ,2016,2009 | 2 |
| 15 | நிரப்புக | ________________ என்னும் ஊரிலே எட்டு வருஷமாய் ஐனேயா என்னும் பேருள்ள ஒருவன் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்தான். (அ) பேதுரு _________ என்னும் ஊரிலே எட்டு வருஷமாய் திமிர்வாதமுள்ளவனாயிருந்த ________ சுகமாக்கினார். | ,2016,2017 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | சுருக்கமான விடையளி | பேதுரு தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே உட்கார்ந்திருந்த சப்பாணியை எவ்வாறு குணமாக்கினார்? (அ) தேவாலத்தில் வாசலிலிருந்து சப்பாணியிடம் பேதுரு கூறியது என்ன ? அவன் எவ்வாறு குணமாக்கப்பட்டான் ? (அ) அலங்கார வாசலண்டையிலே உட்கார்ந்திருந்த சப்பாணி குணமாக்கப்பட்ட விதத்தை விவரி . | ,2015,2008 | 2 |
| 15 | நிரப்புக | லித்தா ஊரிலே எட்டு வருஷமாய்த் திமிர்வாதமாய்க் கிடந்த பேதுருவால் சுகமாகக்கப்பட்டவனுடைய பெயர் _______________ | 2016 | 1 |
| 16 | யார் யாரிடம் கூறியது | "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான்". | ,2016,2014,2009 | 3 |
| 16 | சுருக்கமான விடையளி | கொர்நேலியுவின் குணாதிசயங்கள் யாவை? (அ) கொர்நேலியுவின் நற்பண்புகள் பற்றி எழுது . | ,2015,2012,2017 | 3 |
| 16 | பொருத்துக | கொர்நேலியு - நூற்றுக்கு அதிபதி / இத்தாலியா பட்டாளம் | 2015,2009,2014 | 3 |
| 16 | நிரப்புக | இயேசு நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் ___________ சுற்றித் திரிந்தார். | 2010,2013 | 2 |
| 16 | யார் யாரிடம் கூறியது | "இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்". | ,2008 | 1 |
| 16 | நிரப்புக | __________________ யோப்பா பட்டணத்திலிருந்த பேதுருவிடம் மனுஷரை அனுப்பினான். (அ) கொர்நேலியு ___________ பட்டணத்திலிருந்த பேதுருவிடம் மனுஷரை அனுப்பினான். | ,2015 | 1 |
| 16 | நிரப்புக | பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் _________________யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (அ) பேதுரு பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது __________ கேட்டவர்கள் யாவர் மேலும் ____________ இறங்கினார். | ,2010 | 1 |
| 16 | சுருக்கமான விடையளி | கொர்நேலியு கண்ட தரிசனம் என்ன? தேவதூதனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனை என்ன? | ,2013 | 1 |
| 16 | பொருத்துக | பேதுரு - ஞானதிருஷ்டியடைந்தது | 2008 | 1 |
| 16 | நிரப்புக | ___________யூத ஜனங்களெல்லாராலும் நல்லவனென்று சாட்சி பெற்றவனாயிருந்தான். | 2008 | 1 |
| 17 | யார் யாரிடம் கூறியது | "சீக்கிரமாய் எழுந்திரு … உன் அரையைக்கட்டி உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" | ,2015,2010,2008 | 3 |
| 17 | சுருக்கமான விடையளி | ஏரோது கர்த்தருடைய தூதனால் ஏன் அடிக்கப்பட்டான் என்பதை விவரி. (அ) ஏரோது முடிவை பற்றி எழுது . (அ) பேதுரு சிறைச்சாலையில் வைத்த ராஜா யார் ? அந்த ராஜாவின் முடிவை பற்றி விளக்குக . | ,2014,2012,2009 | 3 |
| 17 | யார் யாரிடம் கூறியது | "உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா". | ,2009,2017 | 2 |
| 17 | சுருக்கமான விடையளி | ஏரோதினால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பேதுரு எவ்வாறு அதிலிருந்து விடுதலையாக்கப் பட்டான் என்பதை விவரி. (அ) பேதுரு சிறைச்சாலையிலிருந்து ஒரு தூதனால் எவ்விதம் விடுதலையாக்கப்பட்டான். | ,2016,2014 | 2 |
| 17 | நிரப்புக | ___________ ஒரு தூதனால் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டான். | 2010,2013 | 2 |
| 17 | நிரப்புக | பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் __________ அவனுக்காக தேவனை நோக்கி __________ ஜெபம் பண்ணினார்கள். (அ) பேதுரு ___________ காக்கப்பட்டிருக்கையில் __________ அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். | 2010 | 1 |
| 17 | நிரப்புக | __________ வாசற்கதவைத் தட்டினபோது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். (அ) ____________வாசற்கதவைத் தட்டினபோது ____________ என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். | ,2010 | 1 |
| 17 | நிரப்புக | __________ தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். | 2014 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | பொருத்துக | ஏரோது ராஜா - யாக்கோபு | 2012 | 1 |
| 17 | பொருத்துக | ரோதை - நற்செய்தி | 2017 | 1 |
| 17 | பொருத்துக | ஏரோது - புழுப்புழுத்து இறந்தான் | 2008 | 1 |
| 17 | பொருத்துக | பேதுரு - ரோதை | 2015 | 1 |
| 18 | யார் யாரிடம் கூறியது | "சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குரடனாயிருப்பாய்". | ,2010,2008 | 2 |
| 18 | பொருத்துக | பர்யேசு - மாய வித்தைக்காரன் / எலிமா | 2015,2016 | 2 |
| 18 | பொருத்துக | செர்கியுபவுல் - அதிபதி | 2010,2013 | 2 |
| 18 | யார் யாரிடம் கூறியது | "கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?" | ,2012 | 1 |
| 18 | யார் யாரிடம் கூறியது | "கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது". | ,2013 | 1 |
| 18 | நிரப்புக | __________ யும், __________ யும் நான் அழைத்த ஊழியத்துக்காக பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். (அ) ___________ வும் __________ வும் அவர்களைப் பரிசுத்த ஆவியானவர் அழைத்த ஊழியத்துக்காகப் பிரித்துவிடப்பட்டனர். | 2008 | 1 |
| 18 | சுருக்கமான விடையளி | அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தவர்கள் யார்? அவர்கள் உபவாசித்துக் கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் என்ன திருவுளம் பற்றினார்? | ,2016 | 1 |
| 18 | சுருக்கமான விடையளி | பாப்போ பட்டணத்தில் பவுலும் பர்னபாவும் செய்த ஊழியத்தை விவரித்து எழுது. | ,2009 | 1 |
| 18 | சுருக்கமான விடையளி | பாப்போ பட்டணத்து அதிபதியாகிய செர்கியுபவுலை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடிய மாயவித்தைக்காரனாகிய பர்யேசுவை பவுல் எவ்வாறு கடிந்துகொண்டார்? (அ) எலிமா என்னும் மாயவித்தைக்காரன் அதிபதி விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடியபோது பவுல் அவனை எவ்விதம் கடிந்துகொண்டார்;? அப்பொழுது சம்பவித்தது யாது ? | 2017 | 1 |
| 18 | நிரப்புக | பாப்போ பட்டணத்தில் __________ என்னும் அதிபதி தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தன். | 2014 | 1 |
| 18 | நிரப்புக | அந்தியோகியா பட்டணத்திலிருந்த சபையில் _________, ___________ தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவும் இருந்தனர். | 2016 | 1 |
| 19 | பொருத்துக | பர்னபா - யூப்பித்தர் | 2009,2013,2014 | 3 |
| 19 | நிரப்புக | இக்கோனியா பட்டணத்திலே பவுலும், பர்னபாவும் பிரசங்கித்தபோது திரளான __________ , __________ ஜனங்கள் விசுவாசித்தார்கள். (அ) சீஷர்கள் இக்கோனியாவுக்கு வந்தபோது அவர்கள் ___________, ___________ நிரப்பப்பட்டார்கள். | 2009,2017 | 2 |
| 19 | யார் யாரிடம் கூறியது | "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்" | ,2014 | 1 |
| 19 | பொருத்துக | பவுல் - மெர்க்கூரி | 2017 | 1 |
| 19 | நிரப்புக | லீஸ்திராவில் ஜனங்கள் __________ கல்லெறிந்து அவர் மரித்துப் போனாரென்று எண்ணி, அவரைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். | 2012 | 1 |
| 20 | பொருத்துக | ஆக்கில்லா - கொரிந்து / கூடாரம் பண்ணுகிற தொழிலாளி / பிரிஸ்கில்லாள் | 2015,2016,2014 | 3 |
| 20 | நிரப்புக | ஆக்கில்லா ஒரு யூதனாயிருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் __________ அவர்கள் ___________ பட்டணத்திற்குப் பவுலுடன் போனார்கள். | 2008 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | சுருக்கமான விடையளி | 'அப்பொல்லோ' - சிறு குறிப்பு வரைக. | ,2015 | 1 |
| 20 | சுருக்கமான விடையளி | ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவ அன்போடும், பக்தி வைராக்கியத்தோடும் ஜீவித்தார்கள் என்று ஏன் கூறப்படுகிறது? (அ) ஆக்கில்லால் பிரிஸ்கில்லால் அவர்களுடைய நற்குணங்களை பற்றி எழுதுக . | ,2013 | 1 |
| 20 | நிரப்புக | ___________, ____________ யூதனாகிய அப்பொல்லோவைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். | 2009 | 1 |
| 20 | நிரப்புக | ___________ சதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான். | 2012 | 1 |
| 20 | நிரப்புக | ____________ வும் ___________ ளும் பரிசுத்தவான்கள் கூடி வருவதற்காகத் தங்கள் வீட்டை உபயோகிக்கும்படி கொடுத்து, ஊழியத்திற்கு உதவி செய்தனர். | 2012 | 1 |
| 20 | நிரப்புக | ___________ ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணினான். | 2014 | 1 |
| 20 | பொருத்துக | கொரிந்து | 2015 | 1 |
| 20 | பொருத்துக | அப்பொல்லோ - வேதாகமங்களில் வல்லவன் | 2017 | 1 |

| Chapter | Question Type | QNo | Questions | Annual Q.Paper | Years Repeated |
|---|---|---|---|---|---|
| 1 | மத்தேயு | 204 | இம்மானுவேல்' என்றால் என்ன ? (அ) 'இம்மானுவேல்' என்பதின் அர்த்தம் என்ன ? | 2011,2017 | 2 |
| 2 | மத்தேயு | | □ கிழக்கிலே நட்சத்திரத்தைக் கண்டு, இயேசுவைப் பணிந்துகொள்ள வந்தவர்கள் யார் ? | 2014 | 1 |
| 2 | மத்தேயு | 206 | □ இயேசுவின் பிறப்பைக் குறித்து கேட்டபொழுது கலங்கின ராஜாவின் பெயர் என்ன ? | 2013 | 1 |
| 2 | மத்தேயு | 214 | □ சாஸ்திரிகளால் தான் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபமடைந்த ராஜாவின் பெயர் என்ன ? | 2010 | 1 |
| 3 | மத்தேயு | 207 | ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையை கட்டிக்கொண்டுருந்தவன் யார் ? | 2013,2015 | 2 |
| 3 | மத்தேயு | 202 | □ "வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் " என்று சொல்லப்பட்டவன் யார் ? | 2007 | 1 |
| 3 | மத்தேயு | | யூதேயாவின் வனாந்தரங்களில் பிரசங்கம் செய்தது யார் ? | 2011 | 1 |
| 3 | மத்தேயு | 220 | மனம்திரும்புதலுக்கென்று ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தது யார்? | 2009 | 1 |
| 3 | மத்தேயு | 201 | நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு எங்கு போடப்படும்? | 2011 | 1 |
| 3 | மத்தேயு | 216 | யோவான்ஸ்நானனுடைய உடை என்ன? | 2010 | 1 |
| 3 | மத்தேயு | | யார்மீது தேவ ஆவியானவர் புறாவைப்போல் இறங்கினார்? | 2013 | 1 |
| 4 | மத்தேயு | 215 | □ யாக்கோபு, யோவான் என்பவர்களின் தகப்பன் பெயரை எழுது. | 2010 | 1 |
| 4 | மத்தேயு | 209 | □ பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டது யார்? | 2014 | 1 |
| 4 | மத்தேயு | 203 | "இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்  கண்டார்கள்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தது யார்? | 2012 | 1 |
| 4 | மத்தேயு | 221 | □ வனாந்தரத்தில் இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டபின் அவருக்குப் பணிவிடை செய்தது யார் ? | 2009 | 1 |
| 5 | மத்தேயு | | □ தன் சகோதரனை "மூடனே" என்று சொல்லுகிறவன்  எதற்கு ஏதுவாயிருப்பான் ? | 2016 | 1 |
| 5 | மத்தேயு | 231 | இரக்கம் பெறுபவர்கள் யார் ? | 2008 | 1 |
| 5 | மத்தேயு | 230 | யார் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் ? | 2007 | 1 |
| 5 | மத்தேயு | 219 | □ நியாயப்பிரமாணங்களையும் , தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்' என்று சொன்னது யார் ? | 2010 | 1 |
| 5 | மத்தேயு | 226 | பூமியை சுதந்தரித்துக் கொள்பவர்கள் யார்? | 2015 | 1 |
| 5 | மத்தேயு | | இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தில் யாரை குறித்து, " அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று கூறினார் ? | 2016 | 1 |
| 6 | மத்தேயு | 205 | சரீரத்தின் விளக்காக இருப்பது எது ? | 2011,2013,2017, 2015 | 4.5 |
| 6 | மத்தேயு | 228 | நமக்காக பொக்கிஷங்களை எங்கே சேர்த்துவைக்க வேண்டும்? | 2016 | 1 |
| 7 | மத்தேயு | 211 | □ வேதபாரகரைப் போல் போதியாமல் அதிகாரமுடையவராய் போதித்தது யார்? | 2009 | 1 |
| 7 | மத்தேயு | | புத்தியுள்ள மனுஷன் எதின் மேல் தன் வீட்டைக் கட்டினதாகக் கர்த்தராகிய இயேசு கூறினார் ? | 2017 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | மத்தேயு | | "அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" என்று இயேசு யாரைக் குறித்து கூறினார்? | 2017 | 1 |
| 8 | மத்தேயு | 217 | "ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவன்" என்று கூறியது யார்? | 2010 | 1 |
| 9 | மத்தேயு | | இயேசுவிடம் வந்து தன் மகளைக் குணமாக்கும்படி வேண்டிக்கொண்ட ஜெபஆலயத்தலைவன் யார் ? | 2011 | 1 |
| 9 | மத்தேயு | 229 | தன்னைப் பின்சென்றுவர இயேசு அழைத்தபோது ஆயத்துறையில் உட்கார்ந்திருந்தவன் யார் ? | 2008 | 1 |
| 9 | மத்தேயு | 213 | "நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புவதற்கு அழைக்க வந்தேன்" என்றது யார் ? | 2006 | 1 |
| 9 | மத்தேயு | 212 | பூமியிலே பாவங்களை மன்னிக்க யாருக்கு அதிகாரம் உண்டு? | 2009 | 1 |
| 10 | மத்தேயு | | இயேசு தம்முடைய சீஷர்கள் எவற்றைப் போல கபடற்றவர்களாய் இருக்க வேண்டும் என்று கூறினார் ? | 2016 | 1 |
| 11 | மத்தேயு | 218 | "வருகிறவர் நீர் தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா " ? என்று இயேசுவிடம் கேட்க ஆட்களை அனுப்பியது யார் ? | 2010,2014 | 2 |
| 11 | மத்தேயு | 223 | ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் பெரியவன் யார்? | 2011 | 1 |
| 12 | மத்தேயு | | இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது யார் ? **(அ)** யோனாவைப் போல, இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருந்தது யார் ? | 2014,2012 | 2 |
| 12 | மத்தேயு | | இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது யார் ? | 2014,2016 | 2 |
| 12 | மத்தேயு | | யாருக்கு விரோதமாகப் பேசுவது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை ? (அ) யாருக்கு விரோதமான தூஷணம் மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை ? | 2009,2017 | 2 |
| 12 | மத்தேயு | | யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனம்திரும்பினது யார் ? | 2009 | 1 |
| 12 | மத்தேயு | | எதின் நிறைவினால் வாய் பேசும் ? | 2013 | 1 |
| 12 | மத்தேயு | | தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் புசித்த ராஜாவின் பெயரை எழுதுக | 2008 | 1 |
| 13 | மத்தேயு | | பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்பவர்கள் யார் ? | ,2008,2007,2011, 2012 | 4.5 |
| 13 | மத்தேயு | | கர்த்தராகிய இயேசு தம்முடைய சொந்த ஊரில் ஏன் அநேக அற்புதங்களைச் செய்யவில்லை ? | 2017 | 1 |
| 13 | மத்தேயு | | கர்த்தராகிய இயேசு கூறிய உவமையில், சத்துரு எப்பொழுது கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்? | 2016 | 1 |
| 13 | மத்தேயு | | "இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?" என்று யாரைக் குறித்துச் சொன்னார்கள்? | 2015 | 1 |
| 14 | மத்தேயு | | ஜலத்தின் மேல் நடந்த சீஷனின் பெயர் என்ன ? | 2010,2012 | 2 |
| 14 | மத்தேயு | | இரவில் எந்த ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து சீஷர்களிடத்திற்கு வந்தார் ? | 2015,2012 | 2 |
| 14 | மத்தேயு | | ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப்பட்டபோது சிரச்சேதம் பண்ணப்பட்டது யார் ? | 2017 | 1 |
| 14 | மத்தேயு | | "அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்" என்று யாரிடத்தில் இயேசு கேட்டார் ? | 2014 | 1 |
| 15 | மத்தேயு | | "நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே " என்றது யார்? | 2014 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | மத்தேயு | | □ ஏழு அப்பங்களையும் சில சிறு மீன்களையும் கொண்டு இயேசு திரளான ஜனங்களைப் போஷிப்பித்தபோது, சாப்பிட்ட புருஷர் எத்தனை பேர் ? | 2016 | 1 |
| 15 | மத்தேயு | | "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல " என்று யாரிடத்தில் கூறப்பட்டது ? | 2013 | 1 |
| 16 | மத்தேயு | | "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றது யார் ? | 2013,2015 | 2 |
| 16 | மத்தேயு | | பாதாளத்தின் வாசல்கள் எதை மேற்கொள்வதில்லை ? | 2016,2008 | 2 |
| 16 | மத்தேயு | | □ "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று இயேசுவைப் பற்றிக் கூறியது யார்? | 2009 | 1 |
| 17 | மத்தேயு | | □ மறுரூபமலையில் யாருடைய முகம் சூரியனை போல் பிரகாசித்தது? | 2013 | 1 |
| 17 | மத்தேயு | | கர்த்தராகிய இயேசு மறுரூபமானபோது அவருடைய முகம் எதைப் போலப் பிரகாசித்தது ? | 2016 | 1 |
| 18 | மத்தேயு | | ஒருவன் தன் சகோதரனுக்கு எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் ? | 2007 | 1 |
| 18 | மத்தேயு | | இயேசு யாரிடம் ஞானஸ்நானம் பெற்றார் ? | 2014 | 1 |
| 19 | மத்தேயு | | □ "மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்" என்று கூறியது யார் ? | 2013 | 1 |
| 20 | மத்தேயு | | ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யும்படி வந்தது யார் ? | 2008,2009 | 2 |
| 20 | மத்தேயு | | □ பதினோராம் மணிவேளையில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் பெற்றுக்கொண்ட கூலி எவ்வளவு ? | 2012 | 1 |
| 22 | மத்தேயு | | உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள் யார்? | 2007 | 1 |
| 23 | மத்தேயு | | □ தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே கொலை செய்யப்பட்டது யார் ? | 2006 | 1 |
| 23 | மத்தேயு | | "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு யாரை குறித்து சொன்னார் ? | 2016 | 1 |
| 24 | மத்தேயு | | அக்கிரமம் மிகுதியாவதினால் தணிந்துபோவது எது ? | 2012,2014 | 2 |
| 24 | மத்தேயு | | அக்கிரமம் மிகுதியாவதினால் தணிந்துபோவது எது? | 2014 | 1 |
| 25 | மத்தேயு | | தன்னுடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்த பிரயோஜனமற்ற ஊழியக்காரன் எவ்விடத்தில் தள்ளப்பட வேண்டும்மென்று எஜமான் கட்டளையிட்டான் ? | 2017 | 1 |
| 25 | மத்தேயு | | □ புத்தியில்லாத ஸ்திரீகள் தங்கள் தீவட்டிகளோடு எதைக் கொண்டுபோகவில்லை | 2014 | 1 |
| 25 | மத்தேயு | | பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது யாது? | 2006 | 1 |
| 25 | மத்தேயு | | ஒரு தாலந்தை வாங்கின ஊழியக்காரன் செய்தது என்ன ? | 2009 | 1 |
| 25 | மத்தேயு | | மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட கன்னிகைகள் எத்தனைப் பேர்? | 2011 | 1 |
| 26 | மத்தேயு | | □ இயேசுவை மறுதலித்ததற்காக வெளியே போய் மனங்கசந்து அழுதது யார்? | 2017 | 1 |
| 26 | மத்தேயு | | □ "உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருகாலும் இடறலடையேன்" என்றது யார்? | 2008 | 1 |
| 26 | மத்தேயு | | "ரபீ, வாழ்க " என்று சொல்லி இயேசுவை முத்தஞ்செய்தவன் யார்? | 2015 | 1 |
| 26 | மத்தேயு | | துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கியது யார்? | 2006 | 1 |
| 26 | மத்தேயு | | □ கர்த்தராகிய இயேசுவை நியாயம் விசாரித்த பிரதான ஆசாரியனின் பெயர் என்ன ? | 2009 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | மத்தேயு | | "சிநேகிதனே" என்று இயேசுவால் அழைக்கப்பட்ட சீஷனின் பெயர் என்ன ? | 2012 | 1 |
| 27 | மத்தேயு | | "கொல்கொதா" என்பதன் அர்த்தம் என்ன ? | 2013,2010,2015 | 3 |
| 27 | மத்தேயு | | பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டவனுடைய பெயர் என்ன ? **(அ)** பிலாத்துவினிடத்தில்<br><br>போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்ட ஐசுவரியவானின் பெயரை குறிபிடுக. | 2015,2008,2011 | 3 |
| 27 | மத்தேயு | | இயேசுவின் சிலுவையை சுமக்கும்படி பலவந்தம் பண்ணப்பட்ட சிரேனே ஊரானாகியா மனுஷன் யார்?<br>(அ) இயேசுவின் சிலுவையை சுமக்கும்படி பலவந்தம் பண்ணப்பட்டவர் யார்? | 2009,2012 | 2 |
| 27 | மத்தேயு | | "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்" என்றது யார் ? | 2014,2017 | 2 |
| 27 | மத்தேயு | | இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி மகதலேனா மரியாளுக்குச் சொன்னது யார் ? | 2008 | 1 |
| 27 | மத்தேயு | | "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்" என்றது யார் ? | 2014 | 1 |
| 27 | மத்தேயு | | "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்" என்று கூறியது யார் ? | 2015 | 1 |
| 27 | மத்தேயு | | இயேசுவின் கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளியது யார்? | 2007 | 1 |
| 27 | மத்தேயு | | இயேசு முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்படுவதை குறித்து<br><br>தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசியின் பெயரைக் குறிப்பிடுக. | 2008 | 1 |
| 27 | மத்தேயு | | இயேசுவை வாரினால் அடித்து சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்த தேசாதிபதி யார்? | 2007 | 1 |
| 27 | மத்தேயு | | நான்று கொண்டு செத்த இயேசுவின் சீஷன் யார் ? | 2006 | 1 |
| 27 | மத்தேயு | | இயேசுவின் சரீரம் யாருடைய புதிய கல்லறையில் வைக்கப்பட்டது? | 2010 | 1 |
| 27 | மத்தேயு | | பிரதான ஆசாரியர் குயவனுடைய நிலத்தை எத்தனை வெள்ளிக்காசுக்குக் கொண்டார்கள் ? | 2010 | 1 |

TAMBARAM Sunday School

# Lesson Memory Verse & Moral Exam

Standard - 7
வகுப்பு - 7

Time: 2 hours
நேரம் 2 மணி

| <Actual Marks> / 128 | X 25 = |
| --- | --- |

Marks - 25
மதிப்பெண் - 25

**I. Write the following memory verses in this answer sheet.** **39 X 2 = 78**
பின்வரும் மனப்பாட வசனங்களை இவ்விடைத்தாளில் பூர்த்தி செய்யவும்.

1. I Peter 1 : 7/ 1 பேதுரு 1 : 7

2. Acts 22:14/ அப் 22 : 14

3. Acts 22:15/ அப் 22 : 15

4. Galatians 1 : 8 / கலாத்தியர் 1 : 8

5. Galatians 1 : 9/ கலாத்தியர் 1 : 9

6. Hebrews 4 : 13 / எபிரெயர் 4 : 13

7. Hebrews 6 : 10/ எபிரெயர் 6 : 10

8. I Corin 1 : 7/ 1 கொரி 1:7

9. I Corin 1 : 8/ 1 கொரி 1:8

10. I Corinthians 12 : 25/ 1 கொரிந்தியர் 12: 25

11. I Corinthians 12 : 26/ 1 கொரிந்தியர் 12: 26

12. I John 2 : 28/ 1 யோவான் 2:28

13. I John 5: 14/ 1 யோவான் 5 : 14

14. I John 5: 15/ 1 யோவான் 5 : 15

15. I Thessalonians 2:8/ 1 தெசலோனிக்கேயர் 2 : 8

16. II Corinthians 4 : 16 / 2 கொரிந்தியர் 4: 16

17. II Corinthians 4 : 17 / 2 கொரிந்தியர் 4: 17

18. Isaiah 44 : 26/ ஏசாயா 44 : 26

19. James 5 : 11/ யாக்கோபு 5 : 11

20. James 5 : 14/ யாக்கோபு 5 : 14

21. James 5 : 15/ யாக்கோபு 5 : 15

22. James 5 : 16/ யாக்கோபு 5 : 16

23. James 5 : 19/ யாக்கோபு 5 : 19

24. James 5 : 20/ யாக்கோபு 5 : 20

25. Psalms 77 : 14/ சங்கிதம் 77 : 14

26. Luke 9 :2/ லூக்கா 9 : 2

27. Luke 9:1/ லூக்கா 9 : 1

28. Matthew 18 : 18/ மத்தேயு 18 : 18

29. Matthew 6 : 26/ மத்தேயு 6 : 26

30. Psalms 119 : 36/ சங்கீதம் 119 : 36

31. Psalms 119 : 37/ சங்கீதம் 119 : 37

32. Psalms 119:105/ சங்கீதம் 119 : 105

33. Luke 10 : 19/ லூக்கா 10 : 19

34. Romans 1 : 16/ ரோமர் 1 : 16

35. Romans 1 : 17/ ரோமர் 1 : 17

36. Romans 10 : 12/ ரோமர் 10: 12

37. Romans 10 : 13/ ரோமர் 10: 13

38. Romans 15:4/ ரோமர் 15 : 4

39. Romans 8 : 18/ ரோமர் 8:18

**III. Write the Moral of the Below Lessons** **20 X 2.5 = 50**

1. ST.PAUL'S FIRST MISSIONARY JOURNEY(PART I)
அப். பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி 1 )

2. MIRACLES PERFORMED BY PETER
பேதுருவால் செய்யப்பட்ட அற்புதங்கள்

3. AQUILA AND PRISCILLA
ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

4. ELIJAH BEING FED
எலியா போஷிப்பிக்கப்பட்டது.

5. ELIJAH ON MOUNT CARMEL
கர்மேல் பர்வதத்தில் எலியா

6. ELIJAH'S MANTLE FALLS ON ELISHA
எ□யாவின் சால்வை எ□சாவின் மீது விழுந்தது

7. HEZEKIAH'S SICKNESS AND HEALING
எசேக்கியா வியாதிப்பட்டதும் சுகமானதும்

8. JOB, THE UPRIGHT MAN (PART-I)
உத்தமனாகிய யோபு (பகுதி 1)

9. JOB, THE UPRIGHT MAN (PART-II)
உத்தமனாகிய யோபு (பகுதி 2)

10. KING AHAB AND NABOTH
ஆகாப் இராஜாவும் நாபோத்தும்

11. MORE MIRACLES OF ELISHA
எலிசாவின் இன்னும் சில அற்புதங்கள்

12. NAAMAN'S LEPROSY HEALED
நாகமானின் குஷ்டரோகம் சுகமானது

13. PETER DELIVERED FROM PRISON
பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

14. SAUL'S CONVERSION
சவுலின் குணப்படுதல்

15. ST.PAUL'S FIRST MISSIONARY JOURNEY (PART II)
அப். பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி 2 )

16. THE SHUNAMMITE
சூனேமியாள்

17. THE DISOBEDIENT MAN OF GOD
கீழ்ப்படியாத தேவமனுஷன்

18. THE MISSION OF PHILIP THE EVANGELIST
சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியம்

19. THE REFORMATION OF KING HEZEKIAH
எசேக்கியா ராஜாவின் சீர்திருத்தங்கள்

20. THE SALVATION OF CORNELIUS' HOUSEHOLD
கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு

வகுப்பு : 7 பாடம்-1

ஞாயிறு பள்ளி

# உத்தமனாகிய யோபு (பகுதி 1)

(யோபு 1 : 1 - 22, 2 : 1 - 10)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 பேதுரு 1 : 7

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** யோபு | - | ஊத்ஸ்தேசம் | (யோபு 1 : 1) |
| **2.** யோபு | - | உத்தமன் | (யோபு 1 : 1) |
| **3.** யோபு | - | சன்மார்க்கன் | (யோபு 1 : 1) |
| **4.** யோபு | - | தேவனுக்கு பயந்தவன் | (யோபு 1 : 1) |
| **5.** யோபு | - | பொல்லாப்புக்கு விலகுகிறவன் | (யோபு 1 : 1) |
| **6.** யோபு | - | கர்த்தரின் தாசன் | (யோபு 1 : 8) |
| **7.** யோபு | - | கொடிய பருக்கள் | (யோபு 2 : 7) |
| **8.** சபேயர் | - | எருதுகள், கழுதைகள் | (யோபு 14 : 15) |
| **9.** அக்கினி | - | ஆடுகள் | (யோபு 1 : 18) |
| **10.** கல்தேயர் | - | ஒட்டகங்கள் | (யோபு 1 : 17) |
| **11.** பெருங்காற்று | - | பிள்ளைகள் | (யோபு 1 : 19) |
| **12.** தேவபுத்திரர் | - | கர்த்தருடைய சந்நிதி | (யோபு 1 : 6) |
| **13.** யோபின் வீடு | - | கர்த்தருடைய வேலி | (யோபு 1 : 10) |
| **14.** சாத்தான் | - | குற்றஞ்சாட்டுகிறவன் | (வெளி 12 : 10) |
| **15.** யோபுவின் மனைவி | - | தேவனை தூஷித்தல் | (யோபு 2 : 9) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** ____________________தேசத்தில் யோபு வசித்தான்.

**2.** ____________________உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து ____________________ விலகுகிறவனுமாயிருந்தான்.

**3.** யோபுக்கு , ____________________ குமாரரும் ____________________ குமாரத்திகளும் இருந்தனர்.

**4.** கிழக்கித்திய புத்திரர் எல்லாரிலும் ____________________ பெரியவனாயிருந்தான்.

**5.** யோபு தன் பிள்ளைகளை __________________அவர்கள் இலக்கத்தின்படி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்.

**6.** __________________ கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்ற போது சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.

**7.** கர்த்தர் யோபுவைச் சுற்றிலும் __________________அடைத்திருந்தார்.

**8.** கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ____________________என்று ____________________ கூறினான்.

**9.** இவையெல்லாவற்றிலும் யோபு____________________ செய்யவுமில்லை. தேவனைப்பற்றிக் ____________________சொல்லவுமில்லை.

**10.** ____________________உத்தமத்திலே உறுதியாய் நின்றான்.

11. யோபுவைப் பற்றி ____________________ சாட்சி கொடுத்தார்.

12. சாத்தான் யோபின் உள்ளங்கால் தொடங்கி, அவன் உச்சந்தலை மட்டும் ____________________ வாதித்தான்.

13. யோபுவின் மனைவி அவனைப் பார்த்து, நீர் இன்னும் உம்முடைய ____________________ உறுதியாய் நிற்கிறீரோ என்றாள்.

14. ____________________ யோபிடம் தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்.

15. இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் ____________________ பாவம் செய்யவில்லை.

<u>விடைகள்</u>

1. ஊத்ஸ்(யோபு 1 : 1)
2. யோபு, பொல்லாப்புக்கு(யோபு 1 : 1)
3. ஏழு,மூன்று (யோபு 1 : 2)
4. யோபு (யோபு 1 : 3)
5. பரிசுத்தப்படுத்தி (யோபு 1 : 5)
6. தேவபுத்திரர் (யோபு 1 : 6)
7. வேலி (யோபு 1 : 10)
8. ஸ்தோத்திரம், யோபு(யோபு 1 : 21)
9. பாவம், குறை (யோபு 1 : 22)
10. யோபு (யோபு 2 : 3)
11. கர்த்தர் (யோபு 2 : 3)
12. கொடிய பருக்களால் (யோபு 2 : 7)
13. உத்தமத்தில் (யோபு 2 : 9)
14. யோபின் மனைவி (யோபு 2 : 9)
15. உதடுகளினால் (யோபு 2:9)

**IV** *<u>ஒரே வார்த்தையில் விடை எழுது :</u>*

1. யோபு எந்த தேசத்தில் வசித்து வந்தான்?
   ஊத்ஸ் தேசம் (யோபு 1 : 1)

2. யோபின் குமாரர்கள் எத்தனை பேர்?
   ஏழு யோபு 1 : 2)

3. யோபின் குமாரத்திகள் எத்தனை போர்?
   மூன்று (யோபு 1 : 2)

4. சபேயர் சாய்த்துக் கொண்டுபோன யோபுவின் மிருக ஜீவன்கள் யாவை?
   எருதுகள் , கழுதைகள் (யோபு 1 : 15)

5. வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து சுட்டெரித்துப் போட்ட யோபுவின் மிருக ஜீவன்கள் யாவை?
   ஆடுகள் யோபு 1 : 16)

6. யோபின் மிருக ஜீவன்களில் எவற்றை கல்தேயர் ஓட்டிக் கொண்டு போனார்கள்?
   ஒட்டகங்கள் (யோபு 1 : 17)

7. தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று யோபுவிடம் கூறியது யார்?
   யோபுவின் மனைவி (யோபு 2 : 9)

**V** *<u>யார் யாரிடம் கூறியது</u>* : (2 Marks)

1. a) "ஒரு வேளை என் குமாரர் பாவஞ் செய்து தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள். " (யோபு 1 : 5)

   யார் : யோபு

   யாரிடம் : தனக்குள்ளே கூறிக் கொண்டான்.

2. "நீ எங்கேயிருந்து வருகிறாய்? " (யோபு 1 : 7)
   யார் : கர்த்தர்
   யாரிடம் : சாத்தானிடம்

3. “பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித் திரிந்து வருகிறேன் ”. (யோபு 1 : 7)
யார் : சாத்தான்
யாரிடம் : கர்த்தரிடம்

4. a)“என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ?” (யோபு 1 : 7)
b)“உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை.”(யோபு 1 : 8)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாத்தானிடம்

5. a)“யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்”. (யோபு 1 : 9)
b) “நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ.” (யோபு 1 : 10)
c) “உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானோ பாரும்.” (யோபு 1 : 11)

யார் : சாத்தான்
யாரிடம் : கர்த்தரிடம்

6. a)“இதோ அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது.அவன்மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே.” (யோபு 1 : 12)

யார் : கர்த்தர்
யாரிடம் : சாத்தானிடம்
தூஷிக்கானோ பாரும்'' என்றான். அப்பொது கர்த்தர் இந்த வார்த்தைகளைக் கூறினார்.

7. a)“நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன்.”
b)“கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் .” (யோபு 1 : 21)
யார் : யோபு
யாரிடம் : தரையிலே பணிந்து கர்த்தரை கனம் பண்ணி இவ்வாறு கூறினான்

8. “அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் .” (யோபு 2 : 3)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாத்தானிடம்

9. a)“தோலுக்குப் பதிலாக தோலையும் தன் ஜீவனுக்குப் பதிலாக தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்து விடுவான்” (யோபு 2 : 4)
b) “நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால், அப்போது உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானோ பாரும்.” (யோபு 2 : 5)
யார் : சாத்தான்
யாரிடம் : கர்த்தரிடம்

10. “இதோ, அவன் உன் கையிலிருக்கிறான், ஆகிலும் அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு.” (யோபு 2 : 6)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாத்தானிடம்

11. a)“நீர் இன்னும் உம்முடைய உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ? ”
b)“தேவனை தூஷித்து ஜீவனை விடும்.” (யோபு 2 :9)
யார் : யோபுவின் மனைவி
யாரிடம் : யோபுவிடம்

12. “நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்.” (யோபு 2 : 10)
யார் : யோபு
யாரிடம் : தன் மனைவியிடம்

## VI *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. யோபின் நற்பண்புகள் யாவை?
   யோபு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1 : 1)

2. யோபுக்கு எத்தனை குமாரரும் குமாரத்திகளும் இருந்தனர்?
   யோபுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தனர். (யோபு 1 : 2)

3. யோபுக்கு உண்டாயிருந்த ஐசுவரியங்கள் யாவை?
   யோபுவிற்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும் ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்தன. திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். (யோபு 1 : 3)

4. கிழக்கத்திய புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தவன் யார்? அவன் எந்த தேசத்தில் வசித்து வந்தான்?
   கிழக்கத்திய புத்திரர் எல்லாரிலும் யோபு பெரியவனாயிருந்தான். அவன் ஊத்ஸ் தேசத்தில் வசித்து வந்தான். (யோபு 1 : 1, 3)

5. கர்த்தர் யோபுவைக் குறித்து சாத்தானிடம் கொடுத்த சாட்சி யாது?
   கர்த்தர் சாத்தானிடம், ''என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? ஊத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை'', என்று யோபுவைக்குறித்து சாட்சி கொடுத்தார்.(யோபு 1 : 8)

6. யோபின் மிருக ஜீவன்களில் சபேயர் எவைகளை கொள்ளையிட்டனர்?
   யோபினுடைய எருதுகளையும், கழுதைகளையும் சபேயர் கொள்ளையிட்டனர் (யோபு 1 : 14)

7. யோபின் ஆடுகளும் அதை மேய்த்து கொண்டிருந்த வேலையாட்களும் எவ்வாறு மாண்டு போயின?
   வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது. (யோபு 1 : 16)

8. யோபின் ஒட்டகங்களை யார் ஓட்டிக் கொண்டு போனார்கள்?
   கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து யோபின் ஒட்டகங்களின் மேல் விழுந்து, அவைகளை ஓட்டிக் கொண்டு போனார்கள். (யோபு 1 : 17)

9. யோபின் குமாரரும் குமாரத்திகளும் எவ்வாறு இறந்து போனார்கள்?
   யோபின் குமாரரும், குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து திராட்சரசம் குடிக்கிறபோது, வனாந்தர வழியாய் பெருங்காற்று வந்து அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது, பிள்ளைகளின் மேல் விழுந்ததினால், அவர்கள் இறந்து போனார்கள். (யோபு 1 : 19)

10. கர்த்தர் யோபை சோதிக்கும்படி இரண்டாம் முறை சாத்தானுக்கு அனுமதி கொடுத்தவுடன் அவன் யோபுவை எவ்வாறு வாதித்தான்?
    சாத்தான் யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். (யோபு 2 : 7)

11. சாத்தான் கொடிய பருக்களால் யோபுவை வாதித்த போது யோபு என்ன செய்தான்?
    யோபு ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். (யோபு 2 : 8) .

## VII *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. யோபு தன் குமாரரை ஏன், எவ்வாறு பரிசுத்தப்படுத்தினான்?
   யோபின் குமாரர், அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்து செய்து தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்து செய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு ஒருவேளை என் குமாரர் பாவஞ் செய்து தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, தவறாமல் ஒழுங்காக தன் பிள்ளைகளை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து அவர்கள் எல்லாருடைய

இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான். இவ்வாராக யோபு தன் பிள்ளைகளை பரிசுத்தப்படுத்தினான். (யோபு 1 : 4, 5)

2. கர்த்தா தன்னுடைய தாசனாகிய யோபுவை எவ்வாறு பாதுகாத்து ஆசீர்வதிப்பதாக சாத்தான் கூறினான்?

1) கர்த்தர் யோபுவை பாதுகாக்கும் முகாந்தரமாக அவனையும், அவன் வீட்டையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்திருக்கிறார் என்றும்,

2) அவனை ஆசீர்வதிக்கும் முகாந்தரமாய் அவனுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்து தேசத்தில் பெருக பண்ணியிருக்கிறார் என்றும் கூறினான். (யோபு 1 : 10)

3. ஒன்றன்பின் ஒன்றாக தனக்கு வந்த தீங்கினை கேள்வியுற்ற யோபு என்ன செய்தான்?

யோபு தன் சால்வையை கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து, "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்று சொன்னான். (யோபு 1 : 20,21)

4. யோபு தன் உத்தமத்திலே உறுதியாய் நிலைத்திருக்கிறதை பற்றி கர்த்தர் சாத்தானிடம் கூறியது என்ன?

சாத்தான் யோபுவிற்குண்டான எல்லாவற்றையும் அழித்து விட்டு, தேவபுத்திரர் நடுவிலே, கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான். அப்போது கர்த்தர், "உத்தமனும், சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய யோபுவைப் போல பூமியில் ஒருவனுமில்லை. முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும் அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான்" என்று கூறினார். (யோபு 2 : 3)

5. யோபு தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்று கர்த்தர் சொன்னபோது சாத்தான் அதற்கு மறுமொழியாக அவரிடத்தில் வாதாடி கூறியது என்ன?

யோபு தன் உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறான் என்று கர்த்தா சொன்னபோது, சாத்தான் அதற்கு மறுமொழியாக, "தோலுக்குப் பதிலாக தோலையும் தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்து விடுவான். நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்"என்றான். (யோபு 2 : 4, 5)

6. சாத்தான் யோபை கொடிய பருக்களால் வாதித்த போது அவன் மனைவி அவனிடம் கூறிய வார்த்தைகள் என்ன? அதற்கு யோபு கொடுத்த பதில் என்ன?

யோபின் மனைவி அவனைப் பார்த்து, "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" என்றாள்.

அதற்கு யோபு, "நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய். தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" என்றான். (யோபு 2 : 9, 10)

**VIII** *<u>விரிவான விடையளி</u>* :

1. யோபுவைப் பற்றி கர்த்தருக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்த முதலாவது சம்பாஷணையை விவரி.

கர்த்தர் தேவபுத்திரர் நடுவிலே வந்து நின்ற சாத்தானை நோக்கி, "என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய யோபுவைப் போல பூமியில் ஒருவனும் இல்லை" என்றார்.

அதற்கு சாத்தான், "யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்தீர். அவனுடைய சம்பத்து தேசத்திலே பெருகிற்று. ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்" என்றான்.

அதற்கு கர்த்தர், "இதோ, அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது. அவன் மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே" என்றார். (யோபு 1 : 6 - 12)

2. யோபின் மேல் ஒன்றன்பின் ஒன்றாக வந்த தீங்கினை விவரி?

ஒரு நாள் யோபுவின் வேலைக்காரரில் ஒருவன் அவனிடத்தில் வந்து, ''எருதுகள் உழுகிறபோது, கழுதைகள் அவைகளின் பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கையில், சபேயர் அவைகள் மேல் விழுந்து அவைகளைச் சாய்த்துக் கொண்டு போனார்கள். வேலை ஆட்களையும், பட்டயக்கருக்கினால் வெட்டிப் போட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன்'' என்றான்.

அவன் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் வேறொருவன் வந்து, ''வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையம் சுட்டெரித்துப் போட்டது. நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன'' என்றான்.

அச்சமயத்தில் வேறொருவன் வந்து, ''கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து ஒட்டகங்கள் மேல் விழுந்து அவைகளை ஓட்டிக் கொண்டு போனார்கள். வேலையாட்களையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப் போட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் தப்பி அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன்'' என்றான்.

இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், வெறொருவன் வந்து, ''உம்முடைய குமாரரும் உம்முடைய குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து திராட்சரசம் குடிக்கிற போது, வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள். நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன்'' என்றான். இவ்வாறாக பல தீங்குகள் யோபின் மேல் வந்தது. (யோபு 1 : 13 - 19)

3. யோபுவைப் பற்றி கர்த்தருக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்த இரண்டாவது சம்பாஷணையை பற்றி எழுது?

சாத்தான் யோபுவிற்குண்டானவைகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டு, கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான்.

அப்பொழுது கர்த்தர் சாத்தானை பார்த்து, ''நீ எங்கேயிருந்து வருகிறாய்? என்றார். சாத்தான், ''நான் பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன்'' என்றான்.

அப்போது கர்த்தர் சாத்தானைப் பார்த்து, ''நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுக்ஷனாகிய யோபுவைப் போல பூமியில் ஒருவனும் இல்லை. முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாகும்படி நீ என்னை ஏவின போதிலும் அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நின்கிறான்'' என்றார்.

அப்பொழுது சாத்தான் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக, ''தோலுக்குப் பதிலாக தோலையும் தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்து விடுவான். நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்'' என்றான்.

அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி, ''இதோ, அவன் உன் கையிலிருக்கிறான். ஆகிலும் அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடும்'' என்றார். (யோபு 2 : 3 - 6)

**IX** *போதனை* : (2 ½ Marks)

யோபு கர்த்தரால் சாட்சி பெற்ற ஒரு மனுஷனாயிருந்தான். எனிலும் அவன் சாத்தானால் சோதிக்கப்பட்டு தனக்குண்டான எல்லாவற்றையும், தன் பிள்ளைகளையும் கூட இழந்தான். அவன் தன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டான். இருப்பினும் அவன் தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை. நாம் அக்கினி சோதனைகளை சந்திக்கும் போது யோபைப் போல பொறுமையாயிருந்து தேவனை நம்பி, அவரை ஸ்தோத்திரிக்க வேண்டும்.

*******

# உத்தமனாகிய யோபு (பகுதி 2)

(யோபு 2 : 6 – 11; 12 : 4 ; 13 : 15; 19 : 13 - 19, 25 – 27;
23 : 10; 27 : 56; 42 : 7 - 13)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாக்கோபு 5 : 11

இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள், கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** எலிப்பாசு | - | தேமானியன் | (யோபு 42 : 9) |
| **2.** பில்தாத் | - | சூகியன் | (யோபு 42 : 9) |
| **3.** சோப்பார் | - | நாகமாதியன் | (யோபு 42 : 9) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல்__________________.

2. அவர் என்னை சோதித்தபின் நான் __________________விளங்குவேன்.

3. என் ஆவி பிரியுமட்டும் என் __________________ என்னை விட்டு விலக்கேன்.

4. என் __________________ கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன். அதை நான் விட்டு விடேன். நான் உயிரோடிருக்குமளவும் என் ______________ என்னை நிந்திக்காது.

5. என் தாசனாகிய________________பேசினது போல், நீங்கள் என்னைக் குறித்து ________________ பேசவில்லை.

6. யோபு தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவன் ________________ மாற்றினார்.

7. கர்த்தர் யோபுவை ________________ஆசீர்வதித்தார்.

8. __________________யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன்__________________ ஆசீர்வதித்தார்.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13 : 15) | 5. யோபு, நிதானமாய் (யோபு 42 : 7) |
| 2. பொன்னாக (யோபு 23 : 10) | 6. சிறையிருப்பை (யோபு 42 : 10) |
| 3. உத்தமத்தை (யோபு 27 : 5) | 7. இரண்டத்தனையாய் (யோபு 42 : 10) |
| 4. நீதியைக், இருதயம் (யோபு 27 : 6) | 8.கர்த்தர் பின்னிலைமையை(யோபு 42 : 12) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::*

1. அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று கூறியது யார்?
   யோபு (யோபு 13 : 5)

2. என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும், அறிக்கையிட்ட தேவனுடைய தாசன் யார்?
   யோபு (யோபு 19 : 23)

3. கர்த்தர் யோபின் பின்னிலைமையை ஆசீர்வதித்தப் போது அவனுக்கு உண்டாயிருந்த ஆடுகள் எத்தை
   பதினாலாயிரம் யோபு 42 : 12)

4. கர்த்தர் யோபின் பின்னிலைமையை ஆசீர்வதிக்த போது அவனுக்கு உண்டாயிருந்த ஏர்கள் எத்தனை?
   ஆயிரம் (யோபு 42 : 12)

5. கர்த்தர் யோபின் பின்னிலைமையை ஆசீர்வதித்த போது அவனுக்குண்டாயிருந்த ஒட்டகங்கள் எத்தனை?
   ஆறாயிரம் (யோபு 42 : 12)

6. கர்த்தர் யோபின் பின்னிலைமையை ஆசீர்வதித்தபோது அவனுக்குண்டாயிருந்த கழுதைகள் எத்தனை?
   ஆயிரம் (யோபு 42 : 12)

**V** *<u>யார் யாரிடம் கூறியது</u>* : (2 Marks)

**1.** "என் சிநேகிரதால் நான் நிந்திக்கப்பட்டு, தேவனை நோக்கிப் பிரார்த்திப்பேன் அவர் எனக்கு மறுஉத்தரவு அருளுவார். உத்தமனாகிய நீதிமான் பரியாசம் பண்ணப்படுகிறான்" (யோபு 12 : 4)
யார் : யோபு
யாரிடம் : நாகமாத்தியனாகிய சோப்பாருக்கு பிரதியுத்தரமாக கூறியது.

**2.** "என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாகக் எண்ணுகிறார்கள்." (யோபு 19 : 15)
யார் : யோபு
யாரிடம் : சூகியனான பில்தாத்துக்கு பிரதியுத்தரமாக கூறியது.

**3.** "அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்". (யோபு 13 : 15)
யார் : யோபு
யாரிடம் : நாகமாத்தியனாகிய சோப்பாரையும் மற்ற அவனுடைய இரண்டு சிநேகிதரையும் நோக்கி கூறியது

**4. a)**"இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்". (யோபு 19 : 26)
**b)**"அவரை நானே பார்ப்பேன், அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்." (யோபு 19 : 27)
யார் : யோபு
யாரிடம் : சூகியனான பில்தாத்தையும் மற்ற அவனுடைய இரண்டு சிநேகிதரையும் நோக்கி கூறியது.

**5. a)**" என் ஆவி பிரியும் மட்டும் என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன்." (யோபு 27 : 5)
**b)** "என் நீதியை கெட்டியாகப் பிடித்திருக்கிறேன். அதை நான் விட்டுவிடேன்." (யோபு 27 : 6)

**c)** "நான் உயிரோடிருக்குமளவும் என் இருதயம் என்னை நிந்திக்காது." (யோபு 27 : 6)
யார் : யோபு
யாரிடம் : சூகியனான பில்தாத் மற்றும் இதர இரு நண்பர்களிடம்

**6. a)**"உன் மேலும் உன் இரண்டு சிநேகிதர் மேலும் எனக்குக் கோபம் மூளுகிறது." யோபு 42 :7)
**b)**"என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை." (யோபு 42 :8)
யார் : கர்த்தர்
யாரிடம் : தேமானியனான எலிப்பாசை நோக்கி கூறியது.

## VI *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. யோபிற்காக பரிதபித்து அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்த சிநேகிதர்கள் எத்தனை பேர்? அவர்கள் யார்?
   யோபிற்கு ஆறுதல் சொல்ல மூன்று சிநேகிதர்கள் வந்தார்கள். அவர்கள் 1. தோமானியனான எலிப்பாஸ் 2. சூகியனான பில்தாத் 3. நாகமாத்தியனான சோப்பார் என்பவர்கள் ஆவர்.(யோபு 2 : 11)

2. ஆறுதல் சொல்லும்படி வந்த தன் சிநேகிதரால் யோபிற்கு என்ன சம்பவித்தது?
   யோபு தன் சிநேகிதரால் நிந்திக்கப்பட்டு பரியாசம் பண்ணப்பட்டான்.(யோபு 12 : 4)

3. யோபு பரியாசம் பண்ணப்பட்ட வேளையில் கர்த்தருக்கு யார் மீது கோபம் மூண்டது? ஏன்?
   கர்த்தருக்கு தேமானியனான எலிப்பாஸ் மீதும் அவனுடைய இரண்டு சிநேகிதர்கள் மேலும் கோபம் மூண்டது.

   ஏனெனில் அவர்கள் யோபைப் போல, கர்த்தரைக் குறித்து நிதானமாய் பேசவில்லை. (யோபு 42 : 7)

4. யோபின் சிநேகிதர்கள் கர்த்தருடைய வார்த்தையின்படி சர்வாங்க தகனபலியாக செலுத்தியது என்ன?
   கர்த்தருடைய வார்த்தையின்படி ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் சர்வாங்க தகனபலியாக யோபின் சிநேகிதர்கள் செலுத்தினார்கள். (யோபு 42 : 8)

5. யோபின் சிறையிருப்பை கர்த்தர் எப்பொழுது மாற்றினார்?
   யோபு தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்த போது கர்த்தர் அவனுடைய சிறையிருப்பை மாற்றினார். (யோபு 42 : 10)

## VII *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. யோபு தன் உத்தமத்திலே உறுதியாய் நின்றான் என்பதை வசன ஆதாரங்களுடன் எடுத்து எழுது?
   *i.* என் ஆவி பிரியும் மட்டும் என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன்.
   *ii.* என் நீதியை கெட்டியாகப் பிடித்திருக்கிறேன். அதை நான் விட்டுவிடேன்.
   *iii.* நான் உயிரோடிருக்குமளவும் என் இருதயம் என்னை நிந்திக்காது என்றான். (யோபு 27 : 5, 6)

## VIII *விரிவான விடையளி* :

1. யோபு யாரால் எவ்வாறு நிந்திக்கப்பட்டு கைவிடப்பட்டான்?

   யோபுவை அவன் மனைவி, அவனுடைய சகோதரர்கள், சிநேகிதர்கள், அறிமுகமானவர்கள், பந்து ஜனங்கள், வீட்டு ஜனங்கள், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், சிறுபிள்ளைகள் எல்லோரும் நிந்தித்து கைவிட்டார்கள். (யோபு 12 : 4)
   1. என் சகோதரர் என்னை விட்டு தூரப்போனார்கள்.
   2. எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள்.
   3. என் பந்து ஜனங்கள் விலகிப்போனார்கள்.
   4. என் சிநேகிதர் என்னை மறந்து விட்டார்கள்.
   5. என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள். அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்.
   6. நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிறபோது அவன் எனக்கு உத்தரவு கொடான், என் வாயினால் நான் அவனைக் கெஞ்ச வேண்டியதாயிற்று.
   7. என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது.
   8. சிறு பிள்ளைகளும் என்னை அசட்டைப் பண்ணுகிறார்கள். நான் எழுந்தால் அவர்கள் எனக்கு விரோதமாய் பேசுகிறார்கள்.
   9. என் பிராண சிநேகிதர் எல்லாரும் என்னை வெறுக்கிறார்கள்.
   10. நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதிகளானார்கள் என்று கூறினார். (யோபு 19 : 13 - 19)

2. யோபு தன் மிகுந்த உபத்திரவத்தின் மத்தியில் கூறிய நம்பிக்கையின் வார்த்தைகள் சிலவற்றை வசன ஆதாரத்துடன் எழுதுக.

<u>யோபு தன் மிகுந்த உபத்திரவத்தின் மத்தியில் கூறிய நம்பிக்கையான வார்த்தைகள்:</u>

*i.* அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன். (யோபு 13 : 15)

*ii.* என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். (யோபு 19 : 25)

*iii.* இந்த என் தோல் முதலானவைகள் அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல என் கண்களே அவரைக் காணும். (யோபு 19 : 26)

*iv.* நான் போகும் வழியை அவர் அறிவார் அவர் என்னை சோதித்து பின்பு நான் பொன்னாக விளங்குவேன். (யோபு 23 : 10)

3. யோபின் சிநேகிதரைக் கர்த்தர் ஏன் கடிந்து கொண்டார்? அவர்களுடைய புத்தியீனத்துக்கு தக்கதாய் அவர்களை நடத்தாதபடிக்கு, அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் அவர்களுக்கு ஆலோசனை கூறினார்?

யோபு பேசினது போல அவனுடைய சிநேகிதர்கள் கர்த்தரைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை. இதினிமித்தம் கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது. கர்த்தர் அவர்களைக் கடிந்து கொண்டார்.

பின்பு கர்த்தர் அவர்களை நோக்கி, “நங்கள் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக் கடாக்களையும் தெரிந்து கொண்டு என் தாசனாகிய யோபினிடத்தில் போய் உங்களுக்காக சர்வாங்க தகனபலிகளை இடுங்கள். என் தாசனாகிய யோபு உங்களுக்காக வேண்டுதல் செய்வான். நான் அவன் முகத்தைப் பார்த்து உங்களை உங்கள் புத்தியீனத்துக்கு தக்கதாக நடத்தாதிருப்பேன்” என்று ஆலோசனை கூறினார்.

அப்பொழுது தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாதும், நாகமாத்தியனாகிய சோப்பாரும் போய் கர்த்தர் தங்களுக்கு சொன்னபடியே செய்தார்கள். (யோபு 42 : 7 - 9)

4. யோபு சோதிக்கப்படுவதற்கு முன்பு அவனுக்கு இருந்த ஆசீர்வாதத்தையும், அவன் சோதிக்கப்பட்டு பொன்னாக விளங்கின பின்பு அவனுக்கிருந்த ஆசீர்வாதத்தையும் எழுது.

<u>முன்பிருந்த ஆசீர்வாதம் :</u>

யோபு சோதிக்கப்படுவதற்கு முன்பு அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தார்கள். ஏழாயிரம் ஆடுகளும் மூவாயிரம் ஒட்டகங்களும் ஐந்நூறு ஏர்மாடுகளும் ஐந்நூறு கழுதைகளும் இருந்தன. திரளான வேலைக்காரர்களும் இருந்தார்கள். இவைகள் எல்லாவற்றையும் யோபு இழந்தான். (யோபு 1 : 2, 3)

<u>பின்னிலைமையின் ஆசீர்வாதம் :</u>

யோபு சோதிக்கப்பட்டு பொன்னாக விளங்கின பின்பு கர்த்தர் அவனுடைய சிறையிருப்பை மாற்றி அவனுக்கு முன்னிருந்த எல்லாவற்றையும் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்கு தந்தருளினார்.

யோபுவை நிந்தித்து, பரியாசம் பண்ணி, அவனை விட்டு தூரம் போன அவனுடைய எல்லா சகோதரரும் சகோதரிகளும் அவனுக்கு அறிமுகமான அனைவரும் வந்து அவன் வீட்டிலே ஆறுதல் சொல்லி, அவனோடே போஜனம் பண்ணி அவரவர் ஒவ்வொரு தங்க காசையும் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்.

யோபுவிற்கு பதினாலாயிரம் ஆடுகளும் (14,000), ஆறாயிரம் ஒட்டகங்களும் (6000), ஆயிரம் (1000) ஏர்களும் , ஆயிரம் (1000) கழுதைகளும் இரட்டிப்பாய் உண்டாயின.

யோபுவின் இறந்து போன ஏழு குமாரர்களுக்கும், மூன்று குமாரத்திகளுக்கும் பதிலாக திரும்பவும் அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளைப் போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை.

இதற்குப் பின்பு யோபு நூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாளிருந்து, பூரண வயதுள்ளவனாய் மரித்தான். (யோபு 42 : 10 - 17)

**IX** *போதனை* : (2 ½ Marks)

சோதனை வேளைகளில் நம்மை நேசிப்பவர்களாலும் கூட நாம் கைவிடப்படலாம்: அப்படிப்பட்ட நேரங்களில் நாம் நம்பிக்கையின் வார்த்தைகளைக் கூறி மற்றவர்களுக்காக பரிந்து பேசினால் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**********

# கீழ்ப்படியாத தேவமனுஷன்

(1 இராஜா 12 : 20 ; 13 : 1 - 32)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

கலாத்தியர் 1 : 8, 9

நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன், நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேலொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | யெரொபெயாம் | - | இஸ்ரவேலின் ராஜா | (1 இராஜா. 12 : 20) |
| 2. | யெரொபெயாம் ராஜா | - | மரத்துப்போன கை | (1 இராஜா. 13 : 4) |
| 3. | பெத்தேல் | - | பலிபீடம் | (1 இராஜா. 13 : 4) |
| 4. | பெத்தேலின் பலிபீடம் | - | கொட்டுண்ட சாம்பல் | (1 இராஜா. 13 : 5) |
எரிகோவி- ருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எ- சாவினிடத்தில் வந்து, "இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னை விட்டு எடுத்துக் கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று அவனைக் கேட்டார்கள். அதற்கு அவன் "எனக்குத்தெரியும், சும்மா இருங்கள்" என்றான். ( 2 இராஜா 2:5)

**8.** எ- யாவும். எ- சாவும் எரிகோவி- ருந்து யோர்தானை நோக்கி புறப்பட்ட போது, எ- யா எ- சாவிடம் கூறியது என்ன? அதற்கு எ- சாவின் மறுமொழி என்ன?

எ- யா எ- சாவை நோக்கி, "நீ இங்கே இரு; கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார்" என்றான். அதற்கு அவன்; "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும், உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" என்றான். (2 இராஜா 2:6)

**9.** எ- சா எ- யாவைத் தொடர்ந்து சென்ற இடங்கள் யாவை?

கில்கா- - ருந்து பெத்தேலுக்கும், பெத்தே- - ருந்து எரிகோவிற்கும், எரிகோவி- ருந்து யோர்தானுக்கும் எ- சா எ- யாவைத் தொடர்ந்து சென்றான். (2 இராஜா 2:1,2,4,6)

**10.** எ- யாவும் எ- சாவும் யோர்தானை எவ்வாறு கடந்தார்கள்?

எ- யாவும் எ- சாவும் யோர்தானின் கரையிலே நின்றார்கள். அப்பொழுது எ- யா தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான். அது இருபக்கமாகப் பிரிந்தது. அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள். (2 இராஜா 2:8)

**11.** யோர்தானைக் கடந்த பின்பு எ- யா எ- சாவிடம் என்ன கூறினான்?

யோர்தானைக் கடந்த பின்பு எ- யா எ- சாவை நோக்கி, "நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படும் முன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள்" என்றான். (2 இராஜா 2:9)

**12.** எ- யாவிடம் எ- சா வேண்டிக்கொண்ட அரிதான காரியம் என்ன?

எ- சா எ- யாவிடம், "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" என்றான். ( 2 இராஜா 2:9)

**13.** எ- யா எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, எ- சா அவனிடம் வாஞ்சித்து வேண்டிக் கொண்ட காரியம் என்ன? அதற்கு எ- யாவின் நிபந்தனை யாது?

எ- யா எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, எ- சா எ- யாவிடத்திலுள்ள ஆவியின் வரம் தனக்கு இரட்டிப்பாய் கிடைக்க வேண்டுமென்று வாஞ்சித்து கேட்டான். அதற்கு எ- யா தான் எடுத்துக் கொள்ளப்படும்போது எ- சா தன்னைக் கண்டால் அது அவனுக்கு கிடைக்கும். இல்லாவிட்டால் கிடையாது என்றான். (2 இராஜா 2:9,10)

**14.** எ- யா எவ்வாறு பரலோகத்திற்கு ஏறிப் போனான்?

எ- யாவும், எ- சாவும் பேசிக்கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எ- யா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனான். ( 2 இராஜா 2:11)

**15.** எ- யா பரலோகத்திற்கு ஏறிப்போனபொழுது எ- சா எவ்வாறு புலம்பினான்?

எ- யா பரலோகத்திற்கு ஏறிப்போனபொழுது எ- சா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு ரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே" என்று புலம்பினான். (2 இராஜா 2:12)

**16.** எ- யா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு எ- சா எவ்வாறு யோர்தானைக் கடந்தான்?

எ- யா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, அவன் மே- ருந்து கீழே விழுந்த சால்வையை எ- சா எடுத்துக்கொண்டு திரும்பி போய், யோர்தானின் கரையிலே நின்றான். அந்த சால்வையைப் பிடித்து எ- யாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்- யோர்தானின் தண்ணீரை அடித்தான். தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாக பிரிந்ததினால் எ- சா யோர்தானுக்கு இக்கரைப்பட்டான். (2 இராஜா 2:13,14)

**17.** எரிகோவி- ருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எ- சாவைக் கண்டதும் என்ன செய்தார்கள்?

எ- யாவின் ஆவி எ- சாவின் மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்- அவனுக்கு எதிர் கொண்டு போய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள். (2 இராஜா 2:15)

**18.** மரணத்தை ருசிபாராமல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இருவர் யார்? அவர்கள் எப்பொழுது பூமிக்கு திரும்பி வருவார்கள்?

ஏனோக்கும் எ- யாவும் மரணத்தை ருசிபாராமல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் உபத்திரவ காலத்தின் மத்தியில் பூமிக்குத் திரும்பி வருவார்கள். (பாடத்திட்டம்)

**19.** ஏனோக்கும் எ- யாவும் பூமிக்குத் திரும்பி வந்து என்ன செய்வார்கள்?

உபத்திரவ காலத்தின் மத்தியில் பூமிக்குத்திரும்பி வரும் ஏனோக்கும் எ- யாவும் இரட்டு வஸ்திரம் உடுத்திக் கொண்டவர்களாய் ஆயிரத்திருநூற்றறுபது (1260 நாட்கள்) நாளளவும் தீர்க்கதரிசனம் உரைத்து கர்த்தருக்கு சாட்சிகளாயிருப்பார்கள். (வெளி 11:3)

**20.** ஏனோக்கும் எ- யாவும் தங்கள் சாட்சிகளை சொல்- முடித்திருக்கும்போது. அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?

ஏனோக்கும் எ- யாவும் தங்கள் சாட்சிகளை சொல்- முடித்திருக்கும்போது, பாதாளத்தி- ருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்று போடும். (வெளி 11:7)

## VII. *<u>சுருக்கமான விடையளி:</u>* (5Marks)

1. எ- யா தன் சால்வையை எ- சா மீது போட்டவுடன் அவன் என்ன செய்தான்?

எ- யா தன் சால்வையை எ- சா மீது போட்டவுடன் எ- சா மாடுகளை விட்டு எ- யாவின் பிறகே ஓடி, "நான் என் தகப்பனையும், என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும். அதற்கு பின் உம்மைப் பின் தொடர்வேன்" என்றான். பிறகு எ- சா எ- யாவை விட்டுப் போய் ஓர் ஏர் மாடுகளைப் பிடித்து அடித்து ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்கு கொடுத்தான். அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு, அவன் எழுந்து எ- யாவிற்கு பின் சென்று அவனுக்கு ஊழியம் செய்தான்.(1 இராஜா 19:20,21)

2. ஏனோக்கும் எ- யாவும் இரத்த சாட்சிகளாய் மரித்தபின் என்ன சம்பவிக்கும்?
   i. மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்தி- ருந்து ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து அவர்கள் காலூன்றி நிற்பார்கள்.
   ii. அவர்களைப் பார்ப்பவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாகும்.
   iii. இங்கு ஏறிவாருங்கள் என்று வானத்தி- ருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போவார்கள்.
   iv. அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்ப்பார்கள். (வெளி 11:11,12)

## VIII. *விரிவான விடையளி:*

**1.** எ- யாவை தேடுவது பற்றி தீர்க்கதரிசிகளின் புத்திரர் எ- சாவிடம் கூறியது என்ன? அதற்கு எ- சாவின் பதில் யாது?

தீர்க்கதரிசிகளின் புத்திரர் எ- சாவை நோக்கி, "இதோ உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவு கொடும். ஒரு வேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும் பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டு போய் வைத்திருப்பார்" என்றார்கள்.

அதற்கு அவன், "அவர்களை அனுப்ப வேண்டாம்" என்றான். அவன் ச- த்துப் போகுமட்டும் அவர்கள் அவனை அலட்டிக் கொண்டிருந்தபடியால். "அனுப்புங்கள்" என்றான். அப்படியே ஐம்பது பேரை அனுப்பினார்கள்.

அவர்கள் மூன்று நாள் அவனைத் தேடியும் காணாமல், எரிகோவி- ருந்த அவனிடத்திற்குத் திரும்பி வந்த போது, அவன் இவர்களைப் பார்த்து, "போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா" என்றான். (2 இராஜா 2:16-18)

**2.** மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும் எ- யாவும் எப்போது எப்படி மரிப்பார்கள்? அவர்கள் எவ்வாறு உயிர்த்தெழுவார்கள்?

ஏனோக்கும் எ- யாவும் ஏழு வருட உபத்திரவ காலத்தின் மத்தியில் பூமிக்கு திரும்பி வந்து கர்த்தருக்கு சாட்சிகளாக இருந்து இரட்டு வஸ்திரம் உடுத்தி, ஆயிரத்திநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அவர்கள் தங்கள் சாட்சியை சொல்- முடித்திருக்கும் போது, பாதாளத்தி- ருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்று போடும். இப்படியாக அவர்கள் மரிப்பார்கள்.

மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்தி- ருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசிக்கும்.

அப்பொழுது அவர்கள் காலூன்றி நிற்பார்கள்; அவர்களைப் பார்பவர்களுக்கு மிகுந்த பயமுண்டாகும். இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்தி- ருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போவார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்ப்பார்கள். (வெளி 11:3,7,11,12)

## IX. *போதனை:* (2 ½ Marks)

எலியா செய்த ஊழியத்தை எலிசா தொடர்ந்து செய்யும்படி எலியா தன் சால்வையை எலிசாவின் மீது போட்டான். ஆனால், எலிசா எலியாவின் இடத்தை நிரப்புவதில் மட்டும் திருப்தி அடையவில்லை. எலியாவிடத்திலிருந்த ஆவியின் வரம் இரட்டிப்பாய்த் தனக்கு வேண்டும் என அவன் கேட்டான். இக்கடைசி நாட்களிலிருக்கும் நாமுங்கூட பெரிதான அபிஷேகத்தை வாஞ்சிக்க வேண்டும்.

❖❖❖❖❖❖❖❖❖

# சூனேமியாள்

(2 இராஜா 4 : 8-37)

## I *மனப்பாடவசனம் :*

(2 Marks)

எபிரெயர் 6 : 10

ஏனென்றால் உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.

## II *பொருத்துக :*

(1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எலிசா | - | தேவனுடைய மனுஷன் | (2 இரா 4 : 9) |
| 2. | எலிசா | - | பரிசுத்தவான் | (2 இரா 4 : 9) |
| 3. | எலிசா | - | தீர்க்கதரிசி | (2 இரா 9 : 1) |
| 4. | கர்மேல் | - | பர்வதம் | (2 இரா 4 : 25) |
| 5. | கேயாசி | - | எலிசாவின் வேலைக்காரன் | (2 இரா 4 : 12) |
| 6. | சூனேம் | - | ஊர் | (2 இரா 4 : 8) |
| 7. | சூனேமியாள் | - | கனம் பொருந்திய ஸ்தீரி | (2 இரா 4 : 8) |
| 8. | சூனேமியாளின் குமாரன் | - | தலை நோவு | (2 இரா 4 : 19) |

## III *கோடிட்ட இட□களை நிரப்புக :*

(1 Mark)

1. ஏலிசா சூனேமுக்குப் போயிருந்த போது ____________________ போஜனம் பண்ணும்படி அவனை வருந்திக் கேட்டுக் கொண்டாள்.
2. __________________ ஏலிசா தங்கும் படி ஒரு சிறிய அறையைக் கட்டிக் கொடுத்தாள்.
3. ஏலிசா தன் வேலைக்காரனாகிய______________யிடம் சூனேமியாளை அழைத்து வரச் சொன்னான்.
4. தன் குமாரன் மரித்த போது சூனேமியாள் ____________ பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்.
5. எலிசா ____________ தூரத்திலே வரக்கண்டு, அவளுடைய வீட்டாருடைய சுகசெய்தியை விசாரிக்க________________ அனுப்பினாள்.
6. எலிசா கேயாசியிடம் தன் ______________கொடுத்து, அதைப் பிள்ளையின் முகத்தின் மேல் வைக்கச் சொன்னான். ஆனால் அது எவ்வித_______________யும் நடப்பிக்கவில்லை.
7. சூனேமியாளின் பிள்ளை_______________தும்மி தன் கண்களைத் திறந்தான்.
8. நாம்____________ஊழியம் செய்யும் போது____________ ஊழியம் செய்கிறோம்.
9. பரிசுத்தவான்கள் நம்முடைய சோதனை நேரங்களில் நமக்காகப் _______________ நமக்கு உதவி செய்கிறார்கள்.

**விடைகள்**

1. கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ (2 இராஜா 4 : 8 )
2. சூனேமியாள் (2 இராஜா 4 : 10)
3. கேயாசி (2 இராஜா 4 : 12)
4. கர்மேல் (2 இராஜா 4 : 25)
5. சூனேமியாள், கேயாசி ( 2 இராஜா 4 : 25)
6. தடியை (2 இராஜா 4 : 29), அற்புதத்தை(பாடத்திட்டம்)
7. ஏழுதரம் (2 இராஜா 4 : 35)
8. பரிசுத்தவான்களுக்கு, தேவனுக்கே (பாடத்திட்டம்)
9. பரிந்து பேசி ( பாடத்திட்டம்)

## IV *ஒரே வார்த்தையில் விடை எழுது ::*

1. ஏலிசாவுக்காக ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டியது யார்?
   சூனேமியாள் (2 இராஜா 4 : 10)
2. சூனேமியாளுக்கு என்ன குறையிருந்ததாகக் கேயாசி எலிசாவிடம் கூறினான்?
   பிள்ளை இல்லை (2 இராஜா 4 : 14)

3. எலிசாவை சகல சலக்கரணையோடும் விசாரித்து வந்தது யார்?
சூனேமியாள் .(2 இராஜா 4 : 13)

4. தன் பிள்ளை மரித்த பின்பு சூனேமியாள் தேவனுடைய மனுஷனைச் சந்திக்க எங்கு சென்றாள்?
கர்மேல் பர்வதத்திற்கு (2 இராஜா 4 : 25)

5. சூனேமியாளின் பிள்ளை மரித்துப் போனதை எலிசாவுக்கு மறைத்து வைத்தது யார்?
கர்த்தர் (2 இராஜா 4 : 27)

6. சூனேமியாளின் பிள்ளை எத்தனை முறை தும்மி தன் கண்களைத் திறந்தான்?
ஏழுதரம் .(2 இராஜா 4 : 35)

7. சூனேமியாளின் பிள்ளையை உயிரோடு எழுப்பியது யார்?
எலிசா (2 இராஜா 4 : 35)

**V** *<u>யார் யாரிடம் கூறியது</u>* : ( 2 Marks)

1. "நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்". (2 இராஜா 4 : 9)
யார் : சூனேமியாள்
யாரிடம் : தன் புருஷனிடம்

2. **a)** "இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?"
**b)** "இராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ". (2 இராஜா 4 : 13)
யார் : எலிசா
யாரிடம் : கேயாசியிடம் கூறி சூனேமியாளிடம் கேட்கச் சொன்ன வார்த்தைகள்

3. "என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்". (2 இராஜா 4 : 13)
யார் : சூனேமியாள்
யாரிடம் : எலிசாவுக்கு கூறும்படி கேயாசியிடம்

4. "அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன்". (2 இராஜா 4 : 14)
யார் : கேயாசி
யாரிடம் : எலிசாவிடம்

5. "ஒரு பிராண உற்பத்திக் காலத்திட்டத்தில் ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய்". (2 இராஜா 4 : 16)
யார் : எலிசா
யாரிடம் : சூனேமியாளிடம்

6. "எது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம்". (2 இராஜா 4 : 16)
யார் : சூனேமியாள்
யாரிடம் : எலிசாவிடம்

7. "என் தலை நோகிறது, என் தலை நோகிறது". (2 இராஜா 4 : 19)
யார் : சூனேமியாளின் குமாரன்
யாரிடம் : தன் தகப்பனிடம்

8. **a)** "அவளைத் தடுக்காதே : அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது: ".
**b)** "கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் ". (2 இராஜா 4 : 27)
யார் : எலிசா
யாரிடம் : கேயாசியிடம்

9. "என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின் மேல் வை" (2 இராஜா 4 : 29)
யார் : எலிசா
யாரிடம் : கேயாசியிடம்

10. "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன". (2 இராஜா 4 : 30)

யார் : சூனேமியாள்
யாரிடம் : எலிசாவிடம்

11. உன் குமாரனை எடுத்துக் கொண்டு போ. (2 இராஜா 4 : 36)
யார் : எலிசா
யாரிடம் : சூனேமியாளிடம்

## VI *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* :

1. சூனேமில் எலிசாவை உபசரித்தது யார்? அவள் எலிசாவைக் குறித்து தன் புருஷனிடத்தில் கொடுத்த சாட்சி என்ன?

எலிசா சூனேமுக்குப் போகும் போதெல்லாம் அங்கேயிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ அவனை உபசரித்தாள். அவள் தன் புருஷனிடம், இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன், என்று எலிசாவைக் குறித்துக் சாட்சிக் கொடுத்தாள். (2 இராஜா 4 : 9)

2. எலிசா சூனேமியாளுக்கு தான் செய்ய வேண்டியது என்ன என்று கேட்ட போது, அவள் கூறிய மறுமொழி என்ன?

சூனேமியாள், என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன் என்றாள். (2 இராஜா 4 : 13)

3. ஏலிசா கேயாசியிடம் தான் சூனேமியாளுக்குச் செய்ய வேண்டிய, காரியம் ஏதாகிலும் உண்டோ என்றுக் கேட்டபோது, கேயாசி என்ன சொன்னான்?

கேயாசி, அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான். (2 இராஜா 4 : 14)

4. சூனேமியாளுக்குப் பிள்ளையில்லை என்பதை அறிந்த எலிசா என்ன செய்தான்?

ஏலிசா கேயாசியை நோக்கி சூனேமியாளைக் கூப்பிடு என்றான். சூனேமியாள் வந்து வாசற்படியிலே நின்றாள். அப்பொழுது அவன் ஒரு பிராண உற்பத்திக் காலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்றான். (2 இராஜா 4 : 16 )

5. எலிசா சூனேமியாளை ஆசீர்வதித்து ஒரு பிராண உற்பத்திக் காலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்று கூறிய போது அவள் சொன்ன மறு மொழி என்ன?

சூனேமியாள் எலிசாவை நோக்கி, ர்ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று கூறினாள். (2 இராஜா 4 : 16)

6. சூனேமியாளை தூரத்தில் வரக் கண்ட கேயாசியின் மூலம் அவளை எவ்வாறு விசாரித்தான்?

**(அல்லது)**

சூனேமியாளின் வீட்டாரின் மேல் எலிசாவுக்கு இருந்த கரிசனையை எவ்வாறு அறியலாம்?

சூனேமியாளை தூரத்தில் வரக் கண்ட எலிசா, தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து, "அதோ சூனேமியாள் வருகிறாள் நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள்" என்றான். (இதன் மூலம் சூனேமியாளின் வீட்டாரின் மேல் எலிசாவுக்கு இருந்த காரிசனையை அறிந்து கொள்ளலாம்) (2 இராஜா 4 : 26)

7. சூனேமியாள் எலிசாவிடம் தன் துக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தினாள்?

சூனேமியாள் கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்தில் வந்து அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு, "நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்லவில்லையா" என்றாள். (2 இராஜா 4 : 28)

8. எலிசா மரித்த சூனேமியாளின் பிள்ளையை உயிரோடு எழுப்பி அவனை எடுத்துக் கொண்டு போ என்று சூனேமியாளிடம் கூறிய போது அவள் என்ன செய்தாள்?

சூனேமியாள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரை மட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக் கொண்டு வெளியே போனாள். (2 இராஜா 4 : 37)

## VII *சுருக்கமான விடையளி:* (5 Marks)

**1.** சூனேமியாள் எலிசாவை எவ்வாறு உபசரித்தாள்?

சூனேமியாள் எலிசா சூனேம் ஊரைக் கடந்து போகிற போது அவனைப் போஜனம் பண்ணும் படி வருந்திக் கேட்டுக் கொண்டாள். அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்கினான். மேலும் எலிசாவிற்காக தன் வீட்டின் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் ஒரு கட்டிலையும், குத்து விளக்கையும், மேஜையையும், நாற்காலியையும் வைத்து அவன் அவ்விடத்திற்கு வரும் போதெல்லாம் அங்கே தங்கும் படி செய்தாள். இவ்வாறு சூனேமியாள் எலிசாவை உபசரித்தாள். (2 இராஜா 4 : 8-10)

**2.** எலிசா சூனேமியாளின் தேவையை எவ்வாறு அறிந்து கொண்டான்?

எலிசா கேயாசியிடம் ''நீ, சூனேமியாளை அழைப்பித்து, இதோ இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ என்று கேள்'' என்றான். அதற்கு அவள் ''என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்'' என்றாள். பின்பு எலிசா கேயாசியிடம் அவளுக்குச் செய்ய வேண்டியது என்னவென்று கேட்டபொழுது அவன், ''அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன்'' என்றான். இவ்வாறு எலிசா சூனேமியாளின் தேவையை அறிந்து கொண்டான். (2 இராஜா 4 : 12 - 14)

**3.** சூனேமியாளின் பிள்ளை எவ்வாறு செத்துப்போனான்?

சூனேமியாளின் பிள்ளை ஒரு நாள் அறுப்பு அறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும் போது, தன் தகப்பனைப் பார்த்து, என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான். அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில் இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக் கொண்டு போய் விடு என்றான். அவனை எடுத்து அவன் தாயினிடத்தில் கொண்டு போன போது அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப் போனான். (2 இராஜா 4 : 18 - 20)

**4.** ஏலிசா, சூனேமியாளின் மரித்த பிள்ளைக்கு என்ன செய்யும்படி கேயாசியிடம் சொல்லி அனுப்பினான்? அப்பொழுது என்ன நடந்தது?

எலிசா கேயாசியைப் பார்த்து நீ உன் இடையைக் கட்டிக் கொண்டு என் தடியை உன் கையில் பிடித்துக் கொண்டு, வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும் உன்னை ஒருவன் வினவினாலும், அவனுக்கு மறுமொழி சொல்லாமலும் போய் என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின் மேல் வை என்றான். அவன் அவ்வாறு செய்தபோதும் சத்தமும் இல்லை, உணர்ச்சியுமில்லை. ஆகையால் அவன் எலியாவிற்கு எதிர்கொண்டு வந்து பிள்ளை விழிக்க வில்லை என்று அவனுக்கு அறிவித்தான். ( 2 இராஜா 4 : 29, 31)

## VIII *விரிவான விடையளி :*

**1.** சூனேமியாள் தன் பிள்ளை மரித்தவுடன் என்ன செய்தாள்?

சூனேமியாள் மெத்தையின் மேல் ஏறிப்போய் மரித்துப் போன தன் பிள்ளையை தேவனுடைய மனுஷனின் கட்டிலின் மேல் வைத்து அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக் கொண்டு போய், தன் புருஷனிடத்தில் ஆள் அனுப்பி: நான் சீக்கிரமாய் தேவனுடைய மனுஷன் இருக்கும் இடமட்டும் போய் வரும்படிக்கு வேலைக்காரரில் ஒருவனையும் ஒரு கழுதையையும் எனக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லச் சொன்னாள். அப்பொழுது அவன்: இது அம்மாவாசியும் அல்ல, ஓய்வு நாளும் அல்லவே: நீ இன்றைக்கு அவரிடத்திற்குப் போக வேண்டியது என்ன என்று கேட்கச் சொன்னான். அதற்கு அவள் எல்லாம் சரி தான் நான் போக வேண்டியிருக்கிறது என்று சொல்லியனுப்பி கழுதையின் மேல் சேணம் வைத்து ஏறி தன் வேலைக்காரனை நோக்கி இதை ஓட்டிக் கொண்டு போ. நான் உனக்குச் சொன்னாள் ஒழிய போகிற வழியில்

எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே என்று சொல்லிப் புறப்பட்டு, கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்திற்கு வந்து அவன் காலைப் பிடித்துக் கொண்டு, நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரன் வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்று நான் சொல்ல வில்லையா என்றாள். (2 இராஜா 4 : 21-28 )

**2.** எலிசா சூனேமியாளின் மரித்த பிள்ளையை எவ்வாறு உயிரோடெழுப்பினான்?

எலிசா சூனேமியாளின் வீட்டிற்கு வந்த போது, இதோ அந்தப் பிள்ளை அவன் கட்டிலின் மேல் செத்துக் கிடந்தான். உள்ளே போய் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டே போய், தன் வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன் மேல் குப்புறப்படுத்துக் கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து, அறை வீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்ப கிட்டப் போய் அவன் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழு தரம் தும்பி தன் கண்களைத் திறந்தான். இவ்வாறாக எலிசா சூனேமியாளின் பிள்ளையை உயிரோடெழுப்பினான். (2 இராஜா 4 : 32-35 )

**IX** *போதனை :* (2 ½ Marks)

நாம் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும் போது கர்த்தருக்கே ஊழியஞ்செய்கிறோம். அவர் நம்மை ஆசீர்வதிப்பார். பரிசுத்தவான்கள் நமக்காக பரிந்து பேசி நமக்கு உதவி செய்கிறார்கள்.

**********

வகுப்பு : 7

பாடம்-9

# நாகமானின் குஷ்டரோகம் சுகமானது

(2 இராஜா : அதி . 5 )

**I** ***மனப்பாடவசனம் :***

(2 Marks)

எபிரெயர் 4 : 13

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

**II** ***பொருத்துக*** ( 1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | நாகமான் | - | மகா பராக்கிரமசாலி | (2 இராஜா 5 : 1) |
| **2.** | நாகமான் | - | சீரிய ராஜாவின் படைத்தலைவன் | (2 இராஜா 5 : 1) |
| **3.** | நாகமான் | - | குஷ்டரோகி | (2 இராஜா 5 : 1) |
| **4.** | தமஸ்குவின் நதி | - | ஆப்னா | (2 இராஜா 5 : 12) |
| **5.** | தமஸ்குவின் நதி | - | பர்பார் | (2 இராஜா 5 : 12) |
| **6.** | கேயாசி | - | பொய்யன் | ( பாடத்திட்டம் ) |
| **7.** | கேயாசி | - | பொருளாசைக்காரன் | ( பாடத்திட்டம் ) |
| **8.** | எலிசா | - | சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசி | (2 இராஜா 5 : 3) |

**III** ***கோடிட்ட இட□களை நிரப்புக :*** (1 Mark)

**1.** சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய__________ ஒரு குஷ்டரோகியாய் இருந்தான்.

**2.** ______________என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனாய் இருந்தான்.

**3.** நாகமானைக் கொண்டு கர்த்தர் ________________ இரட்சிப்பைக் கட்டளையிட்டார்.

**4.** இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைப்பிடித்துக் கொண்டு வரப்பட்ட ________________ நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து வந்தாள்.

**5.** சீரியாவின் இராஜா கொடுத்தனுப்பிய நிருபத்தை வாசித்த போது ________________ தன் வஸ்திரங்களைக் கிழித்தார்.

**6.** நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து ________________ வாசற்படியிலே நின்றான்.

**7.** எலிசா நாகமானிடத்தில் ஆள் அனுப்பி அவனை ________________ஏழுதரம் ஸ்நானம் பண்ணச் சொன்னான்.

**8.** நாகமான் யோர்தானில் ஏழுதரம் முழுகின போது அவன் மாமிசம் ஒரு________________யின் மாமிசம் போலாயிற்று.

**9.** கேயாசி ஒரு பொருளாசைக்காரன் மட்டுமல்ல ஒரு ________________ஆகவும் இருந்தான்.

**10.** கேயாசி எலிசாவின் சமுகத்தை விட்டு ________________ நிறமான குஷ்டரோகியாகி புறப்பட்டு போனான்.

**11.** நாம் எதைச் செய்தாலும் ________________பரிசுத்தவான்களுக்கும் பயந்து, ________________செய்ய வேண்டும்.

| விடைகள் | |
|---|---|
| 1.. நாகமான் ( 2 இராஜா 5 : 1 ) | 7. யோர்தானில் ( 2 இராஜா 5 : 10 ) |
| 2. நாகமான் ( 2 இராஜா 5 : 1 ) | 8. சிறுபிள்ளை ( 2 இராஜா 5 : 14 ) |
| 3. சீரியாவுக்கு( 2 இராஜா 5 : 1 ) | 9. பொய்யன் ( பாட□தி□டம் ) |
| 4. சிறுபெண் ( 2 இராஜா 5 : 2 ) | 10. உறைந்த மழை ( 2 இராஜா 5 : 27 ) |
| 5. இஸ்ரவேலின் இராஜா ( 2 இராஜா 5 : 7 ) | 11. தேவனுக்கும், உத்தமமாய்ச் (பாட□தி□டம் ) |
| 6. எலிசாவின் ( 2 இராஜா 5 : 9 ) | |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

**1.** எலிசாவின் சமூகத்திலிருந்து குஷ்டரோகியாக புறப்பட்டுப் போனவன் யார்?
கேயாசி ( 2 இராஜா 5 : 27)

**2.** யோர்தானில் நாகமான் எத்தனை தரம் ஸ்நானம் பண்ணினான்?
ஏழு ( 2 இராஜா 5 : 14)

**3.** எந்த நதியில் ஸ்நானம் பண்ணும்படி எலிசா நாகமானிடம் கூறினான்?
யோர்தான் ( 2 இராஜா 5 : 10)

**4.** நாகமானின் காணிக்கையை வாங்க மறுத்த தீர்க்கதரிசி யார்?
எலிசா ( 2 இராஜா 5 : 16)

**5.** குஷ்டரோகியாயிருந்த மகா பராக்கிரமசாலியான மனுஷன் யார்?
நாகமான் ( 2 இராஜா 5 : 1)

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

**1.** என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும், (2 இராஜா 5 : 3)
யார் : இஸ்ரவேல் தேசத்து சிறுபெண்
யாரிடம் : நாகமானின் மனைவியாகிய தன் நாச்சியாரிடம்

**2.** நல்லது போகலாம், இஸ்ரவேல் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன். ( 2 இராஜா 5 : 5)
யார் : சீரியாவின் ராஜா
யாரிடம் : நாகமானிடம்

**3.** **a)** கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா?
**b)** இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான். (2 இராஜா 5 : 7)
யார் : இஸ்ரவேலின் இராஜா
யாரிடம் : தன் அருகில் நின்றவர்களிடம்

**4.** **a)** நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்.
**b)** அவன் என்னிடத்தில் வந்து இஸ்ரவேலிலே தீர்க்கத்தரிசி உண்டென்பதை அறிந்துக் கொள்ளட்டும். (2 இராஜா 5 : 8)
யார் : எலிசா
யாரிடம் : இஸ்ரவேல் ராஜாவிடம் சொல்லியனுப்பினான்.

**5.** நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு (2 இராஜா 5 : 10)
யார் : எலிசா தன் ஆள் மூலமாக
யாரிடம் : நாகமானிடம்

**6.** **a)** தகப்பனே அந்த தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தை செய்ய உமக்கு சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா.
**b)** ஸ்நானம் பண்ணும் அப்பொழுது சுத்தமாவீர் (2 இராஜா 5 : 13)
யார் : நாகமானின் ஊழியக்காரர்
யாரிடம் : நாகமானிடம்

**7.** **a)** இதோ இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத் தவிர பூமி எங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்.

**b)** இப்போதும் உமது அடியான் கையில் ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும். (2 இராஜா 5 : 15)
யார் : நாகமான்
யாரிடம் : எலிசாவிடம்

**8.** நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் .(2 இராஜா 5 : 16)
யார் : எலிசா
யாரிடம் : நாகமானிடம்

**9.** இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை. (2 இராஜா 5 : 17)
யார் : நாகமான்
யாரிடம் : எலிசாவிடம்

**10.** தயவு செய்து இரண்டு தாலந்தை வாங்கிக் கொள். (2 இராஜா 5 : 23 )
யார் : நாகமான்
யாரிடம் : கேயாசியிடம்

**11. a)** அந்த மனுஷன் உனக்கு எதிர்க் கொண்டு வர தன் இரதத்தில் இருந்து இறங்கி திரும்பிகிற போது என் மனம் உன்னுடன் கூட செல்லவில்லையா?
**b)** பணத்தை வாங்குகிறதற்கும் வஸ்திரங்களையும் , வேலைக்காரர்களையும் வாங்குகிறதற்கும் இது காலமா ?
**c)** நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியையும் என்றைக்கும் பிடித்திருக்கும் (2 இராஜா 5 : 26, 27)
யார் : எலிசா
யாரிடம் : கேயாசியிடம்

## VI *ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :*

**1.** நாகமான் யார்?

நாகமான் என்பவன் சீரிய ராஜாவின் படைத் தலைவனாயிருந்தான். அவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பை கட்டளையிட்டார். மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.(2 இராஜா 5 : 1)

**2.** நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தது யார்? அவள் தன் நாச்சியாரிடம் கூறியது என்ன?

இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறை பிடித்துக் கொண்டு வந்த சிறு பெண். நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். ( 2 இராஜா 5 : 2, 3)

**3.** நாகமான் இஸ்ரவேல் தேசத்துப் பெண் சொன்னதை தன் ஆண்டவனாகிய சீரியாவின் இராஜாவிடம் கூறிய போது அவன் கொடுத்த மறுமொழி என்ன?

சீரியாவின் ராஜா நாகமானிடம் நல்லது போகலாம், இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான். (2 இராஜா 5: 5)

**4.** சீரியாவின் இராஜா இஸ்ரவேலின் இராஜாவுக்கு கொடுத்தனுப்பிய நிருபத்தில் என்ன எழுதியிந்தான்?

சீரியாவின் இராஜா இஸ்ரவேலின் இராஜாவுக்கு கொடுத்தனுப்பிய நிருபத்தில், இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான். நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தான். (2 இராஜா 5 : 6)

**5.** சீரியா இராஜா கொடுத்தனுப்பிய நிருபத்தை வாசித்தபோது இஸ்ரவேலின் இராஜா என்ன செய்தான்?

இஸ்ரவேலின் ராஜா சீரியா ராஜா அனுப்பிய நிருபத்தை வாசித்தபோது தன் வஸ்ரங்களைக் கிழித்துக் கொண்டு, ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கி விட வேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்றான்.(2 இராஜா 5 : 7)

6. இஸ்ரவேலின் இராஜா தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்ட செய்தியைக் கேட்டபோது எலிசா என்ன செய்தான்?

இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்ட செய்தியைக் எலிசா கேட்டபோது, "நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வானேன்?. அவன் என்னிடத்தில் வந்து இஸ்ரவேலிலே தீர்க்கத்தரிசி உண்டென்பதை அறிந்துக் கொள்ளட்டும்." என்று ராஜாவுக்கு சொல்லியனுப்பினான். (2 இராஜா 5 : 8)

7. யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு என்று எலிசா கூறியதைக் கேட்டு உக்கிரத்தோடே திரும்பி போன நாகமானிடம் அவன் ஊழியக்காரர் அவன் குற்றத்தை உணர்த்திக் கூறியது என்ன?

அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி, தகப்பனே அந்த தீர்க்கத்தரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும் , அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதை செய்ய வேண்டியது எத்தனை அதிகம்" என்று சொன்னார்கள். (2 இராஜா5 : 13)

8. நாகமான் எவ்வாறு தன் குஷ்டம் நீங்கி சுத்தமானான்?

நாகமான் தேவனுடைய மனுஷனுடைய வார்த்தையின் படியே யோர்தானில் ஏழுதரம் முழுகின போது குஷ்டரோகியாகிய நாகமானின் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்.(2 இராஜா 5 : 14)

9. நாகமான் சுகமான பின்பு இஸ்ரவேலின் தேவனைக் குறித்து எலிசாவிடம் கூறிய சாட்சி என்ன?

நாகமான் சுகமான பின்பு தன் கூட்டத்தோடேல்லாம் தேவனுடைய மனுஷனிடத்திற்கு திரும்பி வந்து அவனுக்கு முன்பாக நின்று : இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன் என்றான். (2 இராஜா 5 : 15)

10. நாகமான் சுகமான பின்பு என்ன தீர்மானம் பண்ணினான்?

நாகமான் சுகமான பின்பு இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் , பலியையும் செலுத்துவதில்லை என்று தீர்மானம் பண்ணினான். (2 இராஜா 5 : 15)

11. எலிசா பொருளாசை அற்றவன் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்?

நாகமான் தன் குஷ்டரோகம் நீங்கி சுகமான பின்பு எலிசாவினிடத்தில் வந்து உமது அடியேன் கையிலே ஒரு காணிக்கை வாங்கிக் கொள்ள வேண்டும் என்றான். அதற்கு எலிசா நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணி விட்டான் . இதன் மூலம் எலிசா பொருளாசை அற்றவன் என்பதை நாம் அறியலாம். (2 இராஜா 5 : 16)

12. நாகமான் எலிசாவை விட்டுப் புறப்பட்டு போன போது கேயாசி என்ன செய்தான்?

கேயாசி அந்த சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் என் கையிலே வாங்காமல் அவனை விட்டு விட்டான். நான் அவன் பிறகே ஓடி அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு அவனைப் பின் தொடர்ந்தான், (2 இராஜா 5 : 20, 21)

13. கேயாசி நாகமானிடம் ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வாஸ்திரங்களையும் கேட்ட போது அவன் என்ன செய்தான்?

நாகமான், ''தயவு செய்து இரண்டு தாலந்தை வாங்கிக் கொள்'' என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு கைகளில் மாற்று வஸ்திரங்களோடு கட்டி அவனுக்கு முன்பாக சுமந்து போக தன் வேலைக்காரன் இரண்டு பேர் மேல் வைத்தான். (2 இராஜா 5 : 23)

**14.** பொருளாசைக்காரானாகிய கேயாசிக்கு கிடைத்த சாபம் என்ன?

பொருளாசைக்காரனாகிய கேயாசி உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி , எலிசாவின் சமூகத்தை விட்டு புறப்பட்டுப் போனான். (2 இராஜா 5 : 27)

**VII** ***<u>சுருக்கமான விடையளி</u>*** : (5 Marks)

**1.** நாகமான் கொண்டு வந்த காணிக்கைகளை எலிசா <u>வாங்க</u> மறுத்த போது, நாகமான் அவனிடம் வேண்டிக் கொண்டது என்ன? எலிசா அவனுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

நாகமான் கொண்டு வந்த காணிக்கைகளை எலிசா வாங்க மறுத்து விட்டான். அப்பொழுது நாகமான் ஆனாலும் இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத்தக்க இரண்டு பொதிமண் உமது அடியேனுக்குக் கட்டளையிட வேண்டும். உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல் அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை. ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக. ஏன் ஆண்டவன் பணிந்து கொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும் போது, நான் அவருக்கு கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலில் பணிய வேண்டியதாகும். இப்படி ரிம்மோன் கோவிலிலே பணிய வேண்டிய இந்த காரியத்தை கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான். அதற்கு எலிசா , சமாதானத்தோடே போ என்றான். (2 இராஜா 5 : 16 - 19)

**2.** பொருளாசையினிமித்தம் நாகமானை பின் தொடர்ந்து விட்டு வந்து" உமது அடியேன் எங்கும் போக வில்லை" என்று பொய் சொன்ன கேயாசியை அவன் எஜமானாகிய எலிசா எவ்வாறு கடிந்து கொண்டு சபித்தான்?

எலிசா கேயாசியைப் பார்த்து, ''அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வர தன் ரதத்திலிலுந்து இறங்கித் திரும்புகிற போது என் மனம் உன்னுடன் கூட செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்ளளையும், ஒலிவ தோப்புகளையும், திராட்சத்தோட்ட களையும், ஆடு மாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றென்றைக்கும் பிடித்திருக்கும்'' என்றான்.(2 இராஜா 5 : 26, 27)

**VIII** ***<u>விரிவான விடையளி</u> :***

**1.** நாகமான் சுகம் அடையும்படியாக எலிசா அவனுக்கு கொடுத்த ஆலோசனை என்ன? அதைக் கேட்டு <u>கடுங்</u> கோபங் கொண்ட நாகமான் என்ன செய்தான்?

நாகமான் சுகம் அடையும்படியாக எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி , நீபோய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண். அப்பொழுது உன் மாமிசம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்.

அதைக் கேட்ட நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டு போய்: 'அவன் (எலிசா) வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தை தடவி , இவ்விதமாய் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகள் ஆகிய அப்னாவும், பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான். (2 இராஜா 5 : 10 - 12)

**2.** கேயாசி ஏன் சபிக்கப்பட்டான் ? (அல்லது) கேயாசி எவ்வாறு குஷ்டரோகி ஆனான்?

நாகமானிடமிருந்து, எலிசா காணிக்கை வாங்காததைக் கண்ட கேயாசி, நான் அவன் பிறகே ஓடி அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிட்டு அவனைப் பின் தொடர்ந்தான். அதைக் கண்ட நாகமான் ரதத் திலிருந்து இறங்கி, சுகசெய்தியா? ஏன்று வினவினான். அதற்கு கேயாசி, சுக செய்தி தான். தீர்க்கத்தரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர்கள் எப்ராயீம் மலை தேசத்திலிருந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியும், இரண்டு மாற்று வஸ்திரமும் தர

வேண்டும் என்றான். அதற்கு நாகமான், தயவு செய்து இரண்டு தாலந்தை வாங்கிக் கொள் என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு பைகளில் மாற்று வஸ்திரங்களோடு கட்டி தன் வேலைக்காரன் இரண்டு பேர் மேல் வைத்து அனுப்பினான். அவன் மேட்டண்டை வந்த போது, அதை அவர்கள் கையில் வாங்கி, அனுப்பி விட்டான். பின்பு தன் எஜமானுக்கு முன் நின்றான். எலிசா கேயாசியே எங்கிருந்து வருகிறாய் என்றான். அதற்கு அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டு வர தன் ரதத்திலிலுந்து இறங்கித் திரும்புகிற போது என் மனம் உன்னுடன் கூட செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரகளையும், ஒலிவ தோப்புகளையும், திராட்சத்தோட்டங்களையும், ஆடு மாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஏன்றான். எலிசா , கேயாசியைப் பார்த்து கடிந்துக் கொண்டு , நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றென்றைக்கும் பிடித்திருக்கும் என்று சபித்தான். அவன் உறைந்த மழைநிறமான குஷ்டரோகத்தோடு , எலிசாவின் சமூகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான். (2 இராஜா 5 : 20 - 27 )

**IX** *போதனை :* (2 ½ Marks)

**i)** தேவ ஊழியரால் கொடுக்கப்படும் ஆலோசனை நம் விருப்பத்திற்கு மாறானவையாயிருந்தாலும் நாம் முழு இருதயத்தோடு அதற்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் நம்மை ஆச்சரியமான விதத்தில் ஆசீர்வதிப்பார்.

**ii)** நாம் கர்த்தருடைய கண்களுக்கு ஒன்றையும் மறைக்க முடியாது. நாம் எதைச் செய்தாலும், தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் பயந்து செய்ய வேண்டும்.

**********

# எலிசாவின் இன்னும் சில அற்புதங்கள்

(இராஜா 2 : 18 - 22 : 4 : 1 - 7 , 38 - 44, 6 : 1 - 20)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

லூக்கா 10 : 19

இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகார கொடுக்கிறேன் ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

சங்கிதம் 77 : 14

அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினீர்.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** எலிசா | - | தேவனுடைய மனுஷன் | (2 இராஜா 4 : 7) |
| **2.** எலிசா | - | இஸ்ரவேலின் தீர்க்கதரிசி | (2 இராஜா 6 : 12) |
| **3.** எரிகோ | - | பாழ் நிலம் | (2 இராஜா 2 : 19) |
| **4.** எரிகோ | - | தண்ணீர் கெட்டது | (2 இராஜா 2 : 19) |
| **5.** எரிகோ | - | பட்டணம் | (2 இராஜா 2 : 19) |
| **6.** தோத்தான் | - | பட்டணம் | (2 இராஜா 6 : 13, 14) |
| **7.** விதவை | - | ஒரு குடம் எண்ணெய் | (2 இராஜா 4 : 2) |
| **8.** சீரியாவின் தண்டுகள் | - | கண் மயக்கம் | (2 இராஜா 6 : 18) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** எரிகோ பட்டணத்தின் மனுஷர் எலிசாவினிடத்தில் வந்து இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு_____________ தண்ணீரோ கெட்டது. நிலமும் _____________ என்றார்கள்.

**2.** எலிசா எரிகோவின் கெட்ட தண்ணீரை ______________போட்டு ஆரோக்கியமாக்கினான்.

**3.** தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஸ்திரியை அயல் வீட்டுக் காரரிடமிருந்து _________________ கேட்டு வாங்கும்படி எலிசா கூறினான்.

**4.** தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஸ்திரியிடம் _________________ விற்று கடனைத் தீர்க்கும்படி எலிசா கூறினான்,

**5.** _________________ லிருந்து ஒரு மனுஷன் எலிசாவிற்கு ___________வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டு வந்தான்.

**6.** எலிசாவும் தீர்க்கதரிசிகளின் புத்திரரும் _________________ நதியருகே வந்தபோது மரங் களை வெட்டினார்கள்.

**7.** யோர்தானின் தண்ணீரில் விழுந்த கோடாரியை _________________மிதக்கப் பண்ணினான்.

**8.** _________________ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வார்த்தையை கேட்டு எச்சரிக்கையாயிருந்து சீரியராஜாவின் கைக்கு தன்னை காத்துக் கொண்டான்.

**9.** எலிசாவைச் சுற்றிலும் _________________ / _________________ அந்த மலை நிறைந்திருக்கிறதை அவனுடைய வேலைக்காரன் கண்டான்.

**10.** எலிசா தன்னைப் பிடிக்கும்படி வந்த சீரியாவின் ஜனங்களுக்கு_________________உண்டாகும்படி ஜெபித்தான்.

| விடைகள் | |
|---|---|
| 1.. நல்லது , பாழ் நிலம் (2 இராஜா 2 : 19) | 6. யோர்தான் (2 இராஜா 6 : 4) |
| 2. உப்பு (2 இராஜா 2 : 21) | 7. எலிசா (2 இராஜா 6 : 6) |
| 3. வெறும் பாத்திரங்களைச் (2 இராஜா 4:3) | 8. இஸ்ரவேலின் ராஜா (2 இராஜா 6 : 10) |
| 4. எண்ணெயை (2 இராஜா 4 : 7) | 9. அக்கினி மயமானகுதிரைகளாலும், இரதங்களாலும் (2 இராஜா 16: 17) |
| 5. பாகால் சலீஷாவில், (2 இராஜா 4 : 42) முதற்பலனான | 10. கண்மயக்கம் (2 இராஜா 6 : 18) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

**1.** எலிசா எரிகோவின் தண்ணீரை ஆரோக்கியமாக்குவதற்காக உப்பை எதிலே போட்டுக் கொண்டு வரும்படி கூறினான்?
புதுத் தோண்டியில் ( 2 இராஜா 2 : 20)

**2.** எரிகோவின் கெட்ட தண்ணீரை ஆரோக்கியமாக்கின தீர்க்கதரிசி யார்?
எலிசா ( 2 இராஜா 2 : 22)

**3.** கர்த்தருக்குப் பயந்து நடந்த தீர்க்கதரிசியின் புத்திரனுக்கு எத்தனை குமாரர்கள் இருந்தார்கள்?
இரண்டு ( 2 இராஜா 4 : 1)

**4.** கர்த்தருக்குப் பயந்து நடந்த தீர்க்கதரிசியின் இரண்டு குமாரரையும் அடிமைகளாக்கிக் கொள்ளும்படி வந்தவன் யார்?
கடன்கொடுத்தவன் ( 2 இராஜா 4 : 1)

**5.** கில்காலில் பஞ்சம் உண்டான போது அங்கிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் யாருக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள்?
எலிசாவுக்கு . ( 2 இராஜா 4 : 38)

**6.** கூழ்ப்பானையில் இருந்த தோஷத்தை மாற்றுவதற்காக எலிசா உபயோகித்த பொருள் என்ன?
மாவு . (2 இராஜா 4 : 41)

**7.** எலிசா இருபது அப்பங்களையும் , தாள் கதிர்களையும் கொண்டு நூறு பேரை எங்கு போஷித்தான்?
கில்காலில் (2 இராஜா 4 : 38,42)

**8.** எலிசா இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டு எத்தனை பேரை போஷித்தான்?
நூறு (2 இராஜா 4 : 43)

**9.** எலிசா யோர்தானின் தண்ணீரில் விழுந்த கோடாரியை எதைப் போட்டு மிதக்கப் பண்ணினான்?
மரக்கொம்பு. (2 இராஜா 6 : 6)

**10.** எலிசாவின் ஆலோசனையினிமித்தம் யாருடைய இருதயம் குழம்பியது?
சீரியா ராஜாவின் (2 இராஜா 6 : 11)

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

**1.** "இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது. தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம்"
(2 இராஜா 2 : 19)
யார் : எரிகோ பட்டணத்தின் மனுஷர்
யாரிடம் : எலிசாவிடம்

2. a) “இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்.”
b) “இனி இதினால் சாவும் வராது. நிலம்பாழும் இராது.” (2 இராஜா 2 : 21)
யார் : எலிசா
யாரிடம் : எரிகோ பட்டணத்தின் மனுஷரிடம்

3. a) “நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?”
b) “வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்” (2 இராஜா 4 : 2)
யார் : எலிசா
யாரிடம் : தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த விதவையிடம்

4. “ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை..” (2 இராஜா 4 : 2)
யார் : தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த விதவையிடம்
யாரிடம் : எலிசாவிடம்

5. “இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா .” (2 இராஜா 4 : 6)
யார் : தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த விதவை
யாரிடம் : தன் மகனிடம்

6. “வேறே பாத்திரம் இல்லை.” (2 இராஜா 4 : 6)
யார் : விதவையின் மகன்
யாரிடம் : விதவையிடம்

7. “தேவனுடைய மனுஷனே , பானையில் சாவு இருக்கிறது” ( 2 இராஜா 4 : 40)
யார் : ஜனங்கள்
யாரிடம் : எலிசாவிடம்

8. “இதை நான் நூறு பேருக்கு முன் வைப்பது எப்படி” (2 இராஜா 4 : 43)
யார் : எலிசாவின் பணிவிடைக்காரன்
யாரிடம் : எலிசாவிடம்

9. “நீர் தயவு செய்து உமது அடியாரோடே கூட வரவேண்டும் ” ( 2 இராஜா 6 : 3)
யார் : தீர்க்கதரிசசகளின் புத்திரரில் ஒருவன்
யாரிடம் : எலிசாவிடம்

10. “ஐயோ என் ஆண்டவனே, அது இரவராக வாங்கப்பட்டதே.” (2 இராஜா 6 : 5)
யார் : தீர்க்கதரிசிகளின் புத்திரன் ஒருவன்
யாரிடம் : எலிசாவிடம்

11. “அது எங்கே விழுந்தது.” (2 இராஜா 6 : 6)
யார் : எலிசா
யாரிடம் : தீர்க்கதரிசிகளின் புத்திரன் ஒருவனிடம்

12. “இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. ” (2 இராஜா 6 : 9)
யார் : எலிசா தன்னுடைய ஆள் மூலம்
யாரிடம் : இஸ்ரவேலின் இராஜாவிடம்
இஸ்ரவேலின் இராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி இவ்வாறு சொல்லச் சொன்னான்.

13. “நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார்”? (2இராஜா 6:9)
யார் : சீரிய ராஜா
யாரிடம் : தன் ஊழியக்காரரிடம்

14. “ஐயோ , என் ஆண்டவனே, என்ன செய்வோம்,” (2 இராஜா 6 : 15)
யார் : எலிசாவின் வேலைக்காரன்
யாரிடம் : எலிசாவிடம்

15. “பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்” (2 இராஜா 6 : 16)

யார் : எலிசா
யாரிடம் : வேலைக்காரனிடம்

16. "இது வழி அல்ல இது பட்டணமும் அல்ல, என் பிறகே வாருங்கள்." (2 இராஜா 6 : 19)
யார் : எலிசா
யாரிடம் : சீரியாவின் இராணுவத்தினிடம்

## VI <u>ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :</u>

1. எரிகோ பட்டணத்தின் மனுஷர் தங்கள் பட்டடணத்தைக் குறித்து எலிசாவிடம் என்ன முறையிட்டார்கள்?
எரிகோ பட்டணத்தின் மனுஷர் எலிசாவிடம் : இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது : தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்று முறையிட்டார்கள் (2 இராஜா2:19)

2. எந்தப் பட்டணத்தின் தண்ணீர் கெட்டதாயிருந்தது? அதை ஆரோக்கியமாக்கினது யார்?
எரிகோ பட்டணத்தின் தண்ணீர் கெட்டதாயிருந்தது. எலிசா அதை ஆரோக்கியமாக்கினான். (2 இராஜா 2 : 19, 21)

3. எலிசா எரிகோ பட்டணத்தின் தண்ணீரை ஆரோக்கியமாக்குவதற்காக அத் தண்ணீரிலே எதைப் போட்டான்? எந்த இடத்தில் கொண்டுபோய் போட்டான்?
புதுத்தோண்டியில் போட்டுக் கொண்டு வரப்பட்ட உப்பை, நீரூற்றண்டைக்குப் போய் அத்தண்ணீரிலே போட்டான். (2 இராஜா 2 : 20, 21)

4. எலிசா எரிகோ பட்டணத்தின் தண்ணீரை ஆரோக்கியமாக்கின பின்பு ஜனங்களிடம் என்ன கூறினான்?
எலிசா எரிகோ பட்டணத்தின் தண்ணீரை ஆரோக்கியமாக்கின பின்பு ஜனங்களிடம் இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (2 இராஜா 2 : 21)

5. கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவை யாரை, எப்போது கூப்பிட்டாள்?
கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவை, கடன்கொடுத்தவன் தன்னுடைய இரண்டு குமாரரையும் அடிமைகளாக்கிக் கொள்ள வந்தபோது, எலிசாவை நோக்கிக் கூப்பிட்டாள். (2 இராஜா 4 : 1)

6. கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவையிடம் எலிசா எத்தனை கேள்விகளைக் கேட்டான்? அவை யாவை?
கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவையிடம் எலிசா இரண்டு கேள்விகளைக் கேட்டான். அவையாவன: 1. நான் உனக்கு என்ன செய்யவேண்டும், 2. வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் (2 இராஜா 4 : 2)

7. கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவையிடம் இருந்தது என்ன? அயல்வீட்டுக்காரர்களிடமிருந்து என்ன வாங்கினாள்?
கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவையிடம் ஒரு குடம் எண்ணெய் மட்டும் இருந்தது.
அயல்வீட்டுகாரர்களிடமிருந்து வெறும் பாத்திரங்களை வாங்கினாள். (2 ராஜா 4 : 2, 3)

8. வெறும் பாத்திரங்களில் எண்ணெய் வார்த்தது யார்? எண்ணெய் எப்போது நின்று போயிற்று?
கடன்பட்டிருந்த தீர்க்கதரிசியின் விதவை வெறும் பாத்திரங்களில் எண்ணெய் வார்த்தாள். அவளுடைய மகன் வேறே பாத்திரம் இல்லை என்று கூறிய போது எண்ணெய் நின்று போயிற்று. (2 இராஜா 4 : 5, 6)

9. வெறும்பாத்திரங்களில் நிரப்பப்பட்ட எண்ணெயை என்ன செய்யும்படி எலிசா விதவையிடம் கூறினான்?
வெறும் பாத்திரங்களில் நிரப்பப்பட்ட எண்ணெயை விற்று, கடனைத் தீர்த்து விட்டு மீந்ததைக் கொண்டு ஜீவன் பண்ணும்படி எலிசா விதவையிடம் கூறினான். (2 ராஜா4:7)

10. தேசத்திலே பஞ்சம் உண்டான போது எலிசா எங்கேயிருந்தான் ? அவனுக்கு முன்பாக யார் உட்டகார்ந்திருந்தார்கள்?

தேசத்திலே பஞ்சம் உண்டான போது எலிசா கில்காலில் இருந்தான். தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள். (2 இராஜா 4 : 38)

**11.** தேசத்திலே பஞ்சம் உண்டான போது தீர்க்கதரிசிகளின் புத்திரருக்காக எலிசா என்ன செய்தான்?

தேசத்திலே பஞ்சம் உண்டான போது எலிசா தன் வேலைக்காரனை நோக்கி, நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்று சொன்னான். (2 ராஜா 4 : 38)

**12.** பானையிலே இருந்த தோஷத்தை எலிசா எவ்வாறு நீக்கினான்?

எலிசா மாவைக் கொண்டு வரச்சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு கொடுங்கள் என்றான். அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற்போயிற்று. (2 இராஜா 4 : 41)

**13.** பாகால் சலிஷாவிலிருந்து வந்த மனுஷன் எலிசாவிற்கு என்ன கொண்டு வந்தான்?

பாகால் சலீஷாவிலிருந்து வந்த மனுஷன் முதற்பாலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும், தாள் கதிர்களையும் எலிசாவிற்கு கொண்டு வந்தான்.(2இராஜா 4:42)

**14.** முதற்பலனான வாற்கோதுமையின் அப்பங்களையும் தாள் கதிர்களையும் எலிசாவிற்கு கொண்டு வந்தது யார்? அதைக் கொண்டு எத்தனை பேரை போஷித்தான்? யாருடைய வார்த்தையின்படி ஜனங்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது?

1. பாகால் சலீஷாவிலிருந்து வந்த ஒரு மனுஷன் கொண்டு வந்தான்.
2. நூறு போரை போஷித்தான்.
3. கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது. (2 இராஜா 4 : 42 - 44)

**15.** பாகால் சலீஷாவிலிருந்து கொண்டு வரப்பட்ட முதற்பலனானவற்றை என்ன செய்யும்படி எலிசா தன் பணிவிடைக்காரனிடம் கூறினான்? அவன் கூறிய மறுமொழி என்ன?

பாகால் சலீஷாவிலிருந்து கொண்டு வரப்பட்ட முதற்பலனானவற்றை ஜனங்களுக்கு சாப்பிடக் கொடுக்கும்படி எலிசா தன் பணிவிடைக்காரனிடம் கூறினான். அதற்கு அவன் இதை நான் நூறு பேருக்கு முன் வைப்பது எப்படி என்றான். (2 ராஜா 4 : 42 - 43)

**16.** யாரோடு குடியிருக்கிற இடம் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு நெருக்கமாய் இருந்தது? குடியிருக்க ஒரு இடத்தை உண்டாக்கும்படி எங்கே போனார்கள்?

எலிசாவுடன் குடியிருக்கிற இடம் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு நெருக்கமாய் இருந்தது. குடியிருக்க ஒரு இடத்தை உண்டாக்கும்படி யோர்தான் மட்டும் போனார்கள். (2 ராஜா 6 : 1, 2,)

**17.** தீர்க்கதரிசிகளின் புத்திரர் எங்கே போய் மரங்களை வெட்டினார்கள்? இரவலாக வாங்கப்பட்ட கோடாரி எப்போது தண்ணீரில் விழுந்தது?

தீர்க்கதரிசிகளின் புத்திரர் யோர்தான் நதியருகே வந்தபோது மரங்களை வெட்டினார்கள். உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடாரி தண்ணீரில் விழுந்தது.(2 ராஜா 6 : 4, 5)

**18.** இரும்பை மிதக்கப்பண்ணிய தேவனுடைய மனுஷன் யார்? எவ்வாறு மிதக்கப்பண்ணினான்?

தேவனுடைய மனுஷனாகிய எலிசா இரும்மை மிதக்கப்பண்ணினான். ஒரு கொம்பை வெட்டி, அதை இரும்புக் கோடாரி விழுந்த இடத்திலே எறிந்து, இரும்பை மிதக்கப் பண்ணினான். (2 இராஜா 6 : 6)

**19.** சீரிய ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணும்படி யாரோடு ஆலோசனை பண்ணினான்? அதை இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவித்தது யார்?

சீரிய இராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும்படி தன் ஊழியக்காரரோடே ஆலோசனை பண்ணினான். அதை தேவனுடைய மனுஷனாகிய எலிசா இஸ்ரவேலின் இராஜாவுக்கு அறிவித்தான்.(2 இராஜா 6 : 8, 9)

**20.** எலிசாவின் ஆலோசனைக்கு கீழ்படிந்து அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டவன் யார்? அந்தக் காரியத்தினிமித்தம் யாருடைய இருதயம் குழம்பியது?

இஸ்ரவேலின் ராஜா எலிசாவின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான். அந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பிற்று (2 ராஜா 6 : 10, 11)

21. இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசாவைக் குறித்து சீரிய ராஜாவின் ஊழியக்காரன் தன் ஆண்டவனிடம் கூறியது என்ன?

சீரிய ராஜாவின் ஊழியக்காரன் தன் ஆண்டவனிடம் , நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகறி வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்று கூறினான். (2 ராஜா 6 : 12)

எலிசாவைப் பிடிக்கும்படி சீரிய ராஜா யாரை அனுப்பினான்? அப்போது எலிசா எங்கே இருந்தான்?

சீரிய ராஜா எலிசாவைப் பிடிக்கும்படி குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான். அப்பொழுது எலிசா தோத்தானில் இருந்தான். (2 ராஜா 6 : 13, 14)

22. பட்டணத்தைச் சுற்றிக் கொண்டிருந்த சீரிய இராணுவத்தைக் கண்டு பயந்த வேலைக்காரனை எலிசா எவ்வாறு தேற்றினான்?

ஏலிசா பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்று சொல்லித் தேற்றினான். (2 ராஜா 6 : 16)

23. ஏலிசா யாருடைய கண்களைத் திறக்கும்படி கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான்? யாருக்கு கண்மயக்கம் உண்டாகும்படி விண்ணப்பம் பண்ணினான்?

ஏலிசா தன் வேலைக்காரனுடைய கண்களைத்திறக்கும்படி கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான்.

சீரிய ராணுவத்தின் ஜனங்களுக்கு கண் மயக்கம் உண்டாகும்படி விண்ணப்பம் செய்தான். (2 ராஜா 6 : 17, 18)

24. கர்த்தர் எலிசாவின் வேலைக்காரனுடைய கண்களைத் திறந்தபோது, அவன் கண்ட காட்சி என்ன?

கர்த்தர் எலிசாவின் வேலைக்காரனின் கண்களைத் திறந்தபோது, இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். (2 ராஜா 6 : 17)

25. தேவனுடைய மனுஷனாகிய எலிசாவை பிடித்துக் கொண்டு போகும்படி வந்த சீரிய ராணுவத்தை சமாரியாவுக்கு வழிநடத்தியது யார்? அவர்கள் பார்க்கும்படிக்குக் அவர்கள் கண்களைத் திறந்தது யார்?

எலிசாவை பிடித்துக் கொண்டு போகும்படி வந்த சீரிய இராணுவத்தை தேவனுடைய மனுஷனாகிய எலிசாவே சமாரியாவுக்கு வழிநடத்தினான்.

அவர்கள் பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறந்தார் .(2 ராஜா 6: 19,20)

## VII <u>சுருக்கமான விடையளி</u> : (5 Marks)

1. எலிசா எரிகோவின் தண்ணீரை எவ்வாறு ஆரோக்கியமாக்கினான்?

எலிசா எரிகோ பட்டணத்தின் மனுஷரிடம் ஒரு புதுத் தோண்டியை எடுத்து, அதிலே உப்புப் போட்டுக் கொண்டு வாருங்கள் என்றான். அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய் உப்பை அதிலே போட்டு விட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன், இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். இவ்வாறாக எலிசா எரிகோவின் தண்ணீரை ஆரோக்கியமாக்கினான். (2 ராஜா 2 : 20, 21)

2. கடன்பட்டிருந்த விதவை எலிசாவிடம் கூறியது என்ன?

கடன்பட்டிருந்த விதவை எலிசாவைப் பார்த்து, உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான். உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர், கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள். (2 ராஜா 4 : 1)

3. தீர்க்கதரிசிகளின் புத்திரருக்காக காய்ச்சப்பட்ட கூழ் ஏன் சாப்பிடக் கூடாமற் போயிற்று?

ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க் கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்து வந்து , அவைகளை அறிந்து கூழ்ப்பானையிலே போட்டான். அது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது. ஆகையால் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்காக காய்ச்சப்பட்ட கூழ் சாப்பிடக் கூடாமற் போயிற்று. (2 ராஜா 4 : 39)

4. தீர்க்கதரிசிகளின் புத்திரருக்காக காய்ச்சப்பட்ட கூழ் சாப்பிடக் கூடாமல் போன போது ஜனங்கள் என்ன செய்தார்கள்? எலிசா என்ன செய்தான்?

தீர்க்கதரிசிகளின் புத்திரருக்காக காய்ச்சப்பட்ட கூழ் சாப்பிடக் கூடாமல் போன போது, ஜனங்கள் தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள்.

அப்பொழுது எலிசா மாவைக் கொண்டு வரச் சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி செய்தான். அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று. (2 ராஜா 4 : 40 , 41)

5. தீர்க்கதரிசிகளின் புத்திரர் ஏன் யோர்தானுக்கு போக வேண்டும் என்று எலிசாவிடம் கூறினார்கள்?

தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி, இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான் மட்டும் போய், அவ்விடத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். (2 ராஜா 6 : 1, 2)

6. தேவனுடைய மனுஷனாகிய எலிசா இஸ்ரவேலின் இராஜாவுக்கு கொடுத்த எச்சரிக்கை என்ன?

தேவனுடைய மனுஷனாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி, இன்ன இடத்திற்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் . சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று எச்சரித்தான். (2 ராஜா 6 : 9)

## VIII *விரிவான விடையளி :*

1. கடன்பட்டிருந்த விதவைக்கு எலிசா செய்த அற்புதத்தை பற்றி எழுது., (அல்லது) கடன்பட்டிருந்த விதவை எவ்வாறு ஒரு குடம் எண்ணெயைக் கொண்டு தன் கடன் முழுவதையும் அடைத்தாள்?

எலிசா அவளை நோக்கி, நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான். அவள் அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக் கொண்டு இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள்.

அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி, இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா என்றாள். அதற்கு அவன் : வேறே பாத்திரம் இல்லை என்றான். அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று.

அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன் : நீ போய் அந்த எண்ணெயை விற்று , உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான். (2 ராஜா 4 : 3 - 7)

2. தீர்க்கதரிசிகளின் புத்திரர் யோர்தான் நதியருகே மரங்களை வெட்டும்போது என்ன சம்பவித்தது? அப்பொழுது எலியா செய்த அற்புதம் என்ன? (அல்லது) தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனுடைய தண்ணீரில் விழுந்த கோடரியை எலியா எவ்வாறு திரும்பப் பெறச் செய்தான்?

தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் யோர்தான் நதியருகே வந்தபோது மரங்களை வெட்டினார்கள் ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது. அவன் : ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான்.

தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான். அவன் அந்த இடத்தைக் காண்பித்த போது ஒரு கொம்பை வெட்டி அதை அங்கே எறிந்து அந்த இரும்பை மிதக்கப்பண்ணி, அதை எடுத்துக் கொள் என்றான். அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக் கொண்டான்.

இவ்வாறாக எலிசா தண்ணீரில் விழுந்த கோடாரியை திரும்பப் பெறச் செய்தான். (2 ராஜா 6 : 4 - 7)

**3.** சீரிய ராஜாவின் இருதயம் ஏன் குழம்பிற்று?

சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனை பண்ணினான்.

ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி: இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும் : சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச் சொன்னான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து தனக்குக் குறித்துச் சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப் பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான் . இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பிற்று.(2 ராஜா 6 : 8 - 10)

**4.** ஏலிசா சீரியா இராணுவத்தை எவ்வாறு சமாரியாவிற்கு அழைத்துக் கொண்டு போனான்?

சீரிய இராணுவம் எலிசாவினிடத்தில் வருகையில் அவன் கர்த்தரை நோக்கி, விண்ணப்பம் பண்ணி, இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்: எலிசாவுடைய வார்த்தையின் படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார்.

அப்பொழுது எலிசா அவர்களை நோக்கி: இது வழி அல்ல: நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன் என்று சொல்லி, அவர்களைச் சமாரியாவுக்கு அழைத்துக் கொண்டு போனான்.

அவர்கள் சமாரியாவில் வந்தபோது, எலிசா: கர்த்தாவே இவர்கள் பார்க்கும்படிக்கு இவர்கள் கண்களைத் திறந்தருளும் என்றான்: பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கம்போது இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவே இருந்தார்கள். (2 இராஜா 6 : 18 - 20)

## IX *<u>போதனை :</u>* (2 ½ Marks)

நாமும் தேவனுடைய வல்லமையினால் நிரப்பப்பட்டிருந்தால் தேவன் நம் மூலமாகவும் அற்புதங்களை நடப்பிப்பார்.

*******

வகுப்பு : 7

பாடம்-11

# எசேக்கியா ராஜாவின் சீர்திருத்தங்கள்

( II இராஜா 18 - 1, 4 ; II நாளாகமம் 29 : 1 - 35 ;
30 : 1 - 5, 15, 21 ; 31 : 1 - 4 )

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாக்கோபு 5 : 19, 20

சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகும் போது, மற்றொருவன் அவனை திருப்பினால்,

தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. எசேக்கியா | - | யூதாவின் ராஜா | (2 நாளா 29 : 1) |
| 2. எசேக்கியா | - | ஆகாஸின் குமாரன் | (2 இராஜா 18 : 1) |
| 3. ஆகாஸ் | - | யூதாவின் ராஜா | (2 இராஜா 18 : 1) |
| 4. ஓசெயா | - | இஸ்ரவேலின் ராஜா | (2 இராஜா 18 : 1) |
| 5. நாத்தான் | - | தீர்க்கதரிசி | (2 நாளா 29 : 25) |
| 6. காத் | - | ஞானதிருஷ்டிக்காரன் | (2 நாளா 29 : 25) |
| 7. அபியாள் | - | எசேக்கியாவின் தாய் | (2 நாளா 29 : 1) |
| 8. வெண்கல சர்ப்பம் | - | நிகுஸ்தான் | (2 இராஜா 18 : 4) |
| 9. கீதரோன் | - | ஆறு | (2 நாளா 29 : 16) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. எசேக்கியாவின் தாய் ____________ தகப்பன் ____________.
2. ______________என்னும் யூதாவின் ராஜா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.
3. எசேக்கியா ராஜா தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதம் _________________ கதவுகளைத் திறந்து பழுதுபார்த்தான்.
4. கர்த்தருடைய உக்கிரகோபம் தன்னையும் தன் ஜனத்தையும் விட்டுத்திரும்பும்படிக்கு அவரோடு _________________ பண்ண எசேக்கியா தன் மனதிலே தீர்மானித்தான்.
5. எசேக்கியாவின் நாட்களில் லேவியர் கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே _______________ சுத்திகரிக்க வந்தார்கள்.
6. _____________ காலமே எழுந்திருந்து, நகரத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு, கர்த்தரின் ஆலயத்திற்குப் போனான்.
7. எசேக்கியாவின் நாட்களில் __________ மாதம்_________ தேதி பஸ்காவை ஆசாரித்தார்கள்.
8. எசேக்கியாவின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஏழுநாளளவும் _________________ ஆசாரித்தார்கள்.

விடைகள்

1. அபியாள், ஆகாஸ் (2 இராஜா 18:1, 2)
2. எசேக்கியா, (2 இராஜா 18 : 3)
3. கர்த்தருடைய ஆலயத்தின் (2நாளா29:3)
4. உடன்படிக்கை (2 நாளா 29 : 10)
5. கர்த்தருடைய ஆலயத்தை (2நாளா29:15)
6. எசேக்கியா ராஜா (2 நாளா 29 : 20)
7. இரண்டாம், பதினாலாம் (2 நாளா30: 15)
8. மகா ஆனந்தத்தோடே(2 நாளா 30:21)

## IV *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

1. எசேக்கியா ராஜா யூதாவில் ராஜாவாகும் போது இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருந்தவன் யார்?
   ஓசேயா *( 2 இராஜா 18 : 1)*

2. எசேக்கியா ராஜாவாகும் போது எத்தனை வயதுள்ளவனாயிருந்தான்?
   இருபத்தைந்து *( 2 இராஜா 18 : 2)*

3. எசேக்கியா ராஜா எத்தனை வருஷம் எருசலேமில் அரசாண்டான்?
   இருபத்தொன்பது *( 2 இராஜா 18 : 2)*

4. வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பத்தை உண்டு பண்ணி வைத்தது யார்?
   மோசே *( 2 இராஜா 18 : 4)*

5. பின் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் மோசே உண்டு பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்திற்கு என்ன செய்தார்கள்?
   தூபங்காட்டி வந்தார்கள் *( 2 இராஜா 18 : 4)*

6. லேவியரை, என் குமாரரே என்று அழைத்த ராஜா யார்?
   எசேக்கியா . *(2 நாளா 29 : 11)*

7. கர்த்தருடைய ஆலயத்தில் கண்ட சகல அசுத்தத்தையும் லேவியர் எங்கே கொண்டு போனார்கள்?
   கீதரோன் ஆற்றிற்கு *(2 நாளா 29 : 16)*

8. எசேக்கியா ராஜாவின் நாட்களில் கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்க எத்தனை நாட்களாயிற்று? *(2 நாளா 29 : 17)*
   எட்டு

9. கர்த்தருடைய ஆலயத்தின் வேலைக்காக தங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்வதில் ஆசாரியர்களைப் பார்க்கிலும் மன உற்சாகமுள்ளவர்களாயிருந்தவர்கள் யார்?
   லேவியர் . *(2 நாளா 29 : 34)*

10. கர்த்தருடைய ஆலயத்தில் பலிகள் செலுத்தப்படுதலை புதுப்பித்தது யார்?
    எசேக்கியா . *(2 நாளா 29 : 31-35)*

## V *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

1. (i) “லேவியரே கேளுங்கள் நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிகொண்டு”
   (ii) “அசுத்தமானதை பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்” (2நாளா29:5)
   யார் : எசேக்கியா ராஜா
   யாரிடம் : ஆசாரியரிடமும் லேவியரிடமும்

2. i) “கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு அவரோடே உடன்படிக்கை பண்ண என் மனதிலே நிர்ணயித்துக் கொண்டேன். ” (2 இராஜா 29 : 10)
   ii) “என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்” (2 நாளா 29 : 11)
   யார் : எசேக்கியா ராஜா
   யாரிடம் : ஆசாரியரிடமும் லேவியரிடமும்

3. “இதோ, அவைகள் கர்த்தரின் ஆலயத்திற்கு முன்பாக இருக்கிறது” (2 நாளா 29 : 19)
   யார் : ஆசாரியரும் லேவியரும்
   யாரிடம் : எசேக்கியா ராஜாவிடம்

4. “கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வாருங்கள்.” (2 நாளா 29 : 31)
   யார் : எசேக்கியா ராஜா
   யாரிடம் : சபையாரை பார்த்து

**VI** ***ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :***

**1.** மோசே உண்டு பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்ட ராஜா யார்? அதற்கு அவன் வைத்த பெயர் என்ன?
எசேக்கியா ராஜா மோசே உண்டுபண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான். அதற்கு நிகுஸ்தான் என்று பெயரிட்டான் ( 2 இராஜா 18 : 4)

**2.** கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவற்றை பழுது பார்த்தது யார்? எப்பொழுது?
ஏசேக்கியா ராஜா தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில், கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவற்றை பழுது பார்த்தான். (2நாளா29:11)

**3.** கர்த்தர் லேவியாரை எதற்காக தெரிந்து கொண்டார் என்று எசேக்கியா ராஜா கூறினான்?
கர்த்தருக்கு பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும், தூபங்காட்டுகிறவர்களுமாய் இருக்கவும் கர்த்தர் லேவியரை தெரிந்து கொண்டார் என்று எசேக்கியா ராஜா கூறினான். ( 2 நாளா 29 : 11)

**4.** கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கும்படியாக அதற்குள் பிரவேசித்து சகல அசுத்தத்தையும் ஆலயபிரகாரத்தில் கொண்டு வந்தவர்கள் யார்? பின் அங்கிருந்து வெளியே கொண்டுபோனவர்கள் யார்?
கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து, சகல அசுத்தத்தையும் ஆலயபிரகாரத்தில் கொண்டு வந்தவர்கள் ஆசாரியர்கள் பின், அங்கிருந்து வெளியே கொண்டு போனவர்கள் லேவியர். ( 2 நாளா 29 : 16)

**5.** ராஜாவாகிய எசேக்கியாவும் பிரபுக்களும் ராஜ்யபாரத்திற்காகவும் பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் யூதாவிற்காகவும் பாவநிவாரண பலியாக எவற்றைக்கொண்டு வந்தார்கள்?
பாவநிவாரணபலியாக ஏழு காளைகள், ஏழு ஆட்டுக்கடாக்கள், ஏழு ஆட்டுக்குட்டிகள், ஏழு வெள்ளாட்டுக்கடாக்களைக் கொண்டு வந்தார்கள். (2 நாளா 29:21)

**6.** தாவீதின் நாட்களிலிருந்த தீர்க்கதரிசி யார்? ஞானதிருஷ்டிக்காரன் யார்?
தாவீதின் நாட்களிலிருந்த தீர்க்கதரிசி - நாத்தான்.
தாவீதின் நாட்களிலிருந்த ஞானதிருஷ்டிக்காரன் - காத். (2 நாளா 29 : 25)

**7.** கர்த்தருடைய ஆலயத்தின் பூரிகைகளை ஊதும்படியாகவும் கீத வாத்தியங்களை வாசிக்கும் படியாகவும் எசேக்கியா ராஜா யார் யாரை ஏற்படுத்தினான்?
கர்த்தருடைய ஆலயத்தில் பூரிகைகளை ஊதும்படியாக ஆசாரியரையும், கீதவாத்தியங்களை வாசிக்கும்படியாக லேவியரையும் எசேக்கியா ராஜா ஏற்படுத்தினார். (2நாளா 29 : 26)

**8.** எசேக்கியா ராஜா சபையாரிடம் கர்த்தருடைய ஆலயத்துக்கு என்னென்ன பலிகளை கொண்டு வரச்சொன்னான்?
எசேக்கியா ராஜா சபையாரிடம் தகனபலியையும், ஸ்தோத்திரபலிகளையும் கொண்டுவரச் சொன்னான். ( 2 நாளா 29 : 31)

**9.** சபையார் கொண்டு வந்த சர்வாங்க தகனபலிகளின் தொகை எவ்வளவு?
சர்வாங்க தகனபலிகளின் தொகை ஏழுபது காளைகள், நூறு ஆட்டுக்கடாக்கள், இருநூறு ஆட்டுக்குட்டிகள் ஆகும். (2நாளா 29 : 32)

**10.** சபையார் கொண்டு வந்த பிரதிஷ்டையாக்கப்பட்ட காளைகளும், ஆடுகளும் எத்தனை?
சபையார் கொண்டுவந்த சர்வாங்க தகனபலிகளில் அறநூறு காளைகள், மூவாயிரம் ஆடுகளும் பிரதிஷ்டையாக்கப்பட்டது. ( 2நாளா 29 : 33)

**11.** இஸ்ரவேல்புத்திரர் எசேக்கியா ராஜாவின் நாட்களில் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை எத்தனை நாட்கள் ஆசரித்தார்கள்? எப்படி ஆசரித்தார்கள்?
பளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஏழு நாட்கள் ஆசரித்தார்கள். மகா ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள். (2நாளா30 : 21)

**12.** வெகுகாலமாக கொண்டாடப்படாமல் விடப்பட்டிருந்த எந்த இரு பண்டிகைகளை எசேக்கியா ராஜாவும் இஸ்ரவேல் ஜனங்களும் ஆசரித்தார்கள்?

வெகுகாலமாக கொண்டாடப்படாமல் விடப்பட்டிருந்த பஸ்கா பண்டிகையையும், புளிப்பில்லாத அப்பப் பண்டிகையையும் எசேக்கியா ராஜாவும் இஸ்ரவேல் ஜனங்களும் ஆசரித்தார்கள். (2 நாளா 30 : 1, 21)

13. ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய் கைக்கொள்ளும்படி எசேக்கியா ராஜா ஜனங்களுக்கு கட்டளையிட்டது என்ன?

ஆசாரியரும், லேவியரும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தை உற்சாகமாய் கைக்கொள்ளும்படிஅவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும், எலுசலேமின் குடிகளுக்கும் எசேக்கியா ராஜா கட்டளையிட்டான். (2 நாளா 31 : 4)

## VII *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் வந்ததற்கான காரணத்தையும் அவர்கள் மேல் வந்த நியாயத்தீர்ப்பையும் பற்றி எசேக்கியா ராஜா கூறியது என்ன?

நம்முடைய பிதாக்கள் துரோகம் பண்ணி நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து அவரைவிட்டு விலகு தங்கள் முகங்களை கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டு திருப்பி அதற்கு முதுகைக் காட்டினார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் தேவனுக்கு சர்வாங்க தகனபலி செலுத்தாமலும், தூபங்காட்டாமலும் விளக்குகளை அணைத்துப் போட்டு, மண்டபத்தின் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள். ஆகையால் கர்த்தருடைய கடுங்கோபாம் யூதாவின் மேலும் எருசலேமின் மேலும் வந்தது.

கர்த்தர் அவர்களை துயரத்துக்கும், திகைப்புக்கும், பழிப்புக்கும் ஒப்புக்கொடுத்தார். இதோ இதினிமித்தம் நம்முடைய பிதாக்கள் பட்டயத்தினால் விழுந்து நம்முடைய குமாரரும் நம்முடைய குமாரத்திகளும் நம்முடைய மனைவிகளும் சிறையிருப்பில் அகப்பட்டார்கள் என்று எசேக்கியா ராஜா கூறினான். (2நாளா 29 : 6 - 9)

2. எசேக்கியா ராஜாவின் நாட்களில் பஸ்காவை எங்கு, எப்பொழுது ஆசரிக்கும்படி சபையார் யோசனை பண்ணியிருந்தார்கள்? அதை ஏன் அதின் காலத்தில் ஆசரிக்கக் கூடாமற் போயிற்று? பின்பு எப்பொழுது ஆசரித்தார்கள்?

   a. எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில் இரண்டாம் மாதத்தில் பஸ்காவை ஆசரிக்கும்படி சபையார் ஆலோசித்து இருந்தனர்
   b. ஆசாரியர் போதுமான பேர் தங்களைப் பரிசுத்தம் பண்ணாமலும், ஜனங்கள் எலுசலேமில் இன்னும் கூடி வராமலும் இருந்தபடியால் அதின் காலத்தில் பஸ்காவை ஆசரிக்கக் கூடாமற்போயிற்று.
   c. இரண்டாம் மாதம் பதினாலாம் தேதியிலே பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடித்த பஸ்காவை ஆசரித்தார்கள். (2நாளா 30:1-5,15).

3. எசேக்கியாவின் நாட்களில் இஸ்ரவேலர் பஸ்கா பண்டிகையை ஆசரித்து பின்பு என்ன செய்தார்கள்?

இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், யூதா, பென்யமீன், எப்பிராயீம், மனாசே முதலியவற்றில் உள்ள சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்து அவைகளை தகர்த்து போட்டார்கள். (2நாளா 31 : 1)

## VIII *விரிவான விடையளி :*

1. எசேக்கியா ராஜாவின் சீர்திருத்தங்கள் யாவை? வசன ஆதாரத்துடன் எழுது!

   a. யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டினான். மோசே உண்டு பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை அவன் உடைத்துப்போட்டு அதற்கு நிகுஸ்தான் என்று பெயரிட்டான். (2இராஜா 18 : 4)
   b. அவன் தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவற்றைப் பழுது பார்த்தான்.(2 நாளா 29:3)

c. அவன் ஆசாரியரையும் லேவியரையும் கூட்டிச் சேர்த்து, அவர்கள் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு ஆலயத்தைச் சுத்திகரிக்கும்படியாக அவர்களுக்குக் கட்டளையிட்டான். ( 2நாளா 29 : 4 - 19)

d. அவன் தேவனுடைய ஆலயத்தின் பலிகள் செலுத்தப்படுதலை புதுப்பித்தான். கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம் பண்ணப்பட்டது.(2நாளா29:20-24, 29:31-35, 31 : 2,3)

e. அவன் தேவனுடைய ஆலயத்தில் கீதவாத்தியங்களை வாசிக்கிற லேவியரையும் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்களையும் நிறுத்தினான். (2நாளா 29:25,26, 29:27)

f. ஆசாரியர், லேவியருடைய வகுப்புகளை அவர்கள் வரிசைகளின்படியே, அவரவரை அவர்கள் ஊழியத்தின்படியேயும், அவன் திடப்படுத்தினான்.(2நாளா31:2)

g. ஆசாரியருக்கும், லேவியருக்குமுரிய பாகத்தைக் கொடுக்கும்படி அவன் ஜனங்களுக்குக் கட்டளையிட்டான். ( 2நாளா 31 : 4)

h. வெகுகாலமாக கொண்டாடப் படாமல் விடப்பட்டிருந்த பஸ்கா பண்டிகையையும், புளிப்பில்லா அப்பப் பண்டிகையையும் அவன் ஆசரித்தான்.(2நாளா30:1-5, 15, 21)

**IX** *<u>போதனை :</u>* (2 ½ Marks)

சபையிலிருந்து பின்மாற்றத்தை நீக்கி, அதை ஆதி அன்பிற்குத் திரும்பக் கொண்டுவர நாம் வைராக்கியமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

***********

வகுப்பு : 7

பாடம்-12

# எசேக்கியா வியாதிப்பட்டதும் சுகமானதும்

(2 இராஜா : 20 : 1 - 11)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

யாக்கோபு 5 : 14 - 16

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக : அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணகடவர்கள்.

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** ஏசாயா | - | தீர்க்கதரிசி | (2 இராஜா 20 : 1) |
| **2.** ஏசாயா | - | ஆமோத்சின் குமாரன் | (2 இராஜா 20 : 1) |
| **3.** எசேக்கியா | - | ஜனத்தின் அதிபதி | (2 இராஜா 20 : 5) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** _______________ தன் முகத்தைச் சுவர்புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.

**2.** யூதாவின் ராஜாவாகிய ____________ வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாய் இருந்தான்.

**3.** ___________ உடைய சூரிய கடியாரத்தில் பாகை__________பாகை பின்னிட்டுத் திரும்பியது.

**4.** தேவனுடைய பிள்ளைகள் வியாதிப்படும் போது சுகத்திற்காக ________________ மாத்திரம் தேடவேண்டும்.

விடைகள்
1. எசேக்கியா ( 2 இராஜா 20 : 1 ) 2. எசேக்கியா ( 2 இராஜா 20 : 2 )
3. ஆகாஸ், பத்து ( 2 இராஜா 20 :11) 4. கர்த்தரை (பாடத்திட்டம்)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

**1.** எசேக்கியா வியாதிப்பட்டிருந்தபோது கர்த்ருடைய தூதை அவனுக்கு அறிவித்த தீர்க்கதரிசி யார்?

ஏசாயா *( 2 இராஜா 20 : 1)*

**2.** எசேக்கியாவின் ஆயுசுநாட்கள் எத்தனை வருடம் கூட்டிக் கொடுக்கப்பட்டது?

இருபத்தைந்து *( 2 இராஜா 20 : 6)*

**3.** கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு அடையாளம் கேட்ட ராஜா யார்?

தாவீது *( 2 இராஜா 20 : 8)*

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

**1.** “நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும் நீர் பிழைக்க மாட்டீர்” (2இராஜா 20:1)

யார் : ஏசாயா தீர்க்கதரிசி

யாரிடம் : எசேக்கியா ராஜாவிடம்

2. "நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்" (2 இராஜா 20:3)
யார் : எசேக்கியா ராஜா
யாரிடம் : கர்த்தரிடம்

3. a) உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன். ( 2 இராஜா 20 : 5)
b) இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன். (2 இராஜா 20 : 5)
யார் : கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலம்
யாரிடம் : எசேக்கியா ராஜாவிடம்

4. சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்பவேண்டும். (2 இராஜா 20 : 10)
யார் : எசேக்கியா ராஜா
யாரிடம் : ஏசாயா தீர்க்கதரிசியிடம்

VI ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :

1. எசேக்கியாவின் நாட்களிலிருந்த தீர்க்கதரிசி யார்? அவன் யாருடைய குமாரன்?
எசேக்கியா நாட்களிலிருந்த தீர்க்கதரிசி ஏசாயா. ( 2 இராஜா 20 : 1)
அவன் ஆமோத்சின் குமாரன். (2 இராஜா 20 : 1)

2. மரணத்திற்கு ஏதுவாக வியாதிப்பட்டிருந்த ராஜா யார்? அப்பொழுது அவனிடத்தில் வந்து தேவனுடைய செய்தியை அறிவித்த தீர்க்கதரிசி யார்?
மரணத்திற்கு ஏதுவாக வியாதிப்பட்டிருந்த ராஜா எசேக்கியா (2இராஜா 20 : 1)
அவனிடத்தில் வந்து தேவனுடைய செய்தியை அறிவித்த தீர்க்கதரிசி ஏசாயா.

VII சுருக்கமான விடையளி : (5 Marks)

1. வியாதிப்பட்டிருந்த எசேக்கியா ராஜாவினிடத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசி ஏசாயா சொன்னது என்ன? அவன் கர்த்தரை நோக்கி செய்த விண்ணப்பம் என்ன? எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக சொன்னது என்ன?

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவிடம் நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும். நீர் பிழைக்கமாட்டீர். மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (2 இராஜா 20 : 1)

எசேக்கியா ராஜா கர்த்தரிடம், கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். (2இராஜா 20 : 3)

உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன். மூன்றாம் நாளில் நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன். என்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல், என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலமாய் சொல்லி அனுப்பினார். (2 இராஜா 20 : 5)

2. எசேக்கியா ராஜா ஏசாயா தீர்க்கதரிசியிடம் தான் குணமாகி கர்த்தருடைய ஆலயத்திற்கு போவதற்கு அடையாளம் கேட்ட போது அவர்கள் இருவருக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை குறித்து எழுது?

ஏசாயா தீர்க்கதரிசி, எசேக்கியா ராஜாவிடம் கர்த்தரால் உண்டாகும் அடையாளமாக சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போக வேண்டுமோ, பத்து பாகை பின்னிட்டு திரும்ப வேண்டுமோ என்று கேட்டான். அதற்கு எசேக்கியா சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போகிறது லேசான காரியம், அப்படி வேண்டாம் சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்ப வேண்டும் என்றான். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கி கூப்பிடுகையில் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பத்துப்பாகை பின்னிட்டு திரும்பிற்று. (2 இராஜா 20 : 8 - 11)

VIII விரிவான விடையளி :

1. எசேக்கியா வியாதிப்பட்டதும் அவன் சுகமாக்கப்பட்டதையும் பற்றி விவரித்து எழுது.

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாகயிருந்தான். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி வந்து நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும் நீர் பிழைக்கமாட்டீர் மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது

எசேக்கியா தன் முகத்தை சுவர்புறமாகத் திருப்பிக் கொண்டு கர்த்தரை நோக்கி, ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்ற விண்ணப்பம் பண்ணி எசேக்கியா ராஜா மிகவும் அழுதான்

உடனே கர்த்தருடைய வார்த்தை ஏசாயாவுக்கு உண்டாகி அவர் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன். மூன்றாம் நாளில் நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன். என்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார்.

கர்த்தருடைய வார்த்தைகளை கேட்டவுடன் எசேக்கியா, ஏசாயாவை நோக்கி கர்த்தர் தன்னை குணமாக்குவதற்கும் மூன்றாம் நாளில் ஆலயத்திற்கு போவதற்கும் அடையாளமாக சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது ஏசாயா கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார். கர்த்தருடைய வார்த்தையின்படி எசேக்கியா ராஜா பரிபூரணமான சுகத்தைப் பெற்றான். (2 இராஜா 20 : 1 – 11)

**IX** *<u>போதனை :</u>* (2 ½ Marks)

தேவனுடைய பிள்ளைகள் வியாதிப்படும்போது சுகத்திற்காக எசேக்கியாவைப் போல் தேவனை மாத்திரம் தேட வேண்டும்.

**************

# சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியம்

(அப் : 6 : 3 - 6, 8 : 4 - 17 , 26 - 40 ; 21 : 8, 9)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 1 : 16, 17

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் ; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. சீமோன் | - | மாயவித்தைக்காரன் | (அப். 8 : 9) |
| 2. கந்தாகே | - | எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீ | (அப். 8 : 27) |
| 3. இயேசுகிறிஸ்து | - | தேவனுடைய குமாரன் | (அப். 8 : 37) |
| 4. பிலிப்பு | - | சுவிசேஷகன் | (அப். 21 : 8) |
| 5. பிலிப்புவின் குமாரத்திகள் | - | தீர்க்கதரிசனம் சொல்லுகிற கன்னியாஸ்திரீகள் | (அப். 21 : 9) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________ சமாரியாவிள்ள ஒரு பட்டணத்திற்கு போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.
2. பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ________________ கவனித்தார்கள்.
3. பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்து ________________ என்னும் மாயவித்தைக்காரன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான்.
4. ________________ தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டார்கள்.
5. ________________ பிலிப்புவை காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போகும்படி கூறினார்.
6. எத்தியோப்பிய மந்திரி ________________ தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.
7. ________________ இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டான்.

**விடைகள்**

1. பிலிப்பு (அப். 8 : 5)
2. ஒருமனப்பட்டு (அப். 8 : 6)
3 சீமோன் (அப். 8 : 13)
4. சமாரியர் (அப். 8 : 14)
5 கர்த்தருடைய தூதன் (அப். 8 : 26)
6. ஏசாயா (அப். 8 : 28)
7. எத்தியோப்பிய மந்திரி (அப். 8 : 37)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

1. எத்தியோப்பிய மந்திரியின் இரதத்துடன் சேர்ந்து கொள்ளும்படி பிலிப்பிடம் கூறியது யார்?
   ஆவியானவர் *(அப். 8 : 29)*

2. ஞானஸ்நானம் எடுத்தபின்பு சந்தோஷத்தோடே தன் வழியே போனது யார்?
எத்தியோப்பிய மந்திரி *(அப். 8 : 39)*

3. பிலிப்புவின் வீடு எந்தப் பட்டணத்திலிருந்தது?
செசரியா *(அப். 21 : 8)*

4. பிலிப்புவின் குமாரத்திகள் பெற்றிருந்த ஆவிக்குரிய வரம் என்ன?
தீர்க்கதரிசனம் சொல்லும் வரம் *(அப். 21 : 9)*

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

1. "நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள்." (அப். 8 : 29)
யார் : ஆவியானவர்
யாரிடம் : பிலிப்புவிடம்

2. "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா". (அப். 8 : 30)
யார் : பிலிப்பு
யாரிடம் : எத்தியோப்பிய மந்திரியிடம்

3. "இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன". (அப். 8 : 36)
யார் : எத்தியோப்பிய மந்திரி
யாரிடம் : பிலிப்புவிடம்

4. "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" (அப். 8 : 37)
யார் : பிலிப்பு
யாரிடம் : எத்தியோப்பிய மந்திரியிடம்

**VI** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. முதலாம் நூற்றாண்டில் சபையாரால் பந்தி விசாரணைக்காக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள்?
முதலாம் நூற்றாண்டில் சபையாரால் ஏழு பேர் பந்தி விசாரணைக்காக தெரிந்து கொள்ளப்பட்டார்கள். அவர்கள் பரிசுத்தாவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றவர்களாய் இருந்தார்கள். (அப். 6 : 3)

2. பிலிப்புவுக்கு எத்தனை குமாரத்திகள் இருந்தார்கள்? அவர்கள் எப்படிப் பட்டவர்களாயிருந்தார்கள்?
பிலிப்புவுக்கு நான்கு குமாரத்திகள் இருந்தார்கள். அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாயிருந்தார்கள். (அப் 21 : 9)

3. எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டான போது பிலிப்பு எங்கே போனான்? அங்கு அவன் என்ன செய்தான்?
பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான் .(அப். 8 : 5)

4. சமாரியாவிலுள்ள ஜனங்களை பிரமிக்கப் பண்ணினவன் யார்? அவன் எதைக் கண்டு பிரமித்தான்?
மாயவித்தைக்காரனாகிய சீமோன் சமாரியாவிலுள்ள ஜனங்களை பிரமிக்கப் பண்ணினான்.
அவன் பிலிப்புவினால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். (அப். 8 : 11, 13)

5. சமாரியாவிலுள்ள புருஷரும் ஸ்திரீகளும் எதை விசுவாசித்த போது ஞானஸ்நானம் பெற்றார்கள்?
தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்த போது அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 8 : 12)

6. சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை கேள்விப்பட்டவர்கள் யார்? உடனே அவர்கள் என்ன செய்தார்கள்?

சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். (அப். 8 : 14)

7. ஞானஸ்நானம் பெற்றிருந்த சமாரியர் எப்போது பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்?
அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். (அப். 8 : 16 , 17)

8. கர்த்தருடைய தூதன் பிலிப்பை எங்கு போகச் சொன்னார்?
கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி, “நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய் போ” என்றான். (அப். 8 : 26)

9. எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீ யார்? அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனாயிருந்த எத்தியோப்பியன் பணிந்து கொள்ளும்படி எங்கு வந்தான்?
எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீ கந்தாகே.
அவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்தான் (அப். 8 : 27)

10. எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுடைய மந்திரி எதற்காக எருசலேமுக்கு வந்தான் ? அவன் ஊருக்குத் திரும்பிப் போகும் போது எதை வாசித்துக் கொண்டு போனான்?
பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்தான். அவன் ஊருக்குப் திரும்பிப் போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டு போனான் (அப். 8 : 27, 28)

11. எத்தியோப்பிய மந்திரியின் இரதத்துடனே சேர்ந்து கொள்ளும்படி பிலிப்பிடம் கூறியது யார்? பிலிப்பு யாரை குறித்து மந்திரியிடம் பிரசங்கித்தான்?
ஆவியானவர் பிலிப்பிடம் கூறினார். இயேசுவைக்குறித்து பிரசங்கித்தான்(அப்8:29,35)

12. நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்று எத்தியோப்பிய மந்திரி பிலிப்பிடம் கேட்ட போது பிலிப்பு கூறிய மறுமொழி என்ன?
“நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை” என்று பிலிப்பு கூறினான். (அப். 8 : 37)

13. எத்தியோப்பிய மந்திரி என்ன சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான்?
“இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்” என்று சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான்.(அப். 8 : 38)

14. பிலிப்பின் சுவிசேஷ ஊழியத்தின் மூலம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட மாயவித்தைக்காரன் யார்? மந்திரி யார்?
சீமோன் என்னும் மாயவித்தைக்காரனும் எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுடைய மந்திரியும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். (அப்.8:13,38)

15. பிலிப்பு எந்தப் பட்டணம் முதல் எந்தப் பட்டணம் வரை சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான்?
பிலிப்பு ஆசோத் முதல் செசரியா வரை சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். (அப். 8 : 40)

## VII <u>சுருக்கமான விடையளி</u> : (5 Marks)

1. சமாரியாவில் சுவிசேஷகனாகிய பிலிப்பு செய்த ஊழியத்தைப் பற்றி சுருக்கமாக எழுது.

பிலிப்பு சமாரியாவிள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது, அநேகர் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சீமோன் என்னும் மாயவித்தைக்காரனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். (அப். 8 : 5 - 9, 13)

**2.** எத்தியோப்பிய மந்திரி வாசித்த வேதவாக்கியம் என்ன?

எத்தியோப்பிய மந்திரி வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால், ‘அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று, அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும்’ என்பதே.(அப். 8 : 32, 33)

**VIII**<u>*போதனை :*</u> (2 ½ Marks)

நாம் நம்மில் சுவிசேஷத்தின் ஆவியுள்ளவர்களாய் கர்த்தருக்குக் கீழப்படிந்து அவருக்கு ஊழியஞ்செய்தால் அவர் நம்மைத் தம் கரங்களில் எடுத்துப் பிரயோஜனப்படுத்துவார்.

***************

வகுப்பு : 7

பாடம்-14

# சவுலின் குணப்படுதல்

(அப் : 8 : 1 - 3, 9 : 1 - 22 , 22 : 3, 4 ; பிலி. 3 : 5, 6)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

அப் 22 : 14 , 15

அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்.

நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | சவுல் | - | எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன் | (பிலி. 3 : 5) |
| **2.** | சவுல் | - | இஸ்ரவேல் வம்சத்தான் | (பிலி. 3 : 5) |
| **3.** | சவுல் | - | பென்யமீன் கோத்திரத்தான் | (பிலி. 3 : 5) |
| **4.** | சவுல் | - | எபிரெயன் | (பிலி. 3 : 5) |
| **5.** | சவுல் | - | பரிசேயன் | (பிலி. 3 : 5) |
| **6.** | சவுல் | - | சபையைத் துன்பப்படுத்தினவன் | (பிலி. 3 : 6) |
| **7.** | சவுல் | - | தர்சு பட்டணத்தான் | (அப். 9 : 11) |
| **8.** | அனனியா | - | சீஷன் | (அப். 9 : 10) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தான்.
2. சவுலின் நாட்களில் ________________ உள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று.
3. சவுல் தமஸ்குவுக்குச் சமீபித்த போது ________________ அவனைச் சுற்றி பிரகாசித்தது.
4. தமஸ்குவிலே ________________ என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான்.
5. அனனியா சவுல் மேல் கையை வைத்து ஜெபித்த போது அவன் கண்களிலிருந்து ________________ போன்றவைகள் விழுந்தது.
6. ________________தமஸ்குவிலிருக்கிற யூதர்களைக் கலங்க பண்ணினான்.

<u>விடைகள்</u>

1. சவுல் (அப். 22 : 3)
2. எருசலேமில் (அப். 8 : 1)
3 வானத்திலிருந்து ஒரு ஒளி (அப். 9 : 3)
4. அனனியா (அப். 9 : 10)
5 மீன் செதில்கள் (அப். 9 : 18)
6. சவுல் (அப். 9 : 22)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

1. சவுல் யாரைக் கொலை செய்கிறதற்குச் சம்மதித்திருந்தான்?
   ஸ்தேவானை *(அப். 7 : 58, 8 : 1)*

2. சவுல், கிறிஸ்தவர்களை கட்டி எருசலேமுக்கு கொண்டு வரும்படி, யாரிடத்திலிருந்து நிருபங்களை வாங்கினான்?
   பிரதான ஆசாரியரிடமிருந்து *(அப். 9 : 2)*

3. சவுல் எத்தனை நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான்?
மூன்று நாட்கள் *(அப். 9 : 9)*

4. தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று தமஸ்குவிலுள்ள ஆலயங்களிலே பிரசங்கித்தவன் யார்?
சவுல் *(அப். 9 : 20)*

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

1. "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?." (அப். 9 : 4)
யார் : கர்த்தர்
யாரிடம் : சவுலிடம்

2. "ஆண்டவரே, நீர் யார்?". (அப். 9: 5)
யார் : சவுல்
யாரிடம் : கர்த்தராகிய இயேசுவிடம்

3. "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்". (அப். 9 : 5)
யார் : கர்த்தராகிய இயேசு
யாரிடம் : சவுலிடம்

4. "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" (அப். 9 : 6)
யார் : சவுல்
யாரிடம் : கர்த்தராகிய இயேசுவிடம்

5. a) "நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப். 9 : 15)
b)"அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்." (அப். 9 : 16)
யார் : கர்த்தர்
யாரிடம் : அனனியாவிடம்

6. "நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்." (அப். 9 : 17)
யார் : அனனியா
யாரிடம் : சவுலிடம்

**VI** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. சவுல் எந்தப் பட்டணத்தில் பிறந்தான்? யாருடைய பாதத்தருகே வளர்ந்தான்?
சவுல் சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்தான். கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்தான். (அப். 22 : 3)

2. சவுல் யாரைத் துன்பப்படுத்தினான்? அவனிடம், "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்டது யார்?
சவுல் கர்த்தருடைய சபையையும், சீஷர்களையும் துன்பப்படுத்தினான்.
கர்த்தராகிய இயேசு சவுலிடம், "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்டார். (அப். 9 : 2, 4)

3. வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலை சுற்றி எப்போது பிரகாசித்தது? அப்போது அவனுக்கு என்ன சம்பவித்தது?
சவுல் தமஸ்குவுக்குச் சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். (அப். 9 : 3, 4)

4. வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலை சுற்றி பிரகாசித்த போது அவன் கேட்ட சத்தம் என்ன?

வானத்திலிருந்து ஒரு ஒளி சவுலை சுற்றி பிரகாசித்து, அவன் கீழே விழுந்த போது, ''சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்'' என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். (அப். 9 : 4)

5. 'ஆண்டவரே, நீர் யார்' ? என்று சவுல் கேட்ட போது, கர்த்தர் அவனுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

கர்த்தர், ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்'' என்றார். (அப். 9 : 5)

6. சவுல் நடுங்கித் திகைத்து, கர்த்தரிடத்தில் கேட்டது என்ன? அதற்கு அவர் கொடுத்த மறுமொழி என்ன?

சவுல் நடுங்கித் திகைத்து, ''ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்'' என்றான்.

அதற்கு கர்த்தர், ''நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்'' என்றார். (அப். 9 : 6)

7. சவுலுடன் பிரயாணம் பண்ணின மனுஷர்கள் ஏன் பிரமித்தார்கள்? அவர்கள் சவுலை எங்கே கூட்டிக் கொண்டு போனார்கள்?

சவுலுடன் பிரயாணம் பண்ணின மனுஷர்கள், பேசுகிற சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணாததால் பிரமித்து நின்றார்கள்.

பார்வையிழந்த சவுலை கைலாகு கொடுத்து தமஸ்குவுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். (அப். 9 : 8)

8. சவுல் எத்தனை நாள் பார்வையில்லாதவனாய் இருந்தான்? எவ்வாறு பார்வையடைந்தான்?

சவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் இருந்தான். (அப். 9 : 9)

அனனியா என்னும் சீஷன் அவன்மேல் கையை வைத்து ஜெபித்தபோது, அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்தான். (அப். 9 : 17, 18)

9. தமஸ்குவிலே கர்த்தர் எந்த சீஷனுக்கு தரிசனமானார்? அவனிடம் என்ன சொன்னார்?

தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். கர்த்தர் அவனுக்குத் தரிசனமானார்.

கர்த்தர், ''அனனியாவிடம், நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்ததானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு. அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்'' என்றார்.(அப்.9 : 10, 11)

10. சவுலைக் குறித்து அனனியா கர்த்தரிடம் கூறியது என்ன?

அனனியா கர்த்தரிடம், ''ஆண்டவரே, சவுல் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்திருக்கிறான். தமஸ்குவிலும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறான்'' என்று கூறினான். (அப். 9 : 13, 14)

11. கர்த்தர் அனனியாவுக்கு தரிசனமாகி சவுலை தான் எதற்காக தெரிந்து கொண்டதாக கூறினார்?

கர்த்தர் அனனியாவிடம், ''சவுல் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்'' என்று கூறினார்.(அப். 9 : 15, 16)

12. அனனியா சவுலிடம், கர்த்தர் எதற்காக தன்னை அனுப்பியதாக கூறினான்?

அனனியா சவுலிடம், ''கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்'' என்று கூறினான்.(அப்.9 : 17)

13. தமஸ்குவிலே, 'கிறிஸ்து தேவனுடைய குமாரன்' என்று சவுலின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அவனைக் குறித்து கூறியது என்ன?

சவுலின் பிரசங்கத்தைக் கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு, ''எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டு போகும்படி வந்தவன் இவனல்லவா'' என்றார்கள். (அப் 9 : 21)

**14.** சவுல் எவ்வாறு தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்?

இயேசுவே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, சவுல் பிரசங்கித்தபடியினால் தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணினான். (அப். 9 : 22)

## VII *சுருக்கமான விடையளி* : (5 Marks)

**1.** யூதமார்க்கத்தின்படி சவுலுக்கிருந்த மேன்மைகள் என்ன?

சவுல் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன், பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ் சாட்டப்படாதவன். (பிலி. 3 : 5, 6)

**2.** இரட்சிக்கப்படாததற்கு முன்பு, சவுல் கர்த்தருடைய சபையைப் எவ்வாறு பாழாக்கினான்?

1) சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கினான். (அப்.8:3)

2) மேலும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். (அப். 9 : 1, 2)

## VIII *விரிவான விடையளி* :

**1.** கர்த்தர் எவ்வாறு சவுலை பவுலாக மாற்றினார்? (அல்லது) கர்த்தர் எவ்வாறு சவுலை அவன் அழிக்கத் தேடின விசுவாசத்தை பிரசங்கிக்கிறவனாக மாற்றினார்? (அல்லது) தமஸ்குவிற்குப் போகும் வழியில் சவுல் கண்ட தரிசனத்தைப் பற்றி எழுது.

சவுல் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது, "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், "ஆண்டவரே, நீர் யார்" என்றான்.

அதற்குக் கர்த்தர், "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே. முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" என்றார்.

சவுல் நடுங்கித் திகைத்து, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்றான்.

அதற்கு கர்த்தர், "நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார்.

ஒளியின் மகிமையால் பார்வையை இழந்த சவுல் தமஸ்கு பட்டணத்துக்கு வந்து சேர்ந்தபின் மூன்று நாள் புசியாமலும் குடியாமலும் இருந்தான். அனனியா என்னும் சீஷன் கர்த்தரால் அனுப்பப்பட்டு சவுலினிடத்தில் வந்து அவன் பார்வையடையும்படியாக ஜெபித்தான். சவுல் பார்வையடைந்து, எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான். இப்படியாக சவுல் பவுலாக மாறி, தான் அழிக்கத் தேடின விசுவாசத்தையே பிரசங்கிக்கிறவனாக மாறினான். (அப். 9 : 3 - 20)

## IX *போதனை* : (2 ½ Marks)

நாம் பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிவோமாகில் தேவன் நம்மை முற்றிலும் மாற்றி, அவருக்கேற்ற பாத்திரங்களாக்குவார்.

*************

வகுப்பு : 7

பாடம்-15

# பேதுருவால் செய்யப்பட்ட அற்புதங்கள்

(அப் : 3 : 1 - 10, 9 : 32 - 42)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

மத்தேயு 18 : 18

பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 9 : 1 , 2

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,

தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.

**II** *பொருத்துக* ( 1 Mark)

1. தபீத்தாள் - சீஷி (அப். 9 : 36)
2. தபீத்தாள் - நற்கிரியைகளையும் தருமங்களையும் செய்தவள் (அப். 9 : 36)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே___________, ____________ தேவாலயத்துக்குப் போனார்கள்.
2. பேதுரு தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனிடம் _________________ நாமத்தினாலே எழுந்து நட என்று சொன்னான்.
3. _________________ என்னும் ஊரிலே எட்டு வருஷமாய் ஐனேயா என்னும் பேருள்ள ஒருவன் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்தான்.
4. லித்தாவிலும் சரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் ________________ க் கண்டு கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.
5. யோப்பா பட்டணத்தில் _________________ நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள்.
6. விதவைகள் தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த ________________, _________________ பேதுருவுக்கு காண்பித்தார்கள்.
7. பேதுரு மரித்த தொற்காளை உயிருள்ளவளாக எழுந்திருக்கப் பண்ணினதால் _________________ பட்டணத்தில் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

விடைகள்

1. பேதுருவும், யோவானும் (அப். 3 : 1)
2. நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் (அப். 3 : 6)
3. லித்தா (அப். 9 : 32, 33)
4. ஐனேயாவை (அப் . 9 : 35)
5. தபீத்தாள் (அப். 9 : 36)
6. அங்கிகளையும், வஸ்திரங்களையும் (அப். 9 : 39)
7. யோப்பா (அப். 9 : 42)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

1. பேதுருவும், யோவானும் எந்த மணிநேரத்தில் தேவாலயத்துக்குப் போனார்கள்?
   ஒன்பதாம் *(அப். 3 : 1)*

2. பேதுருவிடம் பிச்சைகேட்ட சப்பாணி எங்கே உட்காரவைக்கப்பட்டிருந்தான்?

   அலங்கார வாசலில் *(அப். 3 : 2)*

3. லித்தா ஊரில் குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்குப் போன அப்போஸ்தலன் யார்?
   பேதுரு *(அப். 9 : 32)*

4. யோப்பா பட்டணத்தார் பேதுருவை அழைத்து வரும்படி எத்தனை மனுஷரை அனுப்பினார்கள்?
   இரண்டு . *(அப். 9 : 38)*

**V** *யார் யாரிடம் கூறியது :* (2 Marks)

1. "எங்களை நோக்கிப் பார்." (அப். 3 : 4)
   யார் : பேதுருவும், யோவானும்
   யாரிடம் : அலங்கார வாசலில் இருந்த சப்பாணியிடம்

2. **a)**"வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை"
   **b)**"என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்". (அப். 3 : 6)
   யார் : பேதுரு
   யாரிடம் : அலங்கார வாசலில் இருந்த சப்பாணியிடம்

3. "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக் கொள்". (அப். 9 : 34)
   யார் : பேதுரு
   யாரிடம் : ஐனேயாவிடம்

**VI** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. அலங்கார வாசலிலிருந்த சப்பாணி யாரிடத்தில் பிச்சை கேட்டான்?
   தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சை கேட்டான். (அப். 3 : 3)

2. அலங்கார வாசலிலிருந்த சப்பாணி யாரை, ஏன் நோக்கிப் பார்த்தான்?
   அலங்கார வாசலிலிருந்த சப்பாணி பேதுருவையும், யோவானையும், அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான். (அப். 3 : 4, 5)

3. அலங்கார வாசலில் உட்கார வைக்கப்பட்டிருந்த சப்பாணி சுகமடைந்தவுடன் என்ன செய்தான்?
   அவன் குதித்தெழுந்து, நின்று நடந்தான். நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு அவர்களுடன் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். (அப். 3 : 8)

4. பேதுரு சுகமாக்கிய திமிர்வாதக்காரனின் பெயர் என்ன? அவன் எவ்வளவு காலம் திமிர்வாதக்காரனாயிருந்தான்?
   பேதுரு சுகமாக்கிய திமிர்வாதக்காரனின் பெயர் ஐனேயா. அவன் எட்டு வருஷம் திமிர்வாதக்காரனாயிருந்தான். (அப். 9 : 33)

5. ஐனேயா சுகமாக்கப்பட்டதைக் கண்டு, யார் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்?
   லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். (அப். 9 : 35)

6. யோப்பா பட்டணத்திலிருந்த சீஷியின் பெயர் என்ன? அவளுடைய நற்பண்புகள் யாவை?
   யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருள்ள ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்.(அப். 9 : 36)

7. பேதுரு தொற்காள் கிடத்தப்பட்டிருந்த மேல் வீட்டுக்குப் போனபோது, அங்கிருந்த விதவைகள் என்ன செய்தார்கள்?
   விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்து நின்றார்கள்.

(அப். 9 : 39)

**8.** தொற்காள் உயிரோடெழுப்பப்பட்டதைக் கேள்விப்பட்ட யோப்பா பட்டணத்தார் என்ன செய்தார்கள்?

யோப்பா பட்டணத்தாரில் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். (அப். 9 : 42)

**9.** கர்த்தர் எப்பொழுது நம்மூலம் அற்புதங்களைச் செய்வார்?

நாம் கர்த்தருடைய வல்லமையை விசுவாசித்தால் கர்த்தர் நம் மூலமாக அற்புதங்களைச் செய்வார். (போதனை)

**VII** ***சுருக்கமான விடையளி*** : (5 Marks)

**1.** பேதுரு தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே உட்கார்ந்திருந்த சப்பாணியை எவ்வாறு குணமாக்கினார்?

பேதுருவும் யோவானும் அவனை உற்றுப் பார்த்து: "எங்களை நோக்கிப் பார்" என்றார்கள்.

அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான்.

அப்பொழுது பேதுரு: "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொல்லி வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. இவ்வாறாக பேதுரு அவனை குணமாக்கினார். (அப். 3 : 4 - 7)

**2.** பேதுரு எட்டு வருஷமாய் திமிர்வாதமுள்ளவனாயிருந்த ஐனேயாவை எவ்வாறு சுகமாக்கினார்?

பேதுரு ஐனேயாவைப் பார்த்து: "ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார் நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக் கொள்" என்றான். உடனே அவன் எழுந்திருந்தான். (அப். 9 : 34)

**3.** தபீத்தாளை பேதுரு எவ்வாறு உயிரோடுடெழுப்பினார்?

பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: "தபீத்தாளே, எழுந்திரு" என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.

அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப் பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். (அப். 9 : 40, 41)

**VIII** ***போதனை :*** (2 ½ Marks)

நாமுங்கூட கர்த்தருடைய வல்லமையை விசுவாசித்தால் கர்த்தர் நம் மூலமாக அற்புதங்களைச் செய்வார்.

*************

# கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு

(அப் : அதி. 10)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 10: 12,13

யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்.

ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

**II** *பொருத்துக* ( 1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** | கொர்நேலியு | - நூற்றுக்கு அதிபதி | (அப். 10 : 1) |
| **2.** | கொர்நேலியு | - தேவ பக்தியுள்ளவன் | (அப். 10 : 2) |
| **3.** | கொர்நேலியு | - தேவனுக்குப் பயந்தவன் | (அப். 10 : 2) |
| **4.** | கொர்நேலியு | - நீதிமான் | (அப். 10 : 22) |
| **5.** | சீமோன் | - தோல் பதனிடுகிறவன் | (அப். 10 : 6) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. கொர்நேலியு என்னும் பேர் கொண்ட மனுஷன், ________________ பட்டணத்திலே இருந்தான்.
2. ________________ யோப்பா பட்டணத்திலிருந்த பேதுருவிடம் மனுஷரை அனுப்பினான்.
3. கொர்நேலியு பேதுருவை தன்னுடைய வீட்டுக்கு அழைப்பித்து, அவனால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி ________________ னாலே தேவயத்தனமாய்க் கட்டளை பெற்றிருந்தான்.
4. கொர்நேலியுவின் ஜெபமும், தானதருமங்களும் ________________ யில் நினைத்தருளப்பட்டது
5. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் ________________ , ________________ அபிஷேகம் பண்ணினார்.
6. பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் ________________ யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.

**விடைகள்**

1. செசரியா (அப். 10 : 1)
2. கொர்நேலியு (அப். 10 : 8)
3 பரிசுத்த தூதன் (அப். 10 : 22)
4. தேவ சந்நிதியில் (அப் . 10 : 31)
5. பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் (அப். 10 : 38)
6. வசனத்தைக் கேட்டவர்கள் (அப். 10 : 44)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

**1.** கொர்நேலியு எந்த நேரத்திலே தேவதூதனை பிரத்தியட்சமாய் தரிசனங் கண்டான்?
ஒன்பதாம் மணி நேரம் *(அப். 10 : 3)*

**2.** பேதுரு எந்த நேரத்தில் ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான்?
ஆறாம் மணி நேரத்தில் *(அப். 10 : 9)*

**3.** ஆறாம் மணி நேரத்தில் ஜெபம் பண்ணும் போது ஞான திருஷ்டி அடைந்தது யார்?
பேதுரு *(அப். 10 : 10)*

**4.** கொர்நேலியு பேதுருவை அழைத்து வரும்படி எத்தனை பேரை அனுப்பினான்?
மூன்று *(அப். 10 : 19)*

5. நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவனும், யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவனுமாக இருந்தது யார்?
   கொர்நேலியு. *(அப். 10 : 22)*

6. கொர்நேலியுவின் வீட்டாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் படி கட்டளையிட்டது யார்?
   பேதுரு. *(அப். 10 : 47)*

7. புற ஜாதியார் மீது, பரிசுத்தாவியானவர் முதல் முதலாக யாருடைய வீட்டில் ஊற்றப்பட்டார்?
   கொர்நேலியுவின் வீட்டில் *(அப். 10 : 44)*

## V <u>*யார் யாரிடம் எப்போது கூறியது* </u>: (2 Marks)

1. **a)** "உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.˙."
   **b)**"பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி."
   **c)** "நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்." (அப். 10 : 4, 5, 6)
   யார் : தேவ தூதன்
   யாரிடம் : கொர்நேலியுவிடம்
   ˙.

2. "பேதுருவே, எழுந்திரு, அடித்துப்புசி". (அப். 10 : 13)
   யார் : தேவன்
   யாரிடம் : பேதுருவிடம்

3. **a)**"இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்". (அப். 10 : 19)
   **b)**" நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ"
   **c)**"நானே அவர்களை அனுப்பினேன். "
   யார் : ஆவியானவர்
   யாரிடம் : பேதுருவிடம்

4. **a)**"இதோ, நீங்கள் தேடுகிறவன் நான் தான்". (அப். 10 : 21)
   **b)**" நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன?"
   யார் : பேதுரு
   யாரிடம் : கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷரிடத்தில்
5. "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான்". (அப். 10 : 26)
   யார் : பேதுரு
   யாரிடம் : கொர்நேலியுவிடம்
6. **a)**"நீங்கள் என்னை அழைப்பித்த போது நான் எதிர் பேசாமல் வந்தேன்.". (அப். 10 : 29)
   **b)**" இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள். "
   யார் : பேதுரு
   யாரிடம் : கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்தவர்களிடம்
7. **a)**"நீர் வந்தது நல்ல காரியம்". (அப். 10 : 33)
   **b)**" தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமுகத்தில் கூடியிருக்கிறோம்"
   யார் : கொர்நேலியு
   யாரிடம் : பேதுருவிடம்

## VI <u>*ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :*</u>

1. கொர்நேலியு யார்? அவன் எங்கே வசித்து வந்தான்?
   கொர்நேலியு இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். அவன் செசரியா பட்டணத்திலே வசித்து வந்தான். (அப். 10 : 1)

2. கொர்நேலியு செய்த எந்தக் காரியங்கள் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியது?
   கொர்நேலியு செய்த ஜெபங்களும், மிகுந்த தருமங்களும் தான் தேவ சந்நிதியில் நினைப்பூட்டுதலாக வந்தெட்டியது.(அப். 10 : 4)

3. பேதுருவின் மறுபெயர் என்ன? பேதுருவை அழைக்கும்படி கொர்நேலியுவிடம் கூறியது யார்?
   பேதுருவின் மறுபெயர் சீமோன். அவனை அழைக்கும்படி தேவ தூதன் கொர்நேலியுவிடம் கூறினான். (அப். 10 : 5)

**4.** தேவதூதன் பேதுரு எங்கே தங்கியிருப்பதாக கொர்நேலியுவிடம் கூறினான்?
பேதுரு, யோப்பா பட்டணத்தில், தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியியருப்பதாக தேவதூதன் கொர்நேலியுவிடம் கூறினான். (அப். 10 : 6)

**5.** தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு கொர்நேலியு என்ன செய்தான்?
கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போன பின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டு பேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவ பக்தியுள்ள ஒருவனையும் அழைத்து, எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, பேதுருவை அழைத்து வரும்படி அவர்களை யோப்பா பட்டத்துக்கு அனுப்பினான். (அப். 10 : 7, 8)

**6.** சீமோனின் வீட்டில் தங்கியிருந்த பேதுரு எப்பொழுது ஞானதிருஷ்டியடைந்து தரிசனம் கண்டான்?
பேதுரு ஆறாம் மணி நேரத்திலே ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணுகையில் அவன் ஞானதிருஷ்டியடைந்து தரிசனம் கண்டான். (அப். 10 : 10)

**7.** ‘தேவன் சுத்தமாக்கினதை தீட்டாக எண்ணாதே’ என்று தேவன் யாரிடம் கூறினார்? எத்தனை முறை கூறினார்?
லிதேவன் சுத்தமாக்கினதை தீட்டாக எண்ணாதே’ என்று தேவன் பேதுருவிடம் மூன்று முறை கூறினார். (அப். 10 : 15, 16)

**8.** பேதுரு தரிசனத்தில் கண்ட கூடு எங்கே எடுத்துக் கொள்ளப்பட்டது? பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்து சிந்தனை பண்ணிக் கொண்டிருக்கையில் அவனுடனே பேசினது யார்?
பேதுரு தரிசனத்தில் கண்ட கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பேதுரு தான் கண்ட தரிசனத்தைக் குறித்து சிந்தனை பண்ணிக் கொண்டிருக்கையில் ஆவியானவர் அவனுடனே பேசினார்.(அப். 10 : 16, 19)

**9.** கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டு வாசற்படியில் வந்து நின்ற போது, ஆவியானவர் பேதுருவுக்கு கொடுத்த ஆலோசனை என்ன?
கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டு வாசற்படியில் வந்து நின்ற போது, ஆவியானவர் பேதுருவிடம், “இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி , ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப் போ : நானே அவர்களை அனுப்பினேன்” என்றார். (அப். 10 : 19)

**10.** பேதுருவோடு கூடக் கொர்நேலியுவின் வீட்டிற்குப் போனவர்கள் யார்? கொர்நேலியு யாரைத் தன்னுடன் கூடவரவழைத்து பேதுருவுக்காகக் காத்திருந்தான்?
பேதுரு, யோப்பா பட்டணத்தாராகிய சில சகோதரருடன் கொர்நேலியுவின் வீட்டிற்குப் போனான்.
கொர்நேலியு தன் உறவின் முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, பேதுருவுக்காகக் காத்திருந்தான். (அப். 10 : 23, 24)

**11.** பேதுருவைக் கண்டதும் கொர்நேலியு என்ன செய்தான்? பேதுரு அவனிடம் என்ன கூறினான்?
பேதுருவைக் கண்டதும் கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான்.
பேதுரு அவனைத் தூக்கியெடுத்து, “எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான்” என்றான்.(அப். 10 : 25, 26)

**12.** யூதனானவனுக்கு எது விலக்கப்பட்டிருக்கிறதென்று பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரிடம் கூறினான்?
அந்நிய ஜாதியானோடே கலந்து, அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறது என்று பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரிடம் கூறினான். (அப். 10 : 28)

**13.** யோப்பா பட்டணத்தில் பேதுரு கண்ட தரிசனத்தின் மூலம் தேவன் அவனுக்கு காண்பித்த சத்தியம் என்ன?
“எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் சொல்லக் கூடாது” என்ற சத்தியத்தை தேவன் பேதுருவுக்கு அவன் கண்ட தரிசனத்தின் மூலம் காண்பித்தார். (அப். 10 : 28)

**14.** கொர்நேலியும் அவன் வீட்டாரும் ஏன் தேவ சமூகத்தில் கூடியிருந்தார்கள்?
தேவனாலே பேதுருவுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் தேவசமூகத்தில் கூடியிருந்தார்கள். (அப். 10 : 33)

15. தேவனுக்கு உகந்தவன் யார் என பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரிடம் கூறினான்?

'எந்த ஜனத்திலாயினும் தேவனுக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்' என்று பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரிடம் கூறினான்.(அப். 10 : 35)

16. தேவன் யாரைப் பரிசுத்த ஆவியினாலும் , வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்? அவர் எப்படிப்பட்டவராக இப்பூமியிலே சுற்றித்திரிந்தார்?

நசரேயானகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் , வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்.(அப். 10 : 38)

17. கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பேசிக் கொண்டிருக்யையில் என்ன நடந்தது?

கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (அப். 10 : 44)

18. பேதுருவோடேகூட யோப்பா பட்டணத்திற்கு வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் ஏன் பிரமித்தார்கள்?

கொர்நேலியுவும் அவன் வீட்டில் கூடியிருந்தவர்களும் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனை புகழுகிறதையும் ,

பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.(அப். 10 : 45, 46)

19. கொர்நேலியுவிற்கும் அவன் வீட்டாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டது யார்? அப்பொழுது அவன் கூறியது என்ன?

பேதுரு லிநம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா' என்று சொல்லி, கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.(அப் 10 : 47, 48)

## VII *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. கொர்நேலியுவின் குணாதிசயங்கள் யாவை?
   1) கொர்நேலியு நீதிமான்
   2) தேவ பக்தியுள்ளவன்
   3) தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவன்
   4) ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன்
   5) எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன்
   6) யூத ஜனங்களெல்லாராலும் நல்லவன் என்று சாட்சி பெற்றவன் (அப். 10 : 2, 22)

2. கொர்நேலியு கண்ட தரிசனம் என்ன? தேவதூதனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனை என்ன?

கொர்நேலியு பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனம் கண்டான். (அப். 10 : 3)

தேவதூதன் அவனிடம் , ர்உன் ஜெபங்களும் , உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுவதாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்ற பேர் கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான், அவனுடைய வீடு கடலோரத்திலே இருக்கிறது. நீ செய்ய வேண்டியதை அவன் உனக்கு சொல்லுவான்ணி என்றான். (அப் 10 : 5, 6)

3. கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் பேதுருவிடம் கூறியது என்ன?

கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் பேதுருவிடம், ர் நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார்ணி என்றார்கள். (அப். 10 : 22)

VIII *விரிவான விடையளி :*

**1.** பேதுரு யோப்பா பட்டணத்திலிருக்கும் போது, கண்ட தரிசனம் என்ன? அத்தரிசனத்தின் மூலமாக தேவன் பேதுருவுக்கு உணர்த்தி தந்த சத்தியம் என்ன?

பேதுரு யோப்பா பட்டணத்திலிருக்கும் போது வானம் திறந்திருக்கிறதாகவும் , நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்,

அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்(அப்.10 : 11, 12)

அத்ததரிசனத்தில், ‘‘பேதுருவே எழுந்திரு, அடித்துப் புசி’’ என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.

அதற்குப் பேதுரு : அப்படியல்ல, ர்ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லைணி என்றான்.

அப்பொழுது : தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று, பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் சொல்லக் கூடாது என்கிற சத்தியத்தை இத் தரிசனத்தின் மூலமாக தேவன் பேதுருவுக்கு உணர்த்தித் தந்தார்.
(அப். 10 : 13 - 16)

**2.** கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு செய்த பிரசங்கத்தின் சாராம்சங்களை எழுது.

கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு

1) தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,
2) எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு, அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறியிருக்கிறார் என்றும்,
3) நசரேயானகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் என்றும்,
4) கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்றும்,
5) அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவானென்றும் பிரசங்கம் பண்ணினான்.
(அப். 10 : 34 - 43)

**3.** கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்புக்காக தேவன் எவ்விதம் கிரியை செய்தார் என்பதை விவரி?

நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவின் ஜெபங்களும், மிகுந்த தருமங்களும் தேவ சந்நிதியில் நினைப்பூட்டுதலாக வந்து எட்டின படியால், கிருபையுள்ள தேவன் கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்படும் நோக்கத்துடன் தமது தூதனை கொர்நேலியிடம் அனுப்பினார். அனுப்பப்பட்ட தூதன் கொர்நேலியுவிற்கு தரிசனமாகி ர்நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்ணி என்றான். இந்த வேளையில் தானே யோப்பா பட்டணத்திலிருந்த பேதுருவுக்கும் கர்த்தர் ஒரு தரிசனத்தை தந்தார். அதாவது வானம் திறந்திருக்கிறதாகவும் , நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒருவிதமான கூடு அவனிடத்தில் இறக்கி விடப்பட்டதும் அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும் , ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கக் கண்டான். பேதுருவே ர்எழுந்திரு, அடித்துப் புசிணி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.

அதற்குப் பேதுரு : அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.

அப்பொழுது : தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று, பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் சொல்லக் கூடாதுணி என்கிற சத்தியத்தைபேதுருவிற்கு தேவன் வெளிப்படுத்திக் கொடுத்தார். இவ்விதமாக

கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் பேதுருவை சந்திக்கும் முன்பாகவே அவனுடைய இருதயத்தை தேவன் ஆயத்தப்படுத்தினார். எனவே தான் கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் பேதுருவை தேடி வந்தபோது, அவன் அவர்களை ஏற்றுக் கொண்டு ஆவியானவர் நடத்திப்பின்படி அவர்களுடனே கூட செசரியா பட்டணத்திற்கு போனான். கொர்நேலியு தன் உறவின்முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காக காத்திருந்தான். அவர்களோடு பேதுரு தேவனுடைய வசனத்தை பிரசங்கித்துக் கொண்டு இருந்தபோது, வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் பரிசுத்தாவியானவர் இறங்கினார். அப்பொழுது பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக கட்டளையிட்டான். இப்படியாக கொர்நேலியுவின் வீட்டாரின் இரட்சிப்புக்காக தேவன் கிரியை செய்தார்.(அப். 10 அதிகாரம்)

**IX** ***போதனை :*** (2 ½ Marks)

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவரையும், எவ்வித வித்தியாசமின்றி, கர்த்தர் இரட்சிக்கிறார். உண்மையும் உத்தமுமான இருதயத்தோடு தம்மை தேடுகிற யாவரையும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

***********

வகுப்பு : 7

பாடம்-17

# பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டது

(அப். 12 : 1-23)

## I *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 கொரிந்தியர் 12: 25,26

சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்.

ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.

## II *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏரோது ராஜா | - | யாக்கோபை கொலை செய்தவன் (அப். 12 : 2) |
| 2. | ஏரோது ராஜா | - | புழுப்புழுத்து இறந்தவன் (அப். 12 : 23) |
| 3. | யோவானுடைய சகோதரன் | - | யாக்கோபு (அப். 12 : 2) |
| 4. | யோவானுடைய தாய் | - | மரியாள் (அப். 12 : 12). |
| 5. | ரோதை | - | ஒற்றுக் கேட்டவள் (அப். 12 : 13) |

## III *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் __________ அவனுக்காக தேவனை நோக்கி __________ ஜெபம் பண்ணினார்கள்.
2. பேதுரு __________ சங்களிகலினாலே கட்டப்பட்டு, இரண்டு __________ நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்.
3. பேதுருவும் தேவதூதனும் நகரத்திற்குப் போகிற __________ அண்டையிலே வந்தபோது அது __________ அவர்களுக்குத் திறவுண்டது.
4. __________ வாசற்கதவைத் தட்டினபோது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள்.
5. மரியாளின் வீட்டில் ஜெபித்தவர்கள் கதவைத் திறந்தபோது __________ கண்டு பிரமித்தார்கள்.
6. ஏரோது பேதுருவைத் தேடிக் காணாமற்போனபோது, __________ விசாரணை செய்து அவர்களை கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.
7. __________ ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து __________ பண்ணினான்.

**விடைகள்**

1. சபையார், ஊக்கத்தோடே (அப். 12 : 5)
2. இரண்டு, சேவகர் (அப். 12 : 6)
3. இருப்புக்கதவு, தானாய் (அப். 12 : 10)
4. பேதுரு (அப். 12 : 13)
5. பேதுருவை (அப். 12 : 16)
6. காவற்காரரை (அப். 12 : 9)
7. ஏரோது, பிரசங்கம் (அப். 12 : 21, 22)

## IV *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. ஏரோது பேதுருவை பிடிக்கத் தொடர்ந்தபோது அது எந்தப் பண்டிகையின் நாட்களாயிருந்தது?
   புளிப்பில்லா அப்பப்பண்டிகை *(அப். 12 : 3)*

2. பேதுருவை சிறைச்சாலையிலிருந்து வெளியே கொண்டு வந்தது யார்?
தேவ தூதன் *(அப். 12 : 6-10)*

3. ரோதை பேதுருவின் சத்தத்தை அறிந்து கதவைத் திறவாமல் ஏன் உள்ளே ஓடினாள்?
சந்தோஷத்தினால் *(அப். 12 : 14)*

4. ஏரோதின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் என்ன சொல்லி ஆர்ப்பரித்தார்கள்?
தேவசத்தம் . *(அப். 12 : 22)*

5. தேவதூதன் அடித்ததினால் புழுப்புழுத்து இறந்தவன் யார்?
ஏரோது ராஜா *(அப். 12 : 23)*

**V** *யார் யாரிடம் கூறியது* : (2 Marks)

1. **a.**"சீக்கிரமாய் எழுந்திரு ... உன் அரையைக்கட்டி உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" (அப். 12 : 7)
**b.**"உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா". (அப். 12 : 8)
யார் : தேவதூதன்
யாரிடம் : பேதுருவிடம்

2. "கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன்" (அப். 12 : 11)
யார் : பேதுரு
யாரிடம் : தனக்குள்ளே

3. "பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார்". (அப். 12 : 14)
யார் : ரோதை
யாரிடம் : மரியாள் வீட்டில் கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவர்களிடம்

4. "நீ பிதற்றுகிறாய்" (அப். 12 : 15)
யார் : மரியாளின் வீட்டில் கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள்
யாரிடம் : ரோதையிடம்

5. "இது மனுஷ சத்தமல்ல, தேவசத்தம்". (அப். 12 : 22)
யார் : தீரியர் சீதோனிய ஜனங்கள்
யாரிடம் : ஏரோது ராகஜாவுக்கு முன்பாக

**VI** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* :

1. ஏரோது ராஜாவின் எந்த செய்கைகள் யூதர்களுக்கு பிரியமாயிருந்தது?
ஏரோது ராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தியதும், யோவானின் சகோதரனாகிய யாக்கோபை கொலை செய்ததும் யூதர்களுக்குப் பிரியமாயிருந்தது (அப். 12 : 1 - 3).

2. ஏரோது பேதுருவை எந்தப் பண்டிகை நாட்களில் பிடித்து சிறையிலிட்டான்? எந்தப் பண்டிகை நாட்களுக்குப்பின் அவனை வெளியே கொண்டு வர எண்ணினான்?
புளிப்பில்லா அப்பப்பண்டிகை நாட்களில் பிடித்து சிறையிலிட்டான். பஸ்கா பண்டிகைக்கு பின்பு அவனை வெளியே கொண்டு வர எண்ணினான் (அப். 12 : 3, 4).

3. பேதுரு சிறையில் காக்கப்பட்டிருந்தபோது சபையார் என்ன செய்தார்கள்?
பேதுரு சிறைச்சாலையில் காக்கப்பட்டிருந்தபோது சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடு ஜெபம் பண்ணினார்கள் (அப். 12 : 5).

4. ஏரோதினால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பேதுரு எப்பொழுது யாரால் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டான்?
ஏரோது ராஜா பேதுருவை வெளியே கொண்டு வர குறித்திருந்த நாளுக்கு முந்தின இரவு கர்த்தருடைய தூதனால் விடுதலையாக்கப்பட்டான் (அப். 12 : 6, 7).

5. பேதுரு யாரால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டான்? யாரால் விடுதலையாக்கப்பட்டான்?
பேதுரு ஏரோது ராஜாவால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டான். தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டான் (அப். 12 : 4, 7, 10).

6. தான் தரிசனம் காண்கிறதாக நினைத்த பேதுருவுக்கு தெளிவு வந்தபோது அவன் கூறியது என்ன?

“ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்து இருக்கிறேன்” என்று பேதுரு கூறினான் (அப். 12 : 11).

7. சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்த பேதுரு யாருடைய வீட்டிற்கு சென்றான்? அந்த வீட்டிலிருந்தவர்கள் அப்பொழுது என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்த பேதுரு மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டிற்கு சென்றான். அப்பொழுது அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள் (அப். 12 : 12).

8. பேதுருவின் சத்தத்தை கேட்டறிந்த சந்தோஷத்தினால் ரோதை என்ன செய்தாள்?

ரோதை பேதுருவின் கத்தத்தைக் கேட்டறிந்த சந்தோஷத்தினால் கதவை திறவாமல், உள்ளே ஓடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள் (அப். 12 : 14).

9. ரோதை கூறியதைக் கேட்டவுடன், ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவர்கள் அவளுக்கு மறுமொழியாக கூறியவைகள் யாவை?

ரோதை கூறியதை கேட்டவுடன் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள், நீ பிதற்றுகிறாய், என்றார்கள். தட்டுவது பேதுருவுடைய தூதனாயிருக்கலாம் என்று கூறினார்கள் (அப். 12 : 15).

10. மரியாளின் வீட்டில் ஊக்கமாய் ஜெபித்துக்கொண்டிருந்தவர்கள் பிரமிக்கக் காரணம் என்ன? அவர்களிடம் பேதுரு என்ன கூறினான்?

மரியாளின் வீட்டில் ஊக்கமாய் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தவர்கள் பேதுருவைக் கண்டதினால் பிரமித்தார்கள். பேதுரு அவர்களை பேசாமலிருக்கும்படி கையமர்த்தி கர்த்தர் தன்னைக் காவலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து இந்தச் செய்தியை யாக்கோபுக்கும், சகோதரருக்கும் அறிவியுங்கள் என்றான் (அப். 12 : 16, 17).

11. ஏரோது யார் மேல் மிகவும் கோபமாயிருந்தான்? அவர்கள் யாரைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்?

ஏரோது தீரியர் பேரிலும் சீதோனியர் பேரிலும் கோபமாயிருந்தான். ஏரோது ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பாலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு சமாதானம் கேட்டுக் கொண்டார்கள் (அப். 12 : 20).

12. கர்த்தருடைய தூதன் ஏரோதை ஏன் அடித்தான்? ஏரோது எவ்வாறு இறந்தான்?

ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் அவனை கர்த்தருடைய தூதன் அடித்தான். ஏரோது புழுப்புழுத்து இறந்தான் (அப். 12 : 23).

## VII <u>*சுருக்கமான விடையளி:*</u> (5 Marks)

1. பேதுரு தேவதூதனால் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டு மரியாளுடைய வீட்டின் வாசற்கதவை தட்டியபோது நடந்தது என்ன?

பேதுரு மரியாளுடைய வீட்டின் வாசற்கதவைத் தட்டினபோது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத்திறவாமல் உள்ளேயோடி பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். அதற்கு அவர்கள் நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய் சாதித்தாள். அப்பொழுது அவர்கள் அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள். பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக்கண்டு பிரமித்தார்கள் (அப். 12 : 13 - 16).

2. ஏரோது கர்த்தருடைய தூதனால் ஏன் அடிக்கப்பட்டான் என்பதை விவரி.

ஏரோது தீரியர் பேரிலும் சீதோனியர் பேரிலும் கோபமாயிருந்தான். ஏரோது ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பாலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு சமாதானம் கேட்டுக் கொண்டார்கள். (அப். 12 : 20). ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து தன்னுடன் சமாதானம் பண்ணிக்கொண்ட தீரியர் சீதோனியருக்கு பிரசங்கம் பண்ணினான். அப்பொழுது அவர்கள் இது மனுஷசத்தமல்ல. இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமை செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அப்பொழுது அவன் புழுப்புழுத்து இறந்தான் (அப். 12 : 21 - 23).

## VIII *விரிவான விடையளி :*

1. ஏரோதினால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பேதுரு எவ்வாறு அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டான் என்பதை விவரி.

பேதுருவை சிறைச்சாலையில் வைத்திருந்த ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தினநாள் இராத்திரியிலே பேதுரு இரண்டு சங்கலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவிலே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான். காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அவன் பேதுருவை விலாவிலே தட்டி சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் அவனிடம் உன் அரையைக் கட்டிக்கொண்டு பாதரட்சைகளைத் தொடுத்துக்கொண்டு வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பினனே வா என்றான். அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்றான். தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல் தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாம் இரண்டாம் காவல்களைக் கடந்து இருப்புக் கதவண்டையிலே வந்தபோது கதவு தானாய்த் திறவுண்டது. அவர்கள் ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள். உடனே தூதன் அவனைவிட்டுப் போய்விட்டான். பேதுருவுக்கு தெளிவு வந்தபோது ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் தன்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று அறிந்துகொண்டான். இவ்வாறு பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டான் (அப். 12 : 6 - 11).

## IX *போதனை :* (2 Marks)

நாம் பலவிதங்களிலும் கட்டப்பட்டிருக்கிற தேவ ஜனங்களுக்காக கருத்தாய் ஜெபிக்க வேண்டும்.

**********

வகுப்பு : 7

பாடம்-18

# அப். பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி I)

(அப். 13 : 1-14, 42-50)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ரோமர் 8:18

ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.

**II** *பொருத்துக :* (1 Mark)

1. நீகர் - சிமியோன் (அப். 13 : 1)
2. பர்யேசு - மாய வித்தைக்காரன் (அப். 13 : 6)
3. பர்யேசு - கள்ளத்தீர்க்கதரிசி (அப். 13 : 6)
4. பர்யேசு - யூதன் (அப். 13 : 6)
5. பர்யேசு - எலிமா (அப். 13 : 8)
6. பர்யேசு - நீதிக்கு பகைஞன் (அப். 13 : 10)
7. செர்கியுபவுல் - விவேகமுள்ள மனுஷன் (அப். 13 : 7)
8. கர்த்தராகிய இயேசு - ஜாதிகளுக்கு ஒளி (அப். 13 : 47)

**III1** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. __________ யும், __________ யும் நான் அழைத்த ஊழியத்துக்காக பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.
2. சாலமி பட்டணத்தில் பவுலுக்கும் பர்னபாவுக்கும் __________ என்பவன் உதவிக்காரனாயிருந்தான்.
3. பவுலும், பர்னபாவும் __________ பட்டணத்தில் __________ என்னும் மாயவித்தைக்காரனைக் கண்டார்கள்.
4. எலிமா என்பவன் __________ என்னும் அதிபதியை விசுவாசத்திலிருந்து திருப்பும்படி வகை தேடினான்.
5. பவுலும் பர்னபாவும் __________ பட்டணத்திற்கு வந்தபோது __________ அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமுக்குப் போனான்.
6. ஓய்வுநாளிலே________________ பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தை கேட்க்கும்படி கூடி வந்தார்கள்.
7. தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்த ஜனக்கூட்டங்களைக் கண்ட யூதர்கள் __________ யினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு __________ பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்.
8. கர்த்தருடைய வசனத்தைக் கேட்டவர்களில் __________ க்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.

**விடைகள்**

| | |
|---|---|
| 1. பவுல், பர்னபா (அப். 13 : 2) | 5. பெர்கே, யோவான் (அப். 13 : 13) |
| 2. யோவான் (அப். 13 : 5) | 6. அந்தியோகியா (அப். 13 : 14, 44) |
| 3. பாப்போ, பர்யேசு (அப். 13 : 6) | 7. பொறாமை, எதிரிடையாக (அப். 13 : 45) |
| 4. செர்கியுபவுல் (அப். 13 : 7, 8) | 8. நித்திய ஜீவன் (அப். 13 : 48) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. பவுலையும், பர்னபாவையும் ஊழியத்துக்காக பிரித்தெடுக்கும்படி கூறியது யார்?
   பரிசுத்த ஆவியானவர் *(அப். 13 : 2)*

2. பர்யேசு என்பவன் யார்?
மாயவித்தைக்காரன் *(அப். 13 : 6)*

3. செர்கியு பவுல் என்பவன் யார்?
அதிபதி . *(அப். 13 : 7)*

4. வேத வசனத்தைக் கேட்டு சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தியவர்கள் யார்?
புறஜாதிகள் *(அப். 13 : 48)*

**V** *யார் யாரிடம் கூறியது* : (2 Marks)

1. **a.**"கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?" (அப். 13 : 10)
**b.**"கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது". (அப். 13 : 11)
**c.**"சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்". (அப். 13 : 11)

யார் : பவுல்
யாரிடம் : பர்யேசு என்கிற எலிமாவிடம்

2. **a.** "முதலாவது உங்களுக்கே தேவ வசனத்தைச் சொல்ல வேண்டியதாயிற்று"
**b.** "இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" (அப். 13 : 46)
யார் : பவுலும், பர்னபாவும்
யாரிடம் : யூதர்களிடம்

**V1** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* :

1. பவுலும், பர்னபாவும் சாலமி பட்டணத்தில் செய்தது என்ன? அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தது யார்?
பவுலும் பர்னபாவும், சாலமி பட்டணத்திலிருந்த யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவான் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான் (அப். 13 : 5).

2. பர்னபாவையும், பவுலையும் சந்தித்து, தேவ வசனத்தை கேட்க ஆவலாயிருந்த அதிபதி யார்? அந்த அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பி விடும்படி வகை தேடியது யார்?
பாப்போ பட்டணத்தின் அதிபதியாகிய செர்கியுபவுல் பர்னபாவையும், பவுலையும் சந்தித்து தேவ வசனத்தை கேட்க ஆவலாயிருந்தான். மாயவித்தைக்காரனாகிய பர்யேசு என்பவன் அந்த அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பிவிடும்படி வகை தேடினான். (அப். 13:6,7).

3. அந்தியோகியா பட்டணத்தில் தங்களைப் பின்பற்றினவர்களுக்கு பவுலும், பர்னபாவும் கொடுத்த புத்திமதி என்ன?
பவுலும், பர்னபாவும் அந்தியோகியா பட்டணத்தில் தங்களைப் பின்பற்றினவர்களுக்கு தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி புத்தி சொன்னார்கள் (அப். 13:43).

4. அந்தியோகியா பட்டணத்தில் தேவ வசனத்தை கேட்ட ஜனக்கூட்டங்களைக் கண்ட யூதர்கள் என்ன செய்தார்கள்?
யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாயப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள் (அப். 13 : 45).

5. "இதோ புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்று பவுலும், பர்னபாவும் யாரிடம் கூறினார்கள்? ஏன்?
பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் உள்ள யூதர்களிடம் நீங்கள் வசனத்தைத் தள்ளி நித்திய ஜீவனுக்கு உங்களை அபாத்திரமாகத் தீர்த்துக் கொள்கிறபடியினால், இதோ புறஜாதியாரிடத்தில் போகிறோம் என்றார்கள் (அப். 13 : 46).

6. அந்தியோகியாவிலுள்ள யூதர்கள் யாரை ஏவி விட்டு பவுலையும், பர்னபாவையும் துன்பப்படுத்தி தங்கள் எல்லைகளுக்கு புறம்பாகத் துரத்திவிட்டார்கள்?
அந்தியோகுயாவிலுள்ள யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் ஏவி விட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள் (அப். 13 : 50).

## VI1 *சுருக்கமான விடையளி:* (5 Marks)

1. அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தவர்கள் யார்? அவர்கள் உபவாசித்துக் கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் என்ன திருவுளம் பற்றினார்?

அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும் சிரேனே ஊரானாகிய லூகியும் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள் (அப். 13 :1).

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசிதது்க்கொண்டிருந்தபோது பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். (அப். 13 :2).

2. பாப்போ பட்டணத்து அதிபதியாகிய செர்கியுபவுலை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடிய மாயவித்தைக்காரனாகிய பர்யேசுவை பவுல் எவ்வாறு கடிந்து கொண்டார்?

பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து, எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது. சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்று கடிந்து கொண்டான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (அப். 13 : 9-11).

3. அந்தியோகியாவில் யூதர்கள் பொறாமையினால் பவுலையும் பர்னபாவையும் விரோதித்துத் தூஷத்தபோது பவுலும் பர்னபாவும் என்ன கூறினார்கள்? அதைக்கேட்ட புறஜாதியினர் என்ன செய்தனர்?

யூதர்கள் பொறாமையினால் பவுலையும், பர்னபாவையும் விரோதித்துத் தூஷித்தபோது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி, “முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டிதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புற ஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம்’ என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டு சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள் (அப்.13:46 - 49). கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

## VII1 *விரிவான விடையளி :*

1. பாப்போ பட்டணத்தில் பவுலும் பர்னபாவும் செய்த ஊழியத்தை விவரித்து எழுது.

(அல்லது)

பாப்போ பட்டணத்தின் அதிபதியாகிய செர்கியுபவுல் கர்த்தருடைய உபதேசத்தை விசுவாசிப்பதற்கு ஏதவாயிருந்த சம்பவத்தை விவரி.

பவுலும், பர்னபாவும் பாப்போ பட்டணத்திற்கு வந்தபோது, பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும், கள்ளத்தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டார்கள். அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும அதிபதியுடன் இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து அவர்களிடத்தில் தேவ வசனத்தைக் கேட்க ஆசையாய் இருந்தான்.

மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி அவர்களோடு எதிர்த்து நின்றான். அப்போது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்போதே கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது. சிலகாலம் சூரியனைக் காணாமல், நீ குருடனாய் இருப்பாய் என்றவுடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது. அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். அப்போது அதிபதி சம்பவித்ததைக்கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான் (அப். 13 : 6 - 12).

**2.** பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் பவுலும் பர்னபாவும் செய்த ஊழியத்தை விவரித்து எழுது.

பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் ஜெப ஆலயத்தலைவர்களின் வேண்டுகோளின்படி ஓய்வு நாளில் பவுலும் பர்னபாவும் ஜெப ஆலயத்தில் பிரசங்கம் செய்தனர். அவர்கள் யூதருடைய ஜெப ஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வு நாளில் இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்.

யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னான். அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சக்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடி வந்தார்கள்.

அப்போது யூதர்கள் ஜனக்கூட்டங்களைக்கண்டு பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி. விரோதித்துத் தூஷித்தார்கள். அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி : முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத்தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.

புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

யூதர்கள் பக்தியும் கனமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள் (அப். 13 : 42 - 50).

**********

வகுப்பு : 7

பாடம்-19

# பரி. பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (பகுதி II)

(அப். அதிகாரம் 13: 51, 52; அதி 14)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

**11**கொரிந்தியர் 4: 16, 17

ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

மேலும் காணப்படுகிறவைகளையல்ல; காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

**II** *பொருத்துக :* (1 Mark)

1. லீஸ்திரா - சப்பாணி (அப். 14 : 8)
2. பர்னபா - யூப்பித்தர் (அப். 14 : 12)
3. பவுல் - மெர்க்கூரி (அப். 14 : 12)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. இக்கோனியா பட்டணத்திலே பவுலும், பர்னபாவும் பிரசங்கித்தபோது திரளான __________ , __________ ஜனங்கள் விசுவாசித்தார்கள்.

2. கர்த்தர் தமது __________ வசனத்திற்கு __________ ஆக அடையாளங்களும், அற்புதங்களும், பவுல் பர்னபா என்பவர்களின் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்.

3. பவுலும், பர்னபாவும் லிக்கவோனியா நாட்டிலுள்ள __________ , __________ பட்டணங்களில் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணினார்கள்.

4. பவுல் சப்பாணியை குணப்படுத்தியதை ஜனங்கள் கண்டு __________ மனுஷரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்றார்கள்.

5. பவுலும், பர்னபாவும் நாம் அநேக __________ வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சீஷர்களுக்குச் சொன்னார்கள்.

**விடைகள்**

1. யூத, கிரேக்க (அப். 14 : 1)
2. கிருபையுள்ள, சாட்சி (அப். 14 : 3)
3. லீஸ்திரா, தெர்பை (அப். 14 : 6)
4. தேவர்கள் (அப். 14 : 11)
5. உபத்திரவங்களின் (அப். 14 : 22)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (1 Mark)

1. எந்தப் பட்டணத்தில் தன் தாயின் வயிற்றில் பிறந்தது முதல் சப்பாணியாயிருந்தவனை பவுல் குணமாக்கினார்?
   லீஸ்திரா *(அப். 14 : 8)*

2. லீஸ்திராவில் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் யாருக்கு உண்டென்று பவுல் கண்டான்?
   சப்பாணிக்கு *(அப். 14 : 9)*

3. பவுல் சப்பாணியை குணமாக்கியதை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று எந்த பாஷையிலே சத்தமிட்டார்கள்?
   லிக்கவோனியா *(அப். 14 : 11)*

4. யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும், பூமாலைகளையும் கொண்டுவந்து ஜனங்ளோடேகூட யாருக்கு பலியிட மனதாயிருந்தார்கள்?
பவுல், பர்னபா *(அப். 14 : 13)*

5. லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியாவிலுள்ள சீஷருடைய மனதை பவுல் திடப்படுத்தி, எதிலே நிலைத்திருக்கும்படிக்கு அவர்களுக்கு புத்திச் சொன்னான்?
விசுவாசத்திலே *(அப். 14 : 22)*

**V** <u>*யார் யாரிடம் கூறியது*</u> : (2 Marks)

1. "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்" (அப். 14 : 10)
யார் : பவுல்
யாரிடம் : தாயின் வயிற்றில் பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்தவனிடம்

2. "தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" (அப். 14 : 11).
யார் : லீஸ்திராவின் ஜனங்கள்
யாரிடம் : தங்களுக்குள்

3. "மனுஷரே ஏன் இப்படிச் செய்கிறீர்கள், நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே " (அப். 14 : 15).
யார் : அப்போஸ்தலராகிய பர்னபாவும், பவுலும்
யாரிடம் : யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி மற்றும் ஜனங்களிடம்

**V1** <u>*ஓரிரு வாக்கியங்களில் விடையளி*</u> :

1. அந்தியோகியாவில், யூதர்கள் பவுலையும், பர்னபாவையும் துரத்திவிட்டபோது அவர்கள் எந்தப் பட்டணத்துக்குப் போனார்கள்? அவர்களைக் கண்ட சீஷர்கள் என்ன செய்தார்கள்?
யூதர்களால் துரத்திவிடப்பட்ட பவுலும், பர்னபாவும் இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள். அவர்களைக் கண்ட சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் (அப். 13 : 51, 52).

2. இக்கோனியா பட்டணத்து ஜெபஆலயத்தில் பவுலும் பர்னபாவும் யார் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தனர்?
யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாக பவுலும் பர்னபாவும் பிரசங்கித்தனர் (அப். 14 : 1).

3. இக்கோனியாவில் பவுலும் பர்னபாவும் பிரசங்கித்த வார்த்தைகளை விசுவாசியாத யூதர்கள் என்ன செய்தார்கள்?
இக்கோனியாவில் பவுலும் பர்னபாவும் பிரசங்கித்த வார்த்தைகளை விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள் (அப். 14 : 2).

4. பவுல், பர்னபா எந்தப் பட்டணத்தில் அநேக நாள் தங்கியிருந்து வசனத்தைத் தைரியமாய் போதித்தார்கள்? அங்கு கர்த்தர் அவர்களுக்கு எதை அநுக்கிரகம் பண்ணினார்?
பவுல், பர்னபா இக்கோனியா பட்டணத்தில் அநேக நாள் தங்கியிருந்து தைரியமாய் போதித்தார்கள்.
கர்த்தர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் பவுல் பர்னபா கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார் (அப். 14:13).

5. லிக்கவோனியாவிலுள்ள எந்த இரு பட்டணங்களுக்கு பவுலும், பர்னபாவும் ஓடிப்போயினர்? ஏன்?
பவுலும், பர்னபாவும் லிக்கவோனியாவிலுள்ள லீஸ்திரா, தெர்பை பட்டணங்களுக்கு ஓடிப்போயினர்.

பவுலையும் பர்னபாவையும் அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுவதை அறிந்து, அவர்கள் ஓடிப்போயினர் (அப். 14 : 5, 6).

6. லீஸ்திராவில் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்தவனிடம் பவுல் எதைக்கண்டு அவனை குணமாக்கினார்?

லீஸ்திராவிலுள்ள சப்பாணியிடம் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று கண்டு அவனை குணமாக்கினார் (அப். 14 : 8 - 10),

7. லீஸ்திராவில் ஜனங்கள் பவுலை யார் என்று சொன்னார்கள்? ஏன்?
பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால், ஜனங்கள் அவனை மெர்க்கூரி என்று சொன்னார்கள் (அப். 14 : 12).

8. லீஸ்திராவில் பலியிட வந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி மற்றும் ஜனங்கள் யாரிடம் மனந்திரும்ப வேண்டுமென்று பவுலும், பர்னபாவும் பிரசங்கித்தார்கள்?
வீணான தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று பவுலும் பர்னபாவும் யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி மற்றும் ஜனங்களுக்கு பிரசங்கித்தார்கள் (அப். 14 : 15).

9. அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலுமிருந்து லீஸ்திராவிற்கு வந்த சில யூதர்கள் என்ன செய்தார்கள்?
அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலுமிருந்து வந்த சில யூதர்கள் ஜனங்களுக்கு போதனை செய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனை பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போனார்கள் (அப். 14 : 19).

10. லீஸ்திராவில் கல்லெறியப்பட்டு, மரித்துப்போனானென்று எண்ணி பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டுபோகப்பட்ட பவுலுக்கு என்ன சம்பவித்தது?
மரித்துக்போனானென்று எண்ணி பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போகப்பட்ட பவுலை சீஷர்கள் சூழ்ந்து நிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான் (அப். 14 : 19, 20).

11. தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு அந்தியோகியாவுக்கு திரும்பிய பவுலும், பர்னபாவும் ஏன் சபையைக் கூடி வரச்செய்தனர்?
பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவில் சபையைக் கூடி வரச்செய்து, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்தனர் (அப். 14 : 27).

## VI1 <u>*சுருக்கமான விடையளி:*</u> (5 Marks)

1. பவுல் லீஸ்திராவிலே சப்பாணியை எவ்வாறு குணமாக்கினார்?
லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமால் கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு, நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். இவ்வாறு பவுல் சப்பாணியை குணமாக்கினார் (அப். 14 : 8 - 10).

2. பவுல் லீஸ்திராவிலே சப்பாணியைக் குணமாக்கினதைக் கண்ட ஜனங்களும் யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரியும் என்ன செய்தார்கள்?
பவுல் சப்பாணியை குணமாக்கியதைக் கண்ட ஜனங்கள், தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி. பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுலை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்.
அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும், வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடேகூட பவுலுக்கும் பர்னபாவுக்கும் பலியிட மனதாயிருந்தான் (அப். 14 : 11 - 13).

3. 'ஜீவனுள்ள தேவன் தம்மைக் குறித்த சாட்சியை' எவ்வாறு விளங்கப்பண்ணுகிறார் என்று பவுலும் பர்னபாவும் லீஸ்திராவின் ஜனங்களிடம் கூறினார்கள்?
நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, கர்த்தர் தம்மைக் குறித்த சாட்சியை விளங்கப்பண்ணுகிறார் என்று பவுலும் பர்னபாவும் லீஸ்திராவின் ஜனங்களிடம் கூறினார்கள் (அப். 14 : 17).

4. பவுலும் பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியாவிலிருந்த சீஷருக்கு என்ன புத்திமதி கூறினார்கள்? சபையிலே என்ன செய்தார்கள்?

பவுலும் பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியாவிலிருந்த சீஷருடைய மனதை திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாகத் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

அந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (அப். 14 : 21 - 23).

## VII1 *விரிவான விடையளி :*

1. தங்களைத் தேவர்கள் என்று கருதி பலியிட மனதாயிருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரியையும் ஜனங்களையும் அப்போஸ்தலராகிய பவுலும் பர்னபாவும் எவ்வாறு பலியிடாதபடி அமர்த்தினார்கள்?

அப்போஸ்தலராகிய பவுலும் பர்னபாவும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்: மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே. நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்,

சென்ற காலங்களில் கர்த்தர் சகல ஜனங்களை தங்கள் தங்கள் வழிகளில் நடக்கவிட்டிருந்தும், நன்மை செய்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாயத் தம்மைக் குறித்த சாட்சியை விளங்கப்பண்ணாதிருந்ததில்லை என்றார்கள் (அப். 14 : 14 - 18).

இவ்வாறு சொல்லி ஜனங்கள் தங்களுக்கு பலியிடாதபடி அமர்த்தினார்கள்.

## 1X *போதனை:* (2 ½ Marks)

நாம் கர்த்தர் நிமித்தம் துன்பப்படுத்தப்படும்போது நம் ஜீவனை அருமையாக எண்ணாமல், அதைச் சந்தோஷமாய் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**********

வகுப்பு : 7

பாடம்-20

# ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

(அப். 18:1-3,18,19,24-26 ; ரோமர் 16:3-5; I கொரி. 16:19)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

Iதெசலோனிக்கேயர் 2 : 8

"நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமில்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்."

ரோமர் 15 : 4

தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு ,முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது,

சங்கீதம் 119 : 105

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

**II** *பொருத்துக :* (1 Mark)

**1.** ஆக்கில்லா - பொந்து தேசத்தான் (அப். 18 : 2)
**2.** ஆக்கில்லா - யூதன் (அப். 18 : 2)
**3.** ஆக்கில்லா - கூடாரம் பண்ணுகிற தொழிலாளி (அப். 18 : 3)
**4.** பிரிஸ்கில்லாள் - ஆக்கில்லாவின் மனைவி (அப். 18 : 2)
**5.** அப்பொல்லோ - அலெக்சந்திரியா பட்டணத்தான் (அப். 18 : 24)
**6.** அப்பொல்லோ - சாதுரியவான் (அப். 18 : 24)
**7.** அப்பொல்லோ - வேதாகமங்களில் வல்லவன் (அப். 18 : 24)
**8.** அப்பொல்லோ - யூதன் (அப். 18 : 24)
**9.** அப்பொல்லோ - ஆவியில் அனலுள்ளவன் (அப். 18 : 25)
**10.** எப்பனெத் - பவுலுக்குப் பிரியமானவன் (ரோ. 16 : 5)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** யூதரெல்லாரும் ரோமாபுரியைவிட்டுப் போகும்படி __________ கட்டளையிட்டான்.
**2.** ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இத்தாலியாவிலிருந்து __________ பட்டணத்துக்கு வந்தார்கள்.
**3.** ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் __________ பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்.
**4.** __________ கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்திருந்தான்.
**5.** ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் என் __________பவுல் அழைத்தார்.
**6.** __________ , __________ பவுலின் பிரயாணத்துக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்.
**7.** அப்பொல்லோ __________ பட்டணத்தில் பிறந்தவன்.

விடைகள்

1. கிலவுதியுராயன் (அப். 18 : 2)
2. கொரிந்து (அப். 18 : 1-2)
3. கூடாரம் (அப். 18 : 3)
4. அப்பொல்லோ (அப். 18 : 25)
5. உடன் வேலையாட்கள் (ரோ. 16 : 3)
6. ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் (ரோ.16 : 4)
7. அலெக்சந்திரியா (அப். 18 : 24)

**IV** ***ஒரே வார்த்தையில் விடை எழுது ::*** (1 Mark)

1. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் பவுலோடு எந்தப் பட்டணத்திற்குப் போனார்கள்?
   எபேசு *(அப். 18 : 18, 19)*

2. எபேசு பட்டணத்தில், ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணினவன் யார்?
   அப்பொல்லோ . *(அப். 18 : 25)*

3. அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்துக் காண்பித்தவர்கள் யார்?
   ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் *(அப். 18 : 26)*

4. அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலன் யார்?
   எப்பனெத் *(ரோ. 16 : 5)*

5. பரிசுத்தவான்கள் கூடிவருவதற்காக தங்கள் வீட்டை திறந்து கொடுத்தவர்கள் யார்?
   ஆக்கில்லாவும் பரிஸ்கில்லாளும் *(ரோ. 16 : 5)*

**V** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** :

1. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இத்தாலியாவிலிருந்து ஏன் கொரிந்து பட்டணத்திற்கு வந்தார்கள்?
   யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இத்தாலியாவிலிருந்து கொரிந்து பட்டணத்துக்கு வந்தார்கள் (அப். 18 : 2).

2. பவுல் ஆக்கில்லா பிரிஸ்கில்லாளுடன் தங்கி வேலைசெய்யக் காரணம் என்ன?
   ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள் பவுலும் தான் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துவந்தான் (அப். 18 : 3).

3. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்பொல்லோவை ஏன் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள்?
   அப்பொல்லோ ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக்கேட்டு, அவனைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டார்கள் (அப். 18 : 26).

4. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் வேதவாக்கியங்களிலும் அப்போஸ்தலருடைய உபதேசங்கிளிலும் தேறினவர்களாயிருந்தனர் என்று எவ்வாறு கூறலாம்?
   ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ஜெபஆலயத்தில் அப்பொல்லோ தைரியமாயப் பேசுகிறதைக்கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். இதிலிருந்து அவர்கள் வேதவாக்கியங்களிலும் அப்போஸ்தலருடைய உபதேசங்களிலும் தேறினவர்களாயிருந்தனர் என்று கூறலாம் (அப். 18 : 26).

5. பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் ஆக்கில்லா பிரிஸ்கில்லாவை எவ்வாறு குறிப்பிடுகிறார்?
   பவுல் அவர்களை ‘கிறிஸ்துவுக்குள் என் உடன்வேலையாட்கள்’ என்றும் ‘என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்’ என்றும் குறிப்பிடுகிறார் (ரோ. 16 : 3,4).

6. ஆக்கில்லா பிரிஸ்கில்லாளுக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருந்தவர்கள் யார்?
   பவுலும், புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் அவர்களுக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருந்தார்கள் (ரோ. 16 : 4).

7. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்போஸ்தல ஊழியத்திற்கு எவ்வாறு உதவியாயிருந்தார்கள்?

பரிசுத்தவான்கள் கூடி வருவதற்காகத் தங்கள் வீட்டை உபயோகிக்கும்படி கொடுத்து, ஊழியத்திற்கு உதவியாயிருந்தார்கள் (ரோ. 16 : 5; Iகொரி, 16 : 19) .

**VI** <u>*சுருக்கமான விடையளி:*</u> (5 Marks)

**1.** ‘அப்பொல்லோ’ - சிறு குறிப்பு வரைக.

‘அப்பொல்லோ’ என்பவன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்த ஒரு யூதன். அவன் சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்தான். அவன் ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்வைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டு வந்தான். அவன் ஜெபஆலயத்திலே தைரியமாய்ப் பேசுகிறவனாயிருந்தான் (அப். 18 : 24 - 26).

**VII** <u>*விரிவான விடையளி :*</u>

**1.** ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவ அன்போடும், பக்தி வைராக்கியத்தோடும் ஜீவித்தார்கள் என்று ஏன் கூறப்படுகிறது?

(அல்லது)

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கர்த்தருடைய ஊழியத்திற்காகப் பட்ட பிரயாசங்களை எழுது.

i). கர்த்தருடைய ஊழியக்காரனாகிய பவுலை தங்களோடு தங்கவைத்துக் கொண்டவர்கள் (அப். 18 : 3).

ii). அவர்கள் பவுலுடனேகூட ஊழியத்தினிமித்தம் எபேசு பட்டணத்துக்குப் போனார்கள். (அப். 18 : 18).

iii). ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணின அப்பொல்லோவை தங்களுடன் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப். 18 : 26).

iv). கிறிஸ்து இயேசுவுக்குள் பவுலின் உடன் வேலையாட்களாய் இருந்தாகள் (ரோ. 16 : 3)

v). பவுலின் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள் (ரோ. 16 : 4).

vi). பரிசுத்தவான்கள் கூடி வருவதற்காக தங்கள் வீட்டை உபயோகிக்கும்படி கொடுத்தார்கள் (ரோ. 16 : 5).

**VIII** <u>*போதனை:*</u> ( 2 ½ Marks)

நாமுங்கூட கர்த்தரை நேசித்து, தேவ அன்போடும் வைராக்கியத்தோடும் அவருடைய ஊழியத்தின முன்னேற்றத்திற்காகப் பிரயாசப்பட வேண்டும்.நாம் அப்போஸ்தல உபதேசங்களில் தேறினவர்களாயிருந்து மற்றவர்களுக்கும் அதைப் போதிக்க வேண்டும்.

**************

# Lesson 1

# (Job the upright Man – Part I)





# Lesson 2
# (Job the upright Man – Part II)





# Lesson 3

# (The disobedient Man of God)



# Lesson 4
# (Elijah Being Fed)







© EIKONBIBLEART.COM LICENCED TO:


"And Elijah took the child, and brought him down out of the chamber into the house, and delivered him unto his mother: and Elijah said, See, thy son liveth" (1K. 17: 23)

Elijah Fed By Ravens & Helps Widow

1. What brought Elijah food?



2. Where was Elijah when he was fed by the ravens?



3. What did Elijah ask the widow to make for him?



4. Did the widow have enough flour and oil to make bread?




5. What happened to the widow's son?




http://kidsbibledebjackson.blogspot.com/ ~ Graphics © Microsoft

Elisha and the Widow's Oil

1. What did the creditors want to take as payment?




2. What was the only thing she had in her house?




3. What did Elisha tell the widow to borrow so she would have money?



4. What did God give to the woman that helped Elisha?



5. What happened to her son?



# Lesson 5
# (Elijah on Mt.Carmel)





# Lesson 6

# (King ahab and Naboth)









Elijah & Naboth's Vineyard

1. What did Naboth have that King Ahab wanted?

2. How did King Ahab feel about Naboth telling him no?



3. Who helped King Ahab get it?



4. How did King Ahab get the vineyard?



5. Did God like what King Ahab and Jezebel did to get the vineyard?

# Lesson 7
# (Elijah's Mantle Falls on Elisha)







# Lesson 8
# (The Shunamite)





# Lesson 9

# (Nahaman's Leprosy Healed)







# Lesson 10
# (More Miracles of Elisha)





# Lesson 11
# (The reformations of King Hezekiah)





# Lesson 12
# (Hezekiah's Sickness and healing)







# Lesson 13

## (The Mission of Philip, the Evangelist)





# Lesson 14

# (Saul's Conversion)





# Lesson 15

# (Miracles Performed by Peter)





# Lesson 16

# (The salvation of Cornelius' household)





# Lesson 17

# (Peter delivered from Prison)





# Lesson 18 & 19

# (St.Pauls' first missionary journey)



# Lesson 20

# (Aquila & Priscilla)

